இயேசுவே வாரும்

தொடர்பு முகவரி
சகோ. காலேப் யோசுவா,
# 11. திருமால் நகர், 2வது குறுக்குத் தெரு,
பூவிருந்தவல்லி, சென்னை-600 056.

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22:20

ஒரேப்
திருவைகுண்டம் 628 601
தூத்துக்குடி மாவட்டம்.

# வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய இயேசு கிறிஸ்துவின் தூதன் திஸ்பியனாகிய எலியா தீர்க்கதரிசி

வெளி.19:10, 22: 8 & 9. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல், பாகம் I, பக்கம் 29, பத்தி 112&113.

1. தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியத்தை அறியவும், வேதவாக்கியங்களைப் புரிந்துக் கொள்ளவும், இக்காலத்துக்குரியச் செய்தியை அடையாளம் கண்டுகொள்ளவும் பிரகாசமுள்ள மனக்கண்களைப் பெற்றவர்களே, இந்தப் புதிய ஆண்டு 2004ல் உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.

2. கிறிஸ்துவுக்குப் பின் 2004வது ஆண்டுக்குள் பிரவேசிக்கும் நீங்கள், உங்களை வழுவாதபடி காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ள தேவனுடைய அன்பினாலே உங்களை காத்துக்கொண்டு; இனி குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்; அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளருகிறவர்களாயிருக்கும்படியாக உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், ஞானத்தையும், இச்சையடக்கத்தையும், பொறுமையையும், தேவபக்தியையும், சகோதர சிநேகத்தையும், அன்பையும் கூட்டி வழங்கி; இவைகளில் பெருகி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிய அறிவில் வீணரும், கனியற்றவர்களுமாயிராமல், நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்.

3. இந்தப் புதிய ஆண்டில் கர்த்தர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதத்தினாலும் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்களுக்கு இரக்கமும், சமாதானமும் அன்பும் பெருகக்கடவது.

4. இந்தப் புதிய ஆண்டின் முதற்செய்தித்தொகுப்பு பற்பல போதனைகளால் குழம்பியிருக்கும் உங்கள் ஆத்துமாவுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருக்குமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். இந்தச் செய்தித் தொகுப்பின் மூலம் நான் உங்கள் மத்தியில் ஒரு வித்தியாசமுள்ளவனாக இருக்க விரும்பவில்லை. ஆனால் தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் உண்மையுள்ளவனாயிருக்க விரும்புகிறேன். என் இருதயத்தில் உறுதிக் கொண்டுள்ளதை வெளியரங்கமாகப் பேசாமல், எழுதாமல் போனால் நான் தேவனுக்கு துரோகியாகவும், உங்கள் மத்தியில் ஒரு மாய்மாலக்காரனாகவும் இருப்பேன். ஒருகால் இதன் விளைவாக நான் சில சகோதரர்களை இழக்கக்கூடும். சிலரை ஆதாயப்படுத்தக் கூடும். ஆனாலும் யார் என்ன நினைத்தாலும், யார் என்ன உபதேசித்தாலும், யார் என்ன போதித்தாலும், யார் என்ன கூறினாலும் அது தேவனுடைய வார்த்தையின்படி, இக்காலத்திற்குரிய செய்தியின்படி இல்லையென்றால் அது தவறு என்பதை முதலில் நீங்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எவ்வளவு தான் மெல்லியதாக ரொட்டியைத் துண்டு போட்டாலும், அதற்கு இரு பக்கங்கள் உண்டு. அவர்கள் இருவருமே, தங்கள் கொள்கை, உபதேசம், போதனை சரி என்று விவாதிக்க குறிப்புகள் உண்டு. ஆனால் காரியம் என்னவென்றால் சத்தியம் எங்கே உள்ளது? அதற்கு ஒரே ஒரு வழியுண்டு. அது தேவனுடைய ஆவியினால் வழி நடத்தப்படுவது. தராசில் ஒரு தட்டில் தேவனுடைய வார்த்தை மற்றும் இக்காலத்திற்குரிய செய்தி, மறு தட்டில் உபதேசம். எந்த உபதேசமானது இரு தட்டும் சரிசமமாக இருக்கும்படி கொண்டு வருகிறதோ அதுவே சரியான உபதேசம். எல்லா உபதேசங்களும் தட்டை சரிசமமாகக் கொண்டு வராது. ஒன்றே ஒன்றுதான் கொண்டு வரும் அதுவே சத்தியம். வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய அந்தத் தூதன் யார் என்பதை வேதப் பிரகாரமான கேள்வியாயிருக்குமானால், அதற்கு வேதாகமமே நிச்சயமாகப் பதில் அளிக்கவேண்டும். அடுத்து இக்காலத்திற்குரிய செய்தி பதிலளிக்க வேண்டும். வேறு யாரும் இதற்கு பதிலளிக்க முடியாது.

5. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதலை அதாவது கிறிஸ்து தம்மை அவருடைய சபையில் வெளிப்படுத்துதலையும், மேலும் சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளையும் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததை, இயேசு கிறிஸ்து தம்முடைய தூதனை அனுப்பி, அதை யோவானுக்கு வெளிப்படுத்தினார். வெளி.1:1. இயேசு, யோவானை கீழிருந்து மேலே எடுத்துக் கொண்டு வந்து, முழுச்சம்பவங்களின் முன்காணலைக் காண அனுமதித்தார். அவன் கர்த்தருடைய வருகையின் ஒத்திகையையும், சபையையும் மற்றும் அனைத்து சம்பவங்களின் நியமத்தையும் முன்கூட்டியேக் கண்டான். (இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல், பாகம் 2, பக்கம் 1002, பத்தி 72) அவர் யோவானை பரலோகத்திற்குக் கொண்டு வந்து, அவனுக்கு அனைத்தையும் முன்காணலாகக் காண்பித்தார். மகிமை ! அவன் தானே வரப்போகிற காட்சிகளின் முன்காட்சியைக் கண்டான். அவன் தானே முழு சபைக்காலங்கள் நெடுகிலும் பூமியில் ஜீவிக்கிறவன்போல் இருந்து. அவை சம்பவிக்கிறதை எல்லாம், கர்த்தருடைய வருகையையும், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதின் சம்பவங்களையும் முன்கூட்டியே பார்த்தான். ( மேற்கூறிய செய்தி, பக்கம் 963, பத்தி 144)

6. ஏதோ அக்காலங்களில் அவன் வாழ்ந்ததுபோல் அவைகளைக் கண்டான்... அவனுக்கு நடந்தவைகளையும், நடப்பவைகளையும், நடக்கயிருப்பவைகளையும் காண்பித்தார். அவர் அவனுக்குச் சபைக்காலங்களையும், யூதர்களுடைய வருகையையும், வாதைகள் ஊற்றுதலையும், எடுத்துக் கொள்ளப்படுதலையும், மீண்டும் உள்ள வருகையையும், ஆயிரம் வருட அரசாட்சியையும், அவரது இரட்சிக்கப்பட்டவர்களின் நித்திய வீட்டையும் காண்பித்தார். அவைகள் சம்பவிக்கிற காலங்களில் அவன் வாழ்ந்ததுபோல இருந்தது, அவைகள் சம்பவிக்கிறதைக் கண்டான். அவனை உயரத்தூக்கி எடுத்து, அவர் எடுத்திருக்கிற படக்காட்சியை அவனுக்கு முன்கூட்டியே முன்காணலாக - ஒத்திகையாகக் காண்பித்தார். (மேற்கூறிய செய்தி, பக்கம் 964, பத்தி 146) அதாவது ஒரு திரைப்படத்தையோ, அல்லது ஒரு நாடகத்தையோ, யாரும் காணும்படியாக காண்பிப்பதற்கு முன்பாக, அது முன்கூட்டியே ஒரு சிலர் மட்டும் பார்த்துக் கொள்வதற்காக முன்காணலாகக் காட்டப்படும். அல்லது ஒத்திகையாக நடத்திக் காண்பிக்கப்படும். இவ்விதமாக யோவான் என்ன நடக்கயிருக்குமோ, பூமியில் அக்காலம் முதல் கர்த்தராகிய இயேசுவின் வருகை பரியந்தம் அப்படியே என்ன நடந்ததோ, நடக்கயிருக்குமோ அவைகளை ஒரு தரிசனத்தில் கண்டான். ஒரு தரிசனத்தில் அதை அவனுக்கு காண்பித்தார். (மேற்கூறிய செய்தி, பக்கம் 964, பத்தி 147) ஆக யோவான் வெளிப்படுத்தின விசேஷம் காட்சிகளைப் பிரத்தியட்சமாகக் காணவில்லை. மாறாக அனைத்தையும் தரிசனத்தில் கண்டான். அதாவது யோவான் ஆவிக்குள்ளாகி சத்தங்களைக் கேட்டான். காட்சிகளைக் கண்டான். அவைகளை ஒரு தூதன் அவனுக்குக் காண்பித்தான். (வெளி. 22: 8) இதை முதலில் நீங்கள் நன்கு மனதில் பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

7. யோவான் தான் கண்டவைகளையும் (கடந்த காலச் சம்பவங்கள் things past, the things which thou hast seen (Patmos vision) chapter 1:1-20), இருக்கிறவைகளையும் (நிகழ்காலச் சம்பவங்கள் the things present, the things which are (the existing church) Chapter 2 : 1 to 3 : 22), இவைகளுக்கு பின்பு சம்பவிக்க வேண்டியவைகளையும் (வருங்காலச் சம்பவங்கள் the things future, the things which shall be hereafter. Chapter 4 : 1 to 22 : 5.) தனக்குக் காண்பித்த அந்தத் தூதனை வணங்கும்படி இருமுறை அவன் பாதத்தில் விழுந்தான், வெளி.19:10, 22 : 8 & 9. இந்நாட்களில், இக்காலத்துக்குரியச் செய்தியில் உள்ள மக்கள் மத்தியில் இயேசு கிறிஸ்து அனுப்பிய இந்தத் தூதன் யார் என்பது ஒரு பெரிய சர்ச்சைக்குரியதாக இருந்து வருகிறது. ஒவ்வொருவரும் தங்களுக்கு விருப்பமான வழியில் செய்திக்கு அர்த்தம் உண்டாக்கிக் கொண்டு, அதன் அர்த்தம் அதுவாகிய இதுதான் என்கிறார்கள். ஆனால் தேவனுடைய வார்த்தை, இக்காலத்துக்குரியச் செய்தி சொன்னபடியே அதன் அர்த்தம் அமையவேண்டும். தன்னுடைய ஊழிய அழைப்பை உறுதிப்படுத்த முடியாதவர்கள் (2 பேது. 1:10) செய்தி புத்தகங்களைப் படித்து தியானித்ததின் மூலம் தாங்கள் பெற்றுள்ள அறிவைக்கொண்டு, தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் வியாக்கியானம் கொடுக்க ஆரம்பிப்பதுதான் இந்தப் பெரிய குழப்பத்திற்குக் காரணம். விசுவாசிகள் ஊழியக்காரர்களைப் பார்த்து நாங்கள் சொல்லுவதை நீர் கேளும் என்று சொல்லத் துணிந்து விட்டதே இந்த குழப்பத்திற்குக் காரணம். விசுவாசிகளுக்கும் ஊழியக்காரர்களுக்கும் வித்தியாசமே இல்லாமல் போய்விட்டது. இக்காலத்துச் செய்தியிலுள்ள விசுவாசிகள், கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியர்களை அடையாளம் கண்டு அவர்களை கனப்படுத்துவது கிடையாது. தேவ சித்தத்திற்குப் புறம்பாக அவருக்கென்று ஊழியம் செய்கிறவர்களே சபையில் கனத்தையும், மரியாதையையும் பெறுகிறார்கள். இது நல்லதன்று. இது சபையின் இன்றைய ஒரு பரிதாபமான நிலை.

8. வேத வாக்கியங்கள் தனிப்பட்ட எவராலும் வியாக்கியானம் செய்யப்படக் கூடாது, வேதாகமத்தை எழுதின பரிசுத்த ஆவி மாத்திரமே அதை விளக்க வேண்டும். அவ்வண்ணமாகவே இக்காலத்துக்குரியச் செய்தியையும் தனிப்பட்ட எவராலும் வியாக்கியானம் செய்யப்படக் கூடாது, இன்று கைகளில் செய்திப் புத்தகங்களை வைத்துக்கொண்டு பலர் வியாக்கியானம் பண்ண ஆரம்பித்து விடுகிறார்கள், யார் தான் தீர்க்கதரிசியின் செய்தியை எடுத்து உபதேசிப்பது என்ற ஒழுங்கு இல்லாமல், அனைவரும் செய்தியைக் கொண்டு உபதேசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதுவும் இன்றைய பரிதாபமான நிலை. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஐந்து வகையான ஊழியக்காரர்களே இக்காலத்திற்குரிய செய்தியை எடுத்து உபதேசிக்கலாம், போதிக்கலாம், வியாக்கியானம் பண்ணலாம். விசுவாசிகளுக்கு எந்தவிதத்திலும் இந்த அதிகாரம் இல்லை.

9. எந்தவொரு மனிதனும் இந்த ஐந்து வகை ஊழியத்தில் தனக்கொரு பதவியைத் தேடிக்கொள்ளக் கூடாது. தேவன் மாத்திரமே தமது கிருபையினால் உங்களுக்குரிய நிலையில் உங்களை வைக்க வேண்டும். பாருங்கள், தாண் என்பதற்கு ஆடு மேய்ப்பவன் என்று பொருள். காத் என்பதற்கு கால்நடை வளர்ப்பவன் என்று பொருள். எப்பிராயீம் என்றால் தானியம் விளைவிக்கும் விவசாயி என்று பொருள். இன்றைய தொல்லை என்னவென்றால். காத் போன்று எப்பிராயீம் கால்நடை வளர்க்க விரும்புகிறான். தாணைப்போன்று காத் ஆடு மேய்க்க விரும்புகிறான். ஒருவன் மற்ற மனிதன் செய்யும் தொழிலையேச் செய்ய விரும்புகிறான். எல்லாரும் ஒரே தொழிலைச் செய்ய விரும்புகிறவர்களாகயிருக்கின்றனர். குழப்பம் எவ்விதம் உள்ளதென்று பாருங்கள். ஆதலால் நாம் எந்த நிலையும் அடைய முடியவில்லை. பாருங்கள் ஒருவன் நான்கு செய்திப் புத்தகங்களை படித்ததினால் அதை வைத்துக்கொண்டு அதற்கு வியாக்கியானம் கொடுக்க ஆரம்பித்து விடுகிறான். அண்ணனைப் பிரிந்து தம்பி தன் அண்ணன் கொடுத்த வியாகியானத்தையே கொடுக்கிறான். மச்சானைவிட்டுப் பிரிந்து மைத்துனன் மச்சான் கொடுத்த வியாக்கியானத்தையே கொடுக்கிறான். இவ்வாறாக இவர்கள் ஒருவரைப் பார்த்து மற்றொருவர் வியாக்கியானம் கொடுக்க ஆரம்பிப்பதுதான் குழப்பம். முடிவில் அண்ணன் அவமாய் போனான். அவனை பின்பற்றின தம்பியும், மைத்துனனும் மோசம் போனார்கள். தேவ சித்தத்திற்குப் புறம்பாக அநேகர் ஊழியம் செய்து வருவதுதான் நம் மத்தியிலுள்ள குழப்பத்திற்குக் காரணம்.

10. இதனால் விசுவாசிகள் மத்தியில், சபைகளில் பிளவுகள் அடிக்கடி ஏற்பட்டு வருவதைக் காண்கிறேன். உதாரணமாக பாருங்கள் பாஸ்டர் பி.எம்.ஏ.சாமிக்கும் எனக்கும் இந்தத் தூதன் நிமித்தமாக உண்டாக கருத்து

வேறுபாடு எங்களுக்குள் இருந்த ஐக்கியத்தைச் சீர்குலைத்துவிட்டது. சகோதர சிநேகத்தை போதிக்க வேண்டியவர் சகோதர வெறுப்பை வெளிப்படுத்தினார். பாருங்கள் வேதம் இவ்விதமாகக் கூறுகிறது. கடைசி காலங்களில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மத்தியில் மாத்திரமே அன்பு காணப்படும். மற்றொரு இடத்திலும் அன்பு காணப்படாது. அது சரியே. வேதம் அவ்விதமாகவே கூறுகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்கள் மத்தியில் மாத்திரமே அன்பு காணப்படும். (அவர் விசாரிக்கிறவறாயிருக்கிறார், நீ கவலை கொள்கிறாயா? பத்தி 56) வேதமும், செய்தியும் அன்பைக் குறித்து இப்படிக் கூற இவர் ஒரு மணவாட்டி தானா? இவருடைய தெரிந்துகொள்ளுதல் கேள்விக்குறியாக அல்லவாயிருக்கிறது? ஏனோ, இவருக்கு சகோ. எட் பிஸ்கல் மீதும், சகோ. டோனி ஆப்மா மீதும் அவ்வளவு பக்தி வைராக்கியம் எனத் தெரியவில்லை? ஆதாயமில்லாமல் செட்டியார் ஆத்தோடே போகமாட்டார் என்ற ஒரு பழமொழி நம் மத்தியில் உண்டு. ஆதலால், ஆதாயமே இவர்கள் பக்தி வைராக்கியத்திற்கு காரணம் என நினைக்கிறேன். சாமி என்ற அஞ்ஞானப் பெயரை இவர் என்று அகற்றி ஒரு கிறிஸ்தவப் பெயரை வைக்கிறாரோ, அன்றுதான் இவரது மனக்கண்கள் திறக்கப்படும்.

11.இன்னும் சில மேய்ப்பர்கள் பிரசங்கபீடத்தில் தேவனுக்கும் நித்தியஜீவனுக்கும் பிரதிநிதியாகயிருந்து கொண்டு, கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய மேய்ப்பனாக ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரன் என்று தங்களை அழைத்துக்கொண்டு, அந்த தூதன் லவோதிக்கேயா சபைத் தூதனும், தீர்க்கதரிசியுமாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் என்று தங்களுடைய உபதேசத்தை உறுதிப்படுத்த பிரசங்கபீடத்தை ஒரு அடி அடித்து அரசியல் மேடை பேச்சு பேசுகிறார்கள். ஜனங்கள் அதை நம்புகிறார்கள். அதற்கு அல்லேலூயா ! ஸ்தோத்திரம்! கூறுகிறார்கள். ஆனால் இது பிரன்காம் கிறிஸ்து ஆவியின் மற்றொரு வஞ்சிப்பு என்பதை உணராதிருக்கிறார்கள். ஒரு பொய்யைச் சொல். அதை இறுகப்பிடித்துக்கொள். உண்மையைக் குறித்து கவலைப்படாதே. அதைக் கண்டு கொள்ளாதே. ஆக அந்த பொய்யை ஜனங்களுக்கு திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டேயிரு. அவர்கள் அதை உண்மையென்றே ஏற்றுக்கொள்வார்கள். இந்தப் பொய் உபதேசமும் அப்படித்தான் உண்மையென நம்பப்பட்டு வருகிறது. செய்தியை அதிகம் படித்தவர்கள் கூட, வேதத்தை நன்கு அறிந்தவர்கள் கூட இந்தப் பொய்யை அதாவது யோவான் விழுந்து வணங்கிய தூதன், ஏழாம் சபைக்கால தூதனாகிய சகோ. வில்லியம் மாரியம் பிரன்காம் என்று விசுவாசிக்கிறார்கள். ஆனால் மணவாட்டி வஞ்சிக்கப்பட முடியாது, அது உண்மை.

12. யோவான் வணங்கிய தூதன் சகோ. பிரன்காம் என்ற உபதேசம் பிசாசினுடையது என்பதை ஆவிக்குரியவர்கள் நன்கு அறிவார்கள். ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்த, நீங்கள் அறியாத வேறே தேவனை (கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து) சேவிக்க உங்களை இரகசியமாய் ஏவி வரும் பேலியாள் மக்களின் தலைவனாகிய ஆனந்தவேல் என்பவர் இந்த உபதேசத்தை 1992ல் உபதேசிக்க ஆரம்பித்தார். ஆனால் இந்த உபதேசம் இதுவரை தலையெடுக்கவில்லை. நானும் இதுவரை இது பிரன்காம் கிறிஸ்து விசுவாசிகளின் உபதேசம், ஆதலால் இது அதிக சேதம் இனி விளைவிக்காது என நினைத்தேன். ஆனால் ஒரு நாள் யூதாஸ் தன் சுயரூபத்தை வெளிப்படுத்தியது போல, இந்தக் கடைசி நாட்களில் மறைந்திருந்த பல யூதாஸ்கள் தங்கள் சுயரூபத்தை வெளிப்படுத்தி வருவதால் இந்த உபதேசம் இந்நாட்களில் அதிகமாக பரவிவருகிறது. இந்நிலையில் நான் மவுனமாயிருக்க முடியாது. ஆதலால் இந்த உபதேசம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் சேதப்படுத்தாதபடிக்கு அதை எதிர்த்துப் போராட வேண்டியது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது.

13. நான் உங்களை அதிகமாக நேசிப்பதினால் அதை தடுத்து நிறுத்த முயற்சி செய்கிறேன். ஆதலால் தேவனுக்கும் எனக்கும் பிரியமானவர்களே, இந்நாட்களில் தேவனுக்குப் பயந்தவர்களையும், உண்யையுள்ளவர்களையும், பொருளாசையை வெறுக்கிறவர்களையும், தேவனுடைய வார்த்தையை கூட்டி, குறைக்காது அது உள்ளபடியே போதிக்கும் திறமையுள்ள மேய்ப்பர்களையும், ஊழியக்காரர்களையும் காண்பது மிக மிக அரிதாயிருக்கிறது.ஆதலால் நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எல்லாவற்றையும் சோதித்து அறிந்து நலமானதைப் பற்றி கொள்ளுங்கள். அவரிடமிருந்து பெற்ற அபிஷேகமானது எல்லாவற்றையும் குறித்து உங்களுக்குப் போதிப்பதாக. நான் இங்கு எழுதுகிற அனைத்தையும் தேவனுடைய வார்த்தையோடு, இக்காலத்துக்குரியச் செய்தியோடு நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்பதே எனது விருப்பம். நான் எழுதும் ஒவ்வொரு வார்த்தையையும் அவ்வண்ணமாகவே Voice of God Recordings, Chennai சோதித்துப் பார்க்கிறார்கள் என்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அவ்வண்ணமாகவே நீங்களும் ஒவ்வொருவரும் சோதித்துப் பார்க்க வேண்டும் என்பதே என் வேண்டுதலாய் இருக்கிறது. அன்று கர்த்தருடைய தாசனாகிய காலேப், யோசுவா வேறே ஆவியை உடையவர்களாயிருந்தார்கள். எண். 14:24. அவ்வண்ணமாகவே இங்கு அவருடைய தாசனாகிய உங்கள் சகோ. காலேப் யோசுவா உங்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான பாஸ்டர்கள் பெற்றிருக்கும் ஆவியை பெறாமல், வேறே ஆவியை உடையவனாயிருக்கிறான். அது உண்மை. உங்கள் மத்தியிலுள்ள பெரும்பான்மையான பாஸ்டர்களுக்கும் எனக்கும் ஒத்துப்போவதில்லை, ஒத்துப் போகவே போகாது.

14. பரிசுத்தஆவியின் வழிநடத்துதலின்படி இந்தத் தூதன் யார் என்பதை வேதவாக்கியங்களையும், இக்காலத்துக்குரியச் செய்தியையும் நன்கு ஆராய்ந்தபின் அது திஸ்பியனாகிய எலியா தீர்க்கதரிசி என்பதை தேவனுடைய வழிநடத்தலின்படி, இக் காலத்திற்குரிய செய்தியைக் கொண்டு உங்களுக்கு இந்தச் செய்தித் தொகுப்பை எழுதி உணர்த்துவது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்தியடைய கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்ட எனக்கு மிக்க அத்தியாவசியமாகக் கண்டது. தேவனுடைய வழிநடத்தல் என்பது, பரிசுத்த ஆவியினால் உறுதிப்படுத்தப்பட்ட இந்த மணி நேரத்திற்கான வார்த்தையைப் பின்பற்றுவதாகும். ஆழ்ந்து சிந்திக்கும் ஒரு மனிதனின் வடிகட்டி பரிசுத்த வேதாகமம் என்பதை மறந்து விடாதீர்கள். சத்தியத்தை அதிகமாக அறிய வேண்டுமென்று வாஞ்சை கொண்டுள்ளவர்களுக்கே இதை எழுதுகிறேன். எனக்கு அருமையான சகோதரர்கள் பலர் ஒரு சபையைச் சார்ந்து கொண்டு அது என்ன

போதிக்கிறதோ அதையே முற்றிலுமாக சார்ந்து கொண்டு ஜீவிக்க விரும்புகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்தச் செய்தித் தொகுப்பு நிச்சயமாக பிரயோஜனமாயிருக்காது.

15. இந்தத் தூதனைக் குறித்து ஏன் இத்தனைக் குழப்பம்? நீங்கள் வார்த்தையும், ஆவியும் பெற்று அதை ஒன்றாகப் பிசையவேண்டும். அப்பொழுது தான் அப்பம் கிடைக்கும். இன்று அநேகரிடம் வார்த்தையிருக்கிறது. ஆனால் ஆவியில்லை. சிலரிடம் ஆவியிருக்கிறது. ஆனால் வார்த்தையில்லை. ஆதலால் அப்பம் கிடைப்பது இல்லை. அநேகர் செய்தியைப் படிக்கிறார்கள். ஆனால் ஆவி அவர்களிடம் இல்லை. சிலர் ஆவியிருப்பது போல் நடிக்கிறார்கள். ஆனால் அவர்கள் இக்காலத்துக்குரிய செய்தியைப் புறக்கணிக்கிறார்கள். ஒன்று இருந்து மற்றொன்று இல்லாததினால் அது கிரியை செய்வது இல்லை. மாவும் (வார்த்தை), எண்ணெயும் (பரிசுத்த ஆவி) உங்கள் பாத்திரத்தில் இருக்குமானால் அப்பொழுது அங்கு அப்பம் நிச்சயம் கிடைக்கும், மற்றபடி அங்கு குழப்பம் தான் உண்டாகும்.

16. தூதன் என்பவன் யார்? ஒரு செய்தியாளன், தேவனிடத்திலிருந்து வருகிற தூதன் ஒரு உண்மையான செய்தியாளன். தேவனுடன் தொடர்பு கொண்டவன். (ஒன்றாயிருத்தல், பத்தி 132) வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய தூதன் திஸ்பியனாகிய எலியா என்பது குறித்து இந்தச் செய்தித் தொகுப்பு அநேகருடைய பாதைகளை மாற்றி நித்திய ஜீவவழியில் அவர்களை நடத்தும் ஒன்றாகயிருக்கும் என்பது எனது எண்ணம். உங்களுக்கு இதைத் தெரிந்து கொள்வதற்கு ஒரு தருணம் அளிக்கப்படுகிறது. ஒருவனுடைய இரட்சிப்பிற்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு கிறிஸ்துவினுடைய தூதன் யார் என்பதை அறிந்துக் கொள்ளவேண்டிய தேவை / அவசியம் தானா என்று சிலர் கேட்கிறார்கள். பாருங்கள், ஏழு சபைக்காலத் தூதர்கள் யார் என்று சபைக்கு ஆவியானவர் வெளிப்படுத்தவேண்டியது தேவை / அத்தியாவசியம் என்கின்றபோது இயேசு கிறிஸ்துவினுடைய தூதன் யார் என்று ஆவியானவர் சபைக்கு வெளிப்படுத்துகிறதும் தேவைதான். நாம் அதை மறுக்க முடியாது.

17. பொதுவாக இக்காலத்துக்குரியச் செய்தியிலுள்ள சபை பாஸ்டர்கள் மக்களுக்கு இக்காலத்துக்குரியச் செய்தியை போதிக்காமல் தங்கள் சொந்தப் போதகத்தையே போதித்து, அவர்களை முற்றிலுமாக மூளை சலவை செய்து தங்களுக்கு அடிமைகளாக்கிவிடுகிறார்கள். ஐசுவரியவான்களான பாஸ்டர் பி.எம்.ஏ.சாமி, பாஸ்டர் சாமுவேல் போன்றவர்கள் சபை விசுவாசிகளை ஒடுக்கி ஆளுகிறார்கள், ஆதலால் தேவ மகிமை இவர்களை விட்டுப் போயிற்று. இக்கபோத்! இவர்கள் விசுவாசிகளின் தசமபாகம், காணிக்கைகளினால் ஐசுவரியவான்களாகி அதே நேரத்தில் சபையை அதாவது யாரிடமிருந்து தசமபாகம், காணிக்கை பெறுகிறார்களோ அவர்களை ஆவிக்குரிய வறுமையடையச் செய்துவிட்டார்கள். ஆதலால் தான் இவர்கள் அந்த தூதன் ஏழாம் சபைக்கால தூதனாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் என போதித்து வருகிறார்கள். இவர்கள் உபதேசம் தவறு என்பதை எடுத்துக்காட்ட, நான் உங்களுக்கு சத்தியத்தைச் வெளிப்படுத்த, இந்தச் செய்தித் தொகுப்பை எழுத வேண்டியதாயிற்று.

18. ஆனால் தேவன் தமது மணவாட்டிக்குள் தமது சத்தியத்தை வைத்து இவர்களைக் கலங்கச் செய்வார்.அல்லேலூயா! இவர்களுக்காக நாம் பரிதவித்து, இவர்களை எவ்வளவாக எச்சரித்து, அழிவுக்குரிய வழியிலிருந்து விலக வேண்டிக்கொண்டாலும், அவர்கள் நம் மீது கோபம் கொண்டவர்களாய் எல்லாவற்றையும் நிராகரித்து தங்களைத் தாங்களே ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக்கொள்ளுகிறார்கள். அந்தோ பரிதாபம்! ஆனால் தேவனோ இந்தச் செய்தித் தொகுப்பு மூலம் இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ள தனிப்பட்ட நபர்களோடு இடைபடுவார். தேவன் உன்னுடைய சபையுடன் தொடர்பு கொள்வதில்லை. தேவன் உன்னுடைய குழுக்களுடன் தொடர்பு கொள்வதில்லை. தேவன் தனிப்பட்ட நபர்களோடே தொடர்பு கொள்ளுகிறார்.

19. இந்தச் செய்தித் தொகுப்பில் நான் சில தனிப்பட்ட நபர்களைக் குறித்து எழுத வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளேன். ஆனால் எனக்கும் அவர்களுக்குமிடையே எந்தவிதமான விரோதமும் மனக்கசப்பும் கிடையாது. அவர்கள் என்னை நேசிக்கிறார்களோ இல்லையோ நான் அவர்களை நேசிக்கிறேன். ஒருவர், ஒரு தனிப்பட்ட நபரைக் குறித்து குறை கூறக் கூடாது என்றாலும், நான் ஒரு ஊழியக்காரன் என்ற முறையில், அதுவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைய தேவனால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவன் என்ற அடிப்படையில் தவறு செய்யும், தவறான உபதேசங்களைக் கொண்டுவரும் அந்த நபரை தவறு செய்ய ஊக்குவித்து, விழுங்கிவரும் சர்ப்பத்தை நான் தாக்க வேண்டியதாயிருக்கிறது. அது நான் தேவனிடத்திலிருந்து பெற்ற ஊழியமாயிருப்பதினால், அப்படிச் செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தீர்க்கதரிசி கூறுவது போன்று இது ஒரு உண்மையான ஊழியக்காரனின் கடமை. நீங்கள் செய்தியை விசுவாசித்தால் என்னையும் நம்புவீர்கள்.

20. ஐந்துவகை ஊழியத்திலுள்ள அனைவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை ஊன்றக் கட்டுவதற்கும், பரிசுத்தவான்களைப் பக்குவப்படுத்துவதற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் உபதேசித்து, புத்திமதி சொல்வதோடு மட்டுமல்ல, அதிகாரத்தோடு கடிந்து கண்டனம் பண்ணவும் அதிகாரமுடையவர்கள். தீத். 2:15, 2 தீமோ. 4:2. இதனால் இவர்கள் தங்களில் தாங்களே தகுதியுள்ளவர்கள் அல்ல . இவர்கள் தகுதி அனைத்தும் தேவனால் உண்டாயிருக்கிறது. இவர்கள் ஊழியங்கொள்ள வராமல், ஊழியஞ்செய்ய வந்தவர்களா யிருக்கிறார்கள். மாற்.10:45. ஆனால் இன்று தசமபாகம். காணிக்கை. வெளிநாட்டு பணத்துக்காக ஊழியங்கொள்ள வந்தவர்களே அதிகமதிகம். இவர்கள் அரசாங்க வேலையிலும். பொதுப் பணித் ஸ்தலங்களிலும் பணி செய்து கொண்டு பொழுது போக்குக்காகவும், பகுதி நேர தொழிலுக்காகவும், பெயருக்காகவும், புகழுக்காகவும் ஊழியம் செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை விட்டு விலகுங்கள். இராஜாவின் பணியைச் செய்வது போன்றுள்ள சந்தோஷத்தை வேறெந்தப் பணியிலும் ஒருவன் பெறமுடியாது.

இந்தப் பணியிலுள்ள சந்தோஷத்தைப் பெறுவதற்கு ஒருவன் இதரப் பணியிலுள்ள சந்தோஷத்தை தியாகம் செய்யத்தான் வேண்டும். ஒருவன் இரண்டிலும் சந்தோஷம் அனுபவிக்க முடியாது. இரண்டிலும் சந்தோஷம் அனுபவிப்பது காகம் ஆகும். ஒரு உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன் ஒரு கழுகாக இருப்பான். காகமாக இருக்கமாட்டான்.

21. எனக்கு நெருக்கமான ஒரு சகோதரன், எனது மகன் வேலையில்லாமல் கஷ்டப்பட்ட நாளில் தன் இல்லத்தில் அடைக்கலம் கொடுத்து அவனை போஷித்தார். எனது பைபிள் தொலைந்தவுடன் ஊழியக்காரன் கையில் பட்டயம் இல்லாமல் இருக்கக்கூடாது என்று கூறி உடனே எனக்கு ஒரு விலையுயர்ந்த பைபிளை வாங்கிக் கொடுத்தார். இப்படிப்பட்ட நற்பண்புகளை உடைய அந்தச் சகோதரன் சமீப காலத்தில் ஒருநாள் இனி நீங்கள் என்னிடம் வரவேண்டாம், நீங்கள் எங்கள் பாஸ்டருடைய தவறுகளை மிகக் கடுமையாகக் கண்டித்து வருகிறீர்கள். அது எங்கள் பாஸ்டருக்கு மிக்க மனக் கஷ்டமாயிருக்கிறது. இந்நிலையில் நீங்கள் என்னிடம் ஐக்கியம் வைத்திருப்பது அவருக்குத் தெரிந்தால் அவர் மனம் மிக்க புண்படும். ஆதலால் தயவுசெய்து இனி என்னிடம் வராதீர்கள் என்று என்னிடம் கூறினார். பாருங்கள் இவரது பாஸ்டர் இவரை எந்த அளவுக்கு மூளை சலவை பண்ணி வைத்திருக்கிறார் என்று ! முற்காலத்தில் ஸ்தாபனத்திற்கு அடிமையாகயிருந்த இந்த சகோதரன், மீண்டும் ஸ்தாபன சபையையுடைய ஒரு தனிப்பட்ட ஒரு மனுஷனுக்கு காதுகுத்தப்பட்டு அடிமையாயிருப்பது அறிந்து என் மனம் புண்பட்டது. அவருக்காக பரிதாபப்பட்டேன். பாருங்கள், இக்காலத்து ஊழியக்காரர்கள் இழிவான ஆதாயத்துக்காக தேவனையும், தேவனுடைய வார்த்தையையும், இக்காலத்துக்குரிய செய்தியையும் மக்கள் மனத்தில் பதிய வைக்க விரும்பாமல் தங்களையே விசுவாசிகள் மனதில் பதிய வைக்கிறார்கள். இதனால் தான் இந்தப் பாஸ்டர் வணக்கம் ஏற்பட்டுள்ளது. இது சாத்தானுடைய ஆவி. தேவனுடைய மணவாட்டி என்பவள் தேவனின் ஒரு பாகமாகயிருக்கிறாள். நீங்கள் உங்கள் பாஸ்டரின் மணவாட்டி என்பதால் அவர் சரீரத்தின் ஒரு பாகமாகயிருக்கிறீர்கள். நமது சபைகளில் அநேகர் பாஸ்டர்களின் மணவாட்டிகளாகவே இருந்து வருகிறார்களேயன்றி கிறிஸ்துவின் மணவாட்டியாக அல்ல. அந்தோ பரிதாபம் ! நான் மேற்கூறிய சகோதரன் இப்பொழுது மனத்தெளிவு பெற்று வருகிறார் என நினைக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் !

22. 2003, நவம்பர் மாதம் 18ம் தேதி WBGNS சென்றிருந்தேன். அங்கு பணிபுரியும் சகோ. டேவிட்டை சந்திக்க நேர்ந்தது. அவர் என்னிடம் சகோதரனே நீங்கள் WBGNS ஒரு ஸ்தாபனம் என்று உங்கள் செய்தித் தொகுப்பில் வர்ணித்துவிட்டீர்கள். அது தவறு. சகோ.எட்வர்ட் பிஸ்கல் முதல் அநேக பரிசுத்தவான்கள் WBGNS பணியை புகழ்ந்து வரும் வேளையில் நீங்கள் மட்டும் இதைக் கண்டனம் பண்ணி வருகிறீர்கள். அது முறையாகாது எனக் கூறினார். நான் அப்படியானால் நீங்கள் மெஜாரிட்டி முடிவை சார்ந்தவர்கள் தானே, அதாவது எங்கு மெஜாரிட்டி இருக்கிறதோ. அதன் முடிவு சரி என ஏற்றுக்கொள்கிறவர் அப்படித்தானே என்றேன். அதற்கு அவரும் ஆமாம் என்று கூறினார். இதிலிருந்து அவர் செய்தியில் வளராத ஒரு சகோதரன், அவரைச் சிலர் பாடவைக்கிறார்கள் என நினைத்துக்கொண்டேன். மேலும் நீங்கள் WBGNSயை குறைகூறி எழுதி வருவதால் உங்கள் செய்தித் தொகுப்பு எனக்கு இடறலாக இருக்கிறது. ஆதலால் இனி உங்கள் செய்தித் தொகுப்பு எனக்கு தேவையில்லை என்றார். நானும் கட்டாயப்படுத்தி உங்கள் கரத்தில் அதை திணிக்க மாட்டேன் என்று கூறினேன்.

23. அத்துடன் அவர் சும்மாயிருந்தாரா வென்றால் இல்லை. என் ஊழிய அழைப்பு, தனிப்பட்ட வாழ்க்கை, தசமபாகம் நான் கொடுப்பது, என் பிள்ளைகளின் காரியம், என் குடும்ப காரியம் எல்லாவற்றையும் அவர் நன்கு அறிந்தவர் போன்று அது சரியாக இருக்கிறதா, இது சரியாக இருக்கிறதா என்று தாறுமாறாகப் பேச, அத்துடன் சுவிசேஷகனாகிய என் ஊழியத்தை எந்த சபையும் அங்கீகரிக்கவில்லை. (அதாவது எந்த சபையும் என்னை சுவிசேஷகனாக நியமனம் பண்ணவில்லை) ஆதலால் நான் ஊழியம் செய்ய தகுதியற்றவன் என்று அவர் தன் சுயநினைவில் இல்லாமல் உளறிக்கொட்டினார். செய்தியில் அவருடைய வளர்ச்சியின்மையை நான் மேலும் மேலும் உறுதிப்படுத்திக் கொண்டேயிருந்தேன். இவர் தன்னை ஒரு சுவிசேஷகனாக அழைத்துக் கொள்வதே முதலில் ஒரு வெட்கக்கேடு. இவரைப்போன்று தங்களுடைய ஸ்தானத்தை அறியாத அநேக சுவிசேஷகர்கள் பல்லாவரம் பகுதிகளில் உண்டு. பாருங்கள், இவர்களால் சபைக்கு எந்தவிதமான ஆவிக்குரிய நன்மையும் கிடையாது. ஏனென்றால் தேவன் இவர்களை ஏற்படுத்தியதில்லை. இவர்கள் அவர்கள் சபை பாஸ்டர்களாலே ஏற்படுத்தப்பட்டவர்கள்.

24. பின், நான் தனியாக அவரை அழைத்து, நீங்கள் என்னைக் குறித்துக் கூறிய குற்றச்சாட்டுகளுக்கு தேவனுடைய வார்த்தையிலிருந்து, இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து ஆதாரங்கள் எனக்குக் கொடுக்க வேண்டும் என்றேன். தன்னால் உடன் எதுவும் கொடுக்க முடியாது, ஆனால் நான் அடுத்த முறை WBGNS வரும் போது கொடுக்கிறேன் என்றார்.

25. நான் 20ம் தேதி அவருக்கு ஒரு கடிதம் எழுதி, என் ஊழிய அழைப்பு, என் தனிப்பட்ட வாழ்க்கை, நான் தசமபாகம் கொடுக்கும் விபரம், என் பையன்கள் காரியம், என் குடும்ப காரியம் குறித்து அவர் கூறிய குற்றசாட்டுகள் அனைத்தையும் வேதவாக்கியத்துடனும், இக்காலத்துக்குரிய செய்தியின் அடிப்படையிலும் தவறு என எனக்கு உடன் எழுதி அனுப்ப வேண்டும் என எழுதினேன். அவரிடம் இருந்து பதில் வந்தவுடன் என் மீது அவரது குற்றச்சாட்டுகளை எழுதி, அதற்கு எனது விளக்கத்தையும் எழுதுவேன். பல மாதங்கள் கழிந்தும் இதுவரை அவரிடமிருந்து பதில் ஏதுவும் இல்லை. அவருடைய ஆயுசு காலம் வரை அவரிடமிருந்து பதில் வராது என்பதை நான் நன்கு அறிவேன்.

26. அவரது குற்றச்சாட்டுகள் எதிலும் அழுத்தம் இல்லை. ஆனாலும் இவர்கள் யாருக்காக வைராக்கியம் பாராட்டுகிறார்கள்? பாருங்கள், தேவனுக்காக இல்லை, இக்காலத்துக்குரிய செய்திக்காக இல்லை. மாறாக WBGNS க்காக. அதில் தில்லுமுல்லுகள் எதுவுமில்லை என்று இவர்களால் கூறமுடியுமா? செய்தி மொழி

பெயர்ப்புகளில் தவறு இல்லை என்று கூறமுடியுமா? காரியங்களை வெளியே சொல்லப் போனால் அது ஒரு பெரிய வெட்கக்கேடு. அது நம்முடைய பல்லை குத்தி நாமே நாற்றத்தை உண்டாக்கியது போலாகும். இவருக்கு ஏன் WBGNS மீது இத்தனை பாசம்? இவர்கள் செய்யும் வேலைக்கு வெளியே மாதம் ரூ.1000/- கூட சம்பளமாகக் கிடைக்காது. இப்படியிருக்க செய்திப் பேரைச் சொல்லி WBGNSல் மாதம் ரூ.5000/- லிருந்து ரூ.10,000/- வரை சம்பளம் வாங்கி ஏழை எளிய மக்களது காணிக்கைகளை சூரையாடுகிறார்களே, இதற்கு WBGNS இவர்களுக்கு உடந்தையாக இருப்பதால் தான் மற்றபடி அல்ல என்பது என் கணிப்பு.

27. சகோ. டேவிட் கூற்றின்படி ஒரு சுவிசேஷகனாகிய என்னை, ஒரு சபை அல்லது ஒரு பாஸ்டர் என்னை என் ஊழியத்திற்காக நியமித்து, பிரதிஸ்டை செய்ய வேண்டுமாம். என்னை என் ஊழியத்திற்கு நியமித்து, பிரதிஸ்டை செய்வதற்கு இவரது சபைக்கும் அல்லது இவரது சபை பாஸ்டருக்கும் என்ன தகுதி இருக்கிறது என்று நான் இவரைக் கேட்கிறேன். சென்னை, பொழிச்சலூர், சகோ. டேனியல் ராஜாவை பாஸ்டராக நியமித்து, பிரதிஸ்டை செய்வதற்கு பல்லாவரம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆசரிப்பு கூடாரம் பாஸ்டர் சாமுவேல் தங்கமணிக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? தகுதி இருக்கிறது? இருவருமே பாஸ்டர் உத்தியோகத்திற்கு தகுதியற்றவர்கள். இருவருமே தங்கள் ஸ்தானத்தை அறியாதவர்கள். தன் ஸ்தானத்தை அறியாத ஒருவன் எப்படி தேவனுடைய ஊழியக்காரனாக இருக்க முடியும்? தேவனால் ஏற்படுத்தப்பட்டவன் தன் ஸ்தானத்தை அறிவான்.

28. பாருங்கள், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காக ஐந்து விதமான உத்தியோகங்கள் உண்டு. அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்கள். இவர்கள் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள் எந்தவிதமான ஒரு லோக்கல் சபையினாலோ அல்லது அதனுடைய பாஸ்டர்களாலோ நியமிக்கப்பட்ட ஊழியங்கள் அல்ல. மாறாக தேவனால் நியமிக்கப்பட்ட ஊழியர்கள். இந்த ஊழியத்திற்கு, உதாரணமாக ஒரு சுவிசேஷகனாக ஒருவனை நியமிக்க உங்கள் பாஸ்டருக்கு, அதாவது உங்கள் பாஸ்டர் பி.எம்.ஏ. சாமிக்கோ அல்லது பாஸ்டர் சாமுவேல் தங்கமணிக்கோ அல்லது பாஸ்டர் பால் சங்கரனுக்கோ எந்தவிதமான யோக்கியதையும், தகுதியும் கிடையாது. இவ்வாறாக ஒருவனை சுவிசேஷகனாகவோ, பாஸ்டராகவோ, போதகனாகவோ இவர்கள் நியமிப்பதினால் அவர்கள் சுவிசேஷகனாகவோ, பாஸ்டராகவோ, போதகனாகவோ ஆவதும் கிடையாது. இவர்கள் பாஸ்டராக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டதும் கிடையாது. இருவரும் அதாவது ஐந்து வகை ஊழியத்திற்கென ஒருவனை நியமிப்பவரும், நியமிக்கப்படுபவரும் தேவசித்தத்திற்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறவர்கள். இந்த ஊழியங்களை ஒருவன் ஆசிக்கக் கூடாது. இது ஒருவன் விரும்பி செய்யும் ஊழியம் அல்ல. இது ஒருவனுடைய விருப்பு, வெறுப்புக்குட்பட்ட ஊழியம் அல்ல. இந்த ஊழியத்திற்காக ஒருவன் ஜெபிக்கவும் கூடாது. அதாவது ஜெபத்தில் ஒருவன் இந்த ஊழியத்தைக் கேட்கவும் கூடாது. இந்த ஊழியர்கள் உயர்ந்த அதிகாரத்திலிருந்து, உன்னதத்திலிருந்து கொடுக்கப்பட்டு, தகுதியற்ற ஒருவன் தகுதியாக்கப்பட்டு அழைக்கப்படுகிறான். ஆதலால் இவர்களை நியமிக்க இந்தப் பூமியில் எவருக்கும் அதிகாரம் கிடையாது. தேவன் ஒருவனுக்கே அதிகாரம் உண்டு.

29. இன்று நம் மத்தியில் இருக்கும் அநேக பாஸ்டர்கள், மற்றொரு பாஸ்டரை, சுவிசேஷகனை, போதகனை நியமிக்கிறார்கள். இது அயோக்கியத்தனமாகும். ஒருவன் இந்த ஊழியத்திற்கென்றே பிறந்திருக்கிறான். யாராவது ஒருவன் இந்த ஊழியத்திற்கென்று ஒருவன் தலைமீது கைகளை வைத்து ஜெபிப்பதால் அவன் ஊழியக்காரனாகிவிட முடியாது. அவன் தன் தாயின் கர்ப்பத்திலிருந்தே பிறந்திருக்கிறான், பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறான். ஆதலால் உங்கள் பாஸ்டர்கள் பி.எம்.ஏ. சாமி, சாமுவேல் தங்கமணி, பால் சங்கரன் போன்றவர்கள் பிறர் தலை மீது கைகளை வைத்து அவர்களை ஒரு ஊழியத்திற்கென்று நியமித்து, பிரதிஸ்டை செய்வது அயோக்கியத்தனமாகும். இதை சகோ. டேவிட் அறிந்துகொள்ள கிருபையின் செய்தி, பத்தி 192 மற்றும் 193ஐ தியானிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஆதலால் சகோ. டேனியல் ராஜாவை பாஸ்டராக நியமித்து, பிரதிஸ்டை செய்தது பாஸ்டர் சாமுவேல் தங்கமணியின் மதிகேடான செயலாகும். பிரதிஸ்டை செய்தவரும், பிரதிஸ்டை செய்யப்பட்டவரும் ஊழிய அழைப்பு இல்லாதவர்கள். தங்கள் சுய விருப்பத்தின்படி இவர்கள் தேவனுக்கென்று ஒரு ஊழியம் செய்கிறார்கள். ஆதலால் இவர்கள் ஊழியங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, இவர்களை விட்டு விலகுங்கள். இவர்கள் உங்களை ஆவிக்குரிய பாதையில் வழி நடத்தமுடியவே முடியாது. மேலும் தகுதியற்றவர்களும் கூட. பாருங்கள், பாஸ்டர் தங்கமணி அடிக்கடி தன் உபதேசங்களை மாற்றிக் கொண்டே வருகிறாரே! ஒரு நாள் கர்த்தருடைய வருகை 1963ல் வந்து விட்டது என்பார். சில நாட்கள் கழித்து அதை மறுப்பார். பின் ஒரு நாள் பெண்கள் சுடிதார் அணியக்கூடாது என்று பிரசங்கப்பீடத்திலிருந்து கூறுவார். பின் ஒருநாள் அணியலாம், அதில் தவறு இல்லை என்பார். இப்படியாக சபையில் இவரது உபதேசம் மாறி மாறிக் கொண்டே இருக்கும். எதிலும் நிலையான உறுதிக் கிடையாது. இது அழைக்கப்பட்ட ஒரு ஊழியக்காரனுக்கு அடையாளமா? இல்லவே இல்லை.

30. கேடு கெட்ட பொழிச்சலூர் ஊழியத்தைப் பாருங்கள். ஒரு காம்பவுண்டுக்குள் ஒரு சிறு கட்டிடம். அதில் சகோ. அந்தோணிராஜ் சபை நடத்துகிறார். அதே காம்பவுண்ட்டில் அந்தச் சிறு கட்டிடத்தை ஒட்டி ஒரு குடிசை. அதில் நமது நவீன பாஸ்டர் டேனியல் ராஜ் சபை நடத்துகிறார். முதலாமவர் ஒரு கை விரல்கள் ஆத்துமாக்களை வைத்து சபை நடத்துகிறார். இரண்டாமவர் தனது சொந்த இன ஜன பந்துக்களில் சிலரை வைத்து சபை நடத்துகிறார். முந்தினவர் காலையில் ஆராதனை நடத்துகிறார். பிந்தினவர் மாலையில் ஆராதனை நடத்துகிறார். பாருங்கள், இவர்களுக்கு சபை, பாஸ்டர் உத்தியோகம் ஒரு கேடா? இருவருமே ஊழியத்தகுதியற்றவர்கள். இவர்கள் இருவரையும் நம்பி சில ஆத்துமாக்கள் தங்களை பாழாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தோ பரிதாபம்! இந்த இடத்தில் தேவனுடைய நாமம் துஷிக்கப்பட்டு வருகிறதேயன்றி மகிமைப்படவில்லை. இவர்கள் இருவரும் அல்லது ஒருவராவது தேவனுடைய மனுஷர்களாயிருப்பார்களாகில் அங்கு தேவனுடைய நாமம் துஷிக்கப்பட இடம் கொடுப்பார்களா? நிச்சயமாக கொடுக்க மாட்டார்கள். இதிலிருந்து இவர்கள் யார் என்பதை நீங்களே அடையாளம் கண்டு கொள்ளலாம்.

31. பல்லாவரம் பகுதிகளில் நாளுக்குநாள் சபைகளின் எண்ணிக்கை விசுவாசிகளின் எண்ணிக்கையைவிட பன்றி குட்டிப் போடும் வண்ணமாக பெருகிக் கொண்டே போகிறது. அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வருகிறான். ஆவியின் வழிநடத்துதல் எங்கும் கிடையாது. இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறவர்கள், தசமபாகம், காணிக்கைக்காக ஊழியம் செய்கிறவர்கள் சபை நடத்துகிறார்கள். சுவிசேஷகர்கள் திடீரென பாஸ்டர்களாக மாறி விடுகிறார்கள். மூப்பர்கள் உத்தியோக உயர்வு பெற்று பாஸ்டராகி விடுகிறார்கள். முந்தின நாள் தன்னை மூப்பர் என்கிறான், நேற்று தன்னை டீக்கன் என்றான், இன்று தன்னை சுவிசேஷகன் என்கிறான். இங்கு ஊழிய அழைப்பு நாளுக்குநாள் மாறிக்கொண்டே வருகிறது. நேற்றுத் தன்னை விசுவாசி என்றான். இன்று தன்னை பாஸ்டர் என்கிறான். தங்கள் ஊழிய அழைப்பை உறுதிப்படுத்த ஒருவனும் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.

32. சபைகளில் எங்கும் உட்பூசல், பாஸ்டர்கள் விசுவாசிக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். விசுவாசிகள் பாஸ்டர்களுக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். பாஸ்டர்கள் தாங்கள்தான் எல்லா ஊழியத்திலும் எல்லாம், தங்களுடைய ஆகாரம் மட்டுமே விசுவாசிகளுக்குப் போதும் என்கிறார்கள். உபதேசங்களில் எங்கும் எதிலும் குழப்பங்கள். ஒருநாள் கர்த்தருடைய இரகசிய வருகை வந்துவிட்டது, கலியாண விருந்து முடிந்து விட்டது, இப்பொழுது ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம் என்கிறார்கள். மறுநாள் முற்றிலுமாக அதிலிருந்து பல்டியடிக்கிறார்கள். ஆக மொத்தத்தில் சபையை குழப்புகிறார்கள். அப்படியானால் இவர்கள் தேவனுடைய சபை பக்திவிருத்தியடைய தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தானா? துர்கிரியைகளுக்குத் தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியினால் பாஸ்டர்கள் இருதயம் பொல்லாப்பைச் செய்ய, பேச அவர்களுக்குள்ளே துணிகரம் கொண்டு இருக்கிறது. பிரியமானவர்களே, சபைகளில் நடக்கும் காரியங்கள் யாவும் விசனமாய் இருக்கிறது. எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாய் இருக்கிறது. பல்லாவரம் பகுதி சபைகளில் பாவம் வான பரியந்தம் எட்டினதே. அவளுடைய அநியாயத்தை தேவன் நினைவு கூர்ந்தார். ஆதலால் பல்லாவரம் பகுதிகளில் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கும்படி அழைக்கப்பட்ட பரிசுத்தவான்களே, என் ஜனங்களே, நீங்கள் உங்கள் பாஸ்டர்களுடைய பாவங்களுக்கு, உபதேசங்களுக்கு உடன்படாமல் அவர்களுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவர்களைவிட்டு வெளியே வாருங்கள் என உங்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் அழைக்கிறேன்.

33. மேலும் பல்லாவரம், பாஸ்டர் தங்கமணி பிரசங்கப்பீடத்திலிருந்து என் மீது குற்றம் சாட்டுகிறார். அதாவது நான் பல்லாவரம் பகுதிகளில் உள்ள சபைகளை குறைகூறி வந்து, அதே நேரத்தில் பல்லாவரம் பகுதிக்கு அடிக்கடி வந்து வசூல் வேட்டை செய்து வருகிறேன் என்றும், இதனால் நான் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிற ஒரு ஊழியக்காரன் என்றும் குற்றம் சாட்டுகிறார்.

34. இதற்கு நான் பதில் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் திருவைகுண்டத்திலிருந்து சென்னை வந்துகொண்டிருந்த காலங்களில் பல்லாவரத்திலுள்ள சகோ.அந்தோணிதாஸ் வீட்டிற்கு மட்டும் வந்து செல்வேன். தேவனுக்கு அடுத்து, எனது மனைவி மக்களுக்குப் பின், என்னை அதிகமாக நேசிக்கும் குடும்பங்களில் ஒன்று அவருடையது. இந்தக் குடும்பத்தோடு எனக்கு ஒரு நல்ல ஆவிக்குரிய பந்தம், இணைப்பு உண்டு. நாங்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது பல மணிநேரங்கள் ஆவிக்குரிய காரியங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வோம். எங்களுக்குள் ஒரு நல்ல ஒருமனப்பாடு இருந்து வருகிறது. இந்த உறவு பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இதை உடைப்பதற்காக பாஸ்டர் தங்கமணி சகோ. அந்தோணிதாஸிடம் (இவர் பாஸ்டர் தங்கமணி சபையில் மூப்பர்களுக்குள் ஒருவர்) என்னை அவரது வீட்டில் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று பலமுறை கூறிவந்தார். ஆனால் சகோ. அந்தோணிதாஸ் அதை காதில் போட்டுக்கொள்ளாமல் அசட்டை பண்ணி வந்தார். இதிலிருந்து எங்களது ஐக்கியத்தை உடைக்க பல முயற்சிகள் எடுத்தார். இதுவரை எதுவும் பலிக்கவில்லை. இந்த சகோதரன் நான் சந்திக்கும் போது ரூ.100/- காணிக்கையாகக் கொடுப்பார். நான் திருவைகுண்டத்திலிருந்து சென்னை ஓரிரு மாதங்களுக்கு ஒரு முறை வந்து சென்றேன். ஆனால் இப்பொழுது நான் சென்னை வந்துவிட்டதால் பிரதி மாதம் ஓரிருமுறை அவரை சந்திக்கிறேன்.

35. அடுத்து பல்லாவரம், பாஸ்டர் ஐசக் அருமை நாயகத்துக்கும் எனக்கும் நான் சென்னை வந்தபின்பு நல்லதொரு ஐக்கியம் ஏற்பட மாதத்திற்கு ஒருமுறை அவரையும் சந்தித்து வருகிறேன். அவரும் தன்னுடைய சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் அவ்வப்போது ரூ.200/- , ரூ.100/- , ரூ.50/- என காணிக்கையாகக் கொடுப்பார்.

36. மூன்றாவதாக பொழிச்சலூர் சகோ. ரூபன் மாணிக்கராஜ். நான் சென்னை வந்தவுடன் இவருடைய குடும்பத்துடனும் எனக்கு நல்ல உறவு ஏற்பட்டது. ஆதலால் இவரையும் நான் மாதத்திற்கு ஒருமுறை சந்தித்து வருகிறேன். இவரும் ரூ.100/- , ரூ.50/- எனக் காணிக்கையாகக் கொடுப்பார்.

37. இவர்கள் மூவருடன் பலமணிநேரம் உட்கார்ந்து அநேக ஆவிக்குரிய காரியங்களைச் சிந்திப்பேன். இந்த மூவருடனும் எனக்கு ஆவிக்குரிய ஒருமனம் இருப்பதால், இவர்களை சென்று பார்த்து வருகிறேன். இவ்வண்ணமாக ஆவியில் ஒரு மனப்பட்டவர்களை மாதத்திற்கு ஒருமுறை எனது இல்லத்திலே கூடிவரச் செய்து ஆவிக்குரிய காரியங்களை அனைவருடனும் ஒரே நேரத்தில் பகிர்ந்து கொள்ளலாம். ஆதலால் நான் இவர்களை மாதம் ஒரு முறை அவர்கள் இல்லம் சென்று சந்திக்காமல், எனது இல்லத்திலே அனைவரையும் சந்தித்துவிடலாம் என்ற நல்லெண்ணத்தில் தான் தேவ ஆவியின் வழிநடத்துதலின்படி அன்பின் விருந்து ஆரம்பித்தேன். ஆனால் பலர் பலவிதமான சாக்குப்போக்குக்களைக் கூறி வருவதில்லை.

38. ஆக பிரியமானவர்களே நான் பல்லாவரம் பகுதிக்கு சென்று இந்த மூவரையும் சந்திப்பதினால் எனக்கு மாதம் ரூ.300/- மற்றும் சில சமயங்களில் இதற்கு குறைவாகவும், சற்று அதிகமாகவும் காணிக்கை கிடைக்கும்.

இதைதான் நான் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறேன் என்று பாஸ்டர் தங்கமணி தனது சபை பிரசங்க பீடத்தில் நின்று கொண்டு கூறுவாறாகில் அவர் எப்படிப்பட்ட ஆவியை உடையவர் என்பதை நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள்.

39. 2003, நவம்பர் மாதக் கடைசி வாரத்தில் பல்லாவரம் பகுதியிலிருந்து எனக்கு ஒரு மொட்டை கடிதம் வந்தது. கடிதத்தை அனுப்பியவரின் விலாசம் கொடுக்கப்படவில்லை. கடிதத்தின் முகவரி கே.டி. காலேப் யோசுவா என்று குறிப்பிட்டு எனது விலாசம் எழுதப்பட்டிருந்தது. அதாவது என்னை ஒரு கேடி என்று எழுதியிருந்தார். அடுத்து அனுப்புனர் முகவரியில் உண்மையான மனிதர்கள். (True mans) சென்னை என்று எழுதப்பட்டு இருந்தது. கடிதத்தின் அடக்கம் பின்வருமாறு. திருட்டு பிச்சைக்கார நாயே, பணத்துக்கு அலையாதே. உழைத்து உன் பெரு வயிறை நிரப்பு. அடுத்தவர்களை குறை சொல்லி அலையாதே. அடுத்தவன் பணத்திற்கு அலையாதே. உனக்கு ஊழியம் ஒரு கேடா! நாயே, பிச்சை எடுத்து சாப்பிடுடா நாயே. நாங்கள் பணத்திற்காக இந்த ஊழியத்தில் பங்கு கொள்ளவில்லை. நிதானமாகப் பேசு. இப்பொழுது நாங்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டோம். இந்தியாவில் உள்ள எல்லா போதகர்களும் இணைந்து ஒரு முடிவுக்கு வந்து விட்டோம். பொறுத்திருந்து பார் நாயே. பிசாசின் உருவமே.

40. இந்த மொட்டைக் கடிதத்தை எழுதின அதே நபர் மீண்டும் 2004, மார்ச், இரண்டாவது வாரத்தில் மற்றொரு மொட்டைக் கடிதம் எழுதி உள்ளார். அதன் அடக்கம் கீழ்க்கண்டவாறு : மரியாதைக்குரிய பிசாசிற்கு செருப்படி கொடுத்து எழுதுவது! நாயே ! ஒரு மனிதன் தேவனால் ஆசீர்வதிக்கப்படும் போது அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத பொறுக்கியே! உனக்கு ஊழியம் ஒரு கேடா," புரோக்கர் நாயே" அதையாவது ஒழுங்காகச் செய்து உன் குடும்பத்தைப் பார். மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படாதே! அலையாதே, பிச்சைக் கேட்டு திரியாதேடா நாயே. தேவன் ஒரு மனிதனை நிறுத்தி இருக்கும்போது அந்த மனிதனுக்கு எதிராகப் பேசினால் குட்டிச் சாத்தான் உன் வீட்டில் நுழைந்து உன்னை தாறுமாறாக்கும். ஜாக்கிரதையாகச் செயல்படு. யாரிடம் மோதுகிறாய் என்று தெரியாமல் செயல்படுகிறாய். நான் உன்னை எச்சரிக்கிறேன். எனக்கு விரோதமாக எழுந்தவர்கள் இல்லாமல் போய் விட்டார்கள், ஜாக்கிரதையாக செயல்படுடா திருட்டு, பொறுக்கி, எச்சைப் பொறுக்கி நாயே. அனுப்புநர் விலாசத்தில் பரிசுத்த மனிதன்(Holy man) சென்னை என்றிருந்தது.

41. பாருங்கள் இப்படிப்பட்ட மொட்டை கடிதம் எழுதுகிறவர்கள் உண்மையான மனிதர்களாம். இவர்கள் எப்படி தேவனுடைய ஊழியக்காரர்களாகவோ அல்லது விசுவாசிகளாகவோ இருக்கமுடியும் என்பதை நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள். இவர்கள் பிசாசிற்கு சொந்தமானவர்களேயன்றி தேவனுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும், இப்படிப்பட்டவர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவர்கள் உண்மையான மனிதர்கள் என்றால் தங்கள் விலாசத்தை குறிப்பிட்டு கடிதம் எழுதுவார்களே. மொட்டை கடித ஆவி பிசாசின் உடையதே! இப்படிப்பட்ட மிரட்டுதலை கண்டு, கேட்டு நான் பயப்படப் போவதில்லை, கலங்கப் போவதில்லை, தத்தளிக்கப் போவதுமில்லை. ஏன்னென்றால் நான் என்னை அழைத்தவரும், என்னுடைய விசுவாசத்திற்குரியவரும் யார் என்று அறிவேன். அவருடைய அனுமதியின்றி எனது தலையில் இருந்து ஒரு மயிரும் கீழே விழாது என்பதையும் நன்கு அறிவேன்.

42. 2004 ஜனவரி மாதம் பல்லாவரம் பகுதியில் உள்ள சகோ. மோசஸ் பாபு, சகோ. பன்னீர்செல்வம், பாஸ்டர் சாமுவேல் தங்கமணி இவர்களை இதுகுறித்து சந்திக்கச் சென்றேன். இந்த சந்திப்பு நாங்கள் ஒருவரையொருவர் அறிந்து, புரிந்து கொள்ள ஏதுவாயிருந்தது. ஆனால் பாஸ்டர் சாமுவேல் தங்கமணி என்னை அவருடைய வீட்டிற்குள் அனுமதிக்க மறுத்துவிட்டார். ஆவடி பாஸ்டர் ஆமோஸ் உடன் மிக்க ஒருமனம் ஏற்பட்டது. பாஸ்டர் அர்விந்கோஷ் மரியாதையுடன் நடந்துக்கொள்ளவில்லை. பாஸ்டர் தங்கமணி மற்றும் பாஸ்டர் அர்விந்கோஷ் இருவருக்குள்ளும் வாசம் செய்யும் ஆவியை நான் நன்கு பகுத்தறிய கர்த்தர் சூழ்நிலைகளை வாய்க்கச் செய்தார். இவர்களைக் குறித்த என்நிலையை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டேன். 2004, மார்ச், 3வது வாரம் இந்த மொட்டைக் கடிதம் எழுதும் நபர் யார் என்பதை கர்த்தர் சூழ்நிலைகளை உருவாக்கி அடையாளம் காட்டினார். அவன் சென்னை, பொழிச்சலூர் பகுதியில் தன்னை இக்காலத்திற்குரிய செய்தியிலுள்ள விசுவாசி, சுவிசேஷகன், பாஸ்டர் என்று அவ்வப்போது தன்னை அழைத்துக் கொண்டு ஊர் சுற்றித்திரிகிறவன். இவன் எனக்கும் நன்கு அறிமுகமானவன்தான். இவன் கள்ள நாவினால் என்னோடு இன்பமாகப் பேசுகிறவன். என் சிநேகிதத்துக்குப் பதிலாக என்னைப் பகைக்கிறவன், விரோதிக்கிறவன். சாத்தான் அவனது வலது பாரிசத்தில் நிற்கிறபடியால் அவன் என்னை சபிக்கிறான். கர்த்தர் எனது வலது பாரிசத்தில் நிற்கிறபடியால், அவன் சாபத்தை எனக்கு ஆசீர்வாதமாக மாற்றுகிறார். என்னால் அவனுக்கு தன் ஊழியத்தில் இழப்புகள் ஏற்படுகிறது என்ற ஒரு தவறான எண்ணம் கொண்டு எனக்கு இப்படிப்பட்ட மொட்டைக் கடிதங்களை எழுதிக் கொண்டு வருகிறான். ஆனால் என்னால் அவனுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. அவனுடைய மதிகேடான நடத்தைகளே அவனுக்கு இழப்புகளை ஏற்படுத்துகிறது. நான் உங்களுக்கு அந்த நபர் யார் என்று எழுதவேண்டிய தேவையேயில்லை. நீங்கள் பொழிச்சலூர் பகுதிச் சென்று இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யத்தக்கவன் யார் என்று கேட்டாலே, அங்குள்ள விசுவாசிகள் அவனைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்கள்.

43. பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றும் இவனுக்கு பல்லாவரத்தில் தன்னைச் சுவிசேஷகனென்று அழைத்துக் கொள்ளும் ஒரு கூட்டாளி உண்டு. இவனையும் நான் நன்கு அறிவேன். தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு பொய் நாவினால் பொருள் சம்பாதிப்பதையே தங்கள் ஊழியமாகக் கொண்டுள்ள இவர்கள் இருவரும் தண்ணீரில்லாத கிணறுகளுக்கும், சூழல் காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களுமாயிருக்கிறார்கள் ; என்றென்றைக்குமுள்ள காரிருளே இவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

44. அடுத்து ஆவடிப் பகுதியிலிருந்து வந்த மிகமிக ஆபாசமான மொட்டைக் கடிதத்தை எழுதியவன் சென்னை, சூளை, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு பாஸ்டர் ஜான் ஐசக்கிற்கு மிக்க நெருக்கமான நண்பன், அவர் சபை விசுவாசி, பட்டாபிராம் பகுதியில் குடியிருக்கிறான். இவன் மேல் பாஸ்டர் நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனென்றால் இவனால் பாஸ்டருக்கு நல்ல வருமானம் உண்டு.

45. பாஸ்டர் தங்கமணி ஒரு காலத்தில், எனது மனைவி, பெண்மக்கள் நகைகள் அணிகிறார்கள். ஆனால் நான் ஊருக்கு நகைகள் அணியக்கூடாது என்று உபதேசிக்கிறேன் என்று கூறி என்மீது பழிசுமத்தி வீண் புரளி கிளப்பிவிட்டார். நான் இவரிடம் என் திருமணம், நான் இரட்சிக்கப்படும் முன் நடந்தது. ஆதலால் என் மனைவி நகைகள் அணிந்திருந்தாள். ஆனால் இப்பொழுது இல்லை. மேலும் என் பெண்மக்கள் இதுவரை காதுகூட குத்தினதில்லை. இப்படியிருக்க அவர்கள் ஆபரணங்கள் அணிகிறார்கள் என்று நீங்கள் ஏன் புரளியை கிளப்புகிறீர்கள் என்று கூறி கண்டித்தேன். அதன்பின் அவர் அந்தப் புரளிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

46. இவ்வாறாக என் மீது அடிக்கடி வதந்தி, புரளிக் கிளப்பி வருவதில் இவரும் பல்லாவரம் வட்டாரத்தில் ஒருவர். இவரைப் போன்று இன்னும் சில மேய்ப்பர்கள் உண்டு. இவர்களைக் குறித்து நான் கண்டுகொள்வதேயில்லை. இவ்வாறாக என் மீது அபாண்டமான பொய்களைக் கூறி வதந்திகளைக் கிளப்பும் நபர்களுடன் WBGNS சகோ. டேவிட் சேர்ந்துவிட்டாரே என்பது தான் எனக்கு கொஞ்சம் மனக்கஷ்டம். கடைசிக்காலத்தில் பொய்யர்கள் காணப்படுவார்கள். இவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என வேதம் கூறுகிறது (வெளி.21:8) என்பதை இவர்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன்.

47. தவறைப் புரிந்து கொள்ளும் ஞானத்தை கர்த்தர் அவர்களுக்கு அருளவேண்டும். ஒன்று தவறு என்பதை புரிந்துகொள்ள தேவன் ஒருவனுக்கு ஞானத்தின் ஆவியை அருளுகிறார். பாருங்கள், அதுதான் தைரியத்தோடு ஞானத்தை கூட்டி வழங்குவதாகும். ஞானவான்கள், கல்விமான்கள் தங்கள் தவறுகளை தங்கள் ஞானத்தினால் கண்டுகொள்ள முடியாது. ஆனால் ஆவியில் எளிமையுள்ளவர்களிடம், ஆவிக்குரிய எளிய பெருந்தன்மையிருப்பதால் அவர்கள் தங்கள் தவறுகளை கண்டுகொள்வார்கள். பாஸ்டர் பி.எம்.ஏ.சாமி, வளசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல், பாஸ்டர் தங்கமணி சாமுவேல், பாஸ்டர் அரவிந்கோஷ் போன்றவர்கள் தங்கள் தவறுகளை புரிந்துகொள்ள, அறிந்துகொள்ள கர்த்தர் இவர்களுக்கு ஞானத்தைக் கொடுக்க ஜெபிக்கிறேன், ஜெபியுங்கள்.

48. ஞாபகம் கொள்ளுங்கள், நீங்கள் உங்கள் தனிப்பட்ட விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும். அதுபோல உங்கள் தனிப்பட்ட விசுவாசத்தின் மகிமை கண்டு உணர முடியும். இது வேதப்பிரகாரமானது. தேவனுடைய வார்த்தை! நீங்கள் எந்த சபைக்குச் சென்றாலும் உங்கள் சபையின் போதகர் ஒரு தேவனுடைய மனிதன் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இல்லையெனில், நீங்கள் அதை விட்டு விலகி ஒரு தேவனுடைய மனிதனிடம் செல்லுங்கள். அவரை நீங்கள் விசுவாசிப்பீர்களானால், அவர் உங்களுக்கு சத்தியத்தை எடுத்துரைக்கிறார் என்று விசுவாசித்து அதை ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் கிறிஸ்துவில் கொண்டிருக்கும் உங்கள் சொந்த தனிப்பட்ட விசுவாசமே உங்களை இரட்சிக்கும். இதை பாஸ்டரின் உபதேசம், நடவடிக்கைகள் மீது முறுமுறுத்துக்கொண்டும் அங்கலாய்த்தும் கொண்டிருக்கும் சகோதரர்களுக்காக எழுதுகிறேன். இதுகுறித்து நீங்கள் நான் மோசேயோடே இருந்தது போல உங்களோடும் இருப்பேன் என்ற செய்தியில் 228வது பத்தியில் தியானிக்கலாம். வளசரவாக்கம் கல்வாரி சபை சகோ. தேவநேசன், சகோ. மோசஸ் போன்றவர்கள் விழிப்படைவதற்காகவே இதை இங்கு எழுதுகிறேன்.

49. நீங்கள் நான் மோசேயோடே இருந்தது போல உன்னொடும் இருப்பேன் என்ற செய்தியில் 22&23 பக்கங்கள் தியானிப்பீர்களானால் பாஸ்டர் சாமுவேல் அவர்களின் தவறு புரியும். இவர் பல லட்சம் பணம் சேகரித்து ஒரு ஆலயக் கட்டிடத்தைக் கட்டி, அதை தன் பெயரில் தக்கவைத்துக் கொண்டதால் தன்னை புத்திசாலியான பாஸ்டர் என நினைத்துக் கொள்ளலாம். மேலும் 100 / 200 பேர்கள் தன் சபையில் உள்ளதினால் தான் செழிப்படைந்த நிலையில் உள்ள ஒரு பாஸ்டர், கர்த்தர் தன்னோடு இருக்கிறார் என்றும் என நினைத்துக் கொள்ளலாம். ஆனால்பிரியமானவர்களே அது செழிப்பு அல்ல. அது உங்களை வாக்குத்தத்தத்திற்கு ஒரு அடி கூட அருகாமையில் கொண்டு செல்லாது. சபைக்குத் தேவை அதிகப்படியாக தேவன். அதிகப்படியாக பரிசுத்தஆவி.

50. நீங்கள் ஏதோவொன்றை செய்ய நினைக்கும் போது, அதை தேவனுடைய வார்த்தையின்படி செய்கிறீர்களா? வார்த்தையின் மேல் உங்கள் வாஞ்சை காணப்படுகிறதா? வேதத்தைப் போதிக்கிறீர்களா? அல்லது இன்று அநேகர், செய்வது போல் மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிக்கிறீர்களா? மாற். 7:7. என்று உங்களை நீங்களே நிதானித்துப் பாருங்கள்.

51. நீங்கள் திருத்துவ ஸ்தாபனத்தில் பெற்ற டாக்டர் பட்டம் தேவனுடைய வார்த்தையின்படிதானா? நீங்கள் ப லரிடம் பணம் பெற்று ஆலயக் கட்டிடம் கட்டி, வீடு கட்டி அதை உங்கள் உடைமையாக்கிக் கொண்டது வார்த்தையின் மேல் உள்ள வாஞ்சை தானா? யோவான், ஏழாம் சபைக் காலத் தூதன் சகோ. பிரன்காம் காலில் விழுந்தான் என்பது வேதத்தில் உள்ள ஒரு போதனையா? நீங்கள் ஸ்தாபன போக்கில் தானே சென்று கொண்டு ஆவிக்குரிய சபையை வழிநடத்துகிறேன் என்று கூறி, குருடனுக்கு வழிகாட்டும் குருடனாயிருக்கிறீர்களா, அல்லது மக்களை ஏமாற்றி ஊழியம் செய்கிறீர்களா? உங்களை நீங்களே சீர்தூக்கிப் பார்த்து தேவனுடைய வார்த்தை என்னும் தராசில் உங்களை நிறுத்திப் பார்த்து உங்களை காத்துக்கொள்ளுங்கள்.

52. எனது ஊழியத்தின் பாதையில் பல எதிர்ப்புகளின் மத்தியில் எனக்காக அனுதினமும் ஜெபம் ஏறெடுத்து, என்னை ஆவிக்குரிய விதத்தில் தாங்கிவரும் சிலர் அன்பைக் கண்டு பெருமை பாராட்டுகிறேன். நீங்கள் பாராட்டின, பாராட்டி வருகிற அன்பையும், இதுவரை செய்த, செய்து கொண்டிருக்கிற அனைத்து உதவிகளையும் நான் ஒருக்காலும் மறக்க மாட்டேன். அதே நேரத்தில் நான் மனுஷர்களை பிரியப்படுத்துகிறவனாக ஊழியம் செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் உண்மையும் உத்தமுமாகயிருக்க விரும்புகிறேன். பணத்திற்காக என்னை வாங்கிக்கொள்ள போதுமான பணம் உலகத்தில் இல்லை. ஆனால் எனது உத்தமம் சில சமயங்களில் சகோதரர்கள் மத்தியில் மனஸ்தாபத்தைக் கொண்டு வருகிறது என்பதை நான் நன்கு அறிவேன். ஆனால் அதற்காக நான் ஒன்றும் செய்யமுடியாது.

53. ஒரு புறம் அநேக மாடிகள் கொண்ட கட்டிடங்கள், மறுபக்கம் தென்னங்கீற்றினால் செய்யப்பட்ட குடிசைகள், படுக்க இடமில்லை, மக்கள் தெருக்களில் படுத்துத் தூங்குகிறார்கள். தேவன் என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரியாமல் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டுச் சூழ்நிலை இப்படியிருக்க நாமோ உபதேசங்களின் பேரில் தர்கித்துக் கொண்டிருக்கிறோம், ஒருவரை ஒருவர் பகைக்கிறோம், எங்கும் ஒரு மனமில்லை, ஒற்றுமையில்லை, அன்பில்லை.

<u>யோவான் வணங்கிய தீர்க்கதரிசி திஸ்பியனாகிய எலியா.</u>

54. வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய தூதன் குறித்து கத்தோலிக்கத் திருச்சபை இவ்விதமாகப் போதிக்கிறது. இஸ்பிரீத்துசாந்துவினால் (பரிசுத்தஆவியினால்) ஏவப்பட்ட சம்மனசானவர் (தேவனிடத்திலிருந்து அனுப்பப்படும் பிரத்தியேகமான தேவதூதன்) தீர்க்கதரிசனம் உரைக்கிறது போல, அர்ச். அருளப்பரும் (யோவான்) இஸ்பிரீத்துசாந்துவினால் ஏவப்பட்டு தீர்க்கதரிசனம் சொல்ல வரம் பெற்றதினால் இருவரிடத்திலும் ஒரே இஸ்பிரீத்துசாந்துவானவர் குடியிருந்தார். ஆகையால் சம்மனசானவர் நானும் உன்னைப்போல ஒரு ஊழியக்காரன் தானே என்றார் என்பதாகும். (அருளப்பரின் காட்சியாகமம் 19 அதி. 10 வசனக்குறிப்பு) ஆக கத்தோலிக்கத் திருச்சபை அந்த தூதன் யார் என்று குறிப்பாகப் பெயரிட்டு கூறாமல், அந்தத் தூதன் ஒரு தேவ தூதன் என்று மட்டுமே உபதேசிக்கிறது.

55. அடுத்து, அந்த தூதன் குறித்து ஏழாம் நாள் வருகை திருச்சபையைச் சார்ந்த திரு. பி. ராஜீ பத்மநாதன் என்பவர் தனது யோவான் வெளிப்படுத்தின விசேஷம் விளக்கம் முதல் பக்கம், 2வது பத்தியில் வெளிப்பாடு நூலின் செய்தியைப் பிதாவாகிய தேவன் குமாரனுக்கும், குமாரனாகிய கிறிஸ்து தூதனாகிய காபிரியேலுக்கும், காபிரியேல் தூதன் யோவானுக்கும், யோவான் பரிசுத்த ஆவியின் மூலம் கண்டதைச் சபைக்குச் சாட்சியாக அறிவித்தான் என்கிறார். இவர் அந்தத் தூதன் காபிரியேல் தேவதூதன் என்று அந்த தூதனுடைய பெயரை குறிப்பாகக் குறிப்பிட்டு எழுதுகிறார்.

56. மூன்றாவதாக, தாமஸ் மாதர் என்பவரின் வெளிப்படுத்தின விசேஷம் விளக்கம் வாசித்தேன். அதில் தான் கண்டவைகளையும், கேட்டவைகளையும் குறித்து தன் மனதில் திரும்பத் திரும்ப ஆழமாய்த் தைக்கப்பட்டு, யோவான் அப்போஸ்தலன் அந்தத் தூதனை விழுந்து வணங்கப் போனான். ஆனால் அந்த தூதனோ ஆண்டவருடைய ஒரு புத்தியுள்ள வேலைக்காரன், ஆதலால் அவன் யோவானை தடுத்து பூமியிலுள்ள தேவனுடைய மற்ற வேலைக்காரருடன் தன்னையும் சேர்த்துக்கொண்டு யோவான் தேவனைத் தான் வணங்க வேண்டுமென்று வழிகாட்டினார் என்று தனது விளக்கவுரை 182வது பக்கத்தில் எழுதுகிறார். இவர் அந்தத் தூதன் பூமியிலுள்ள தேவனுடைய மற்ற வேலைக்காரருடன் தன்னையும் சேர்த்துக்கொண்டார் எனக் கூறி அந்தத் தூதன் ஒரு பூமிக்குரியவன் என்பதை நாசூக்காகக் கூறுகிறார். இவரது உபதேசம் இக்காலத்துக்குரிய செய்தியோடு கொஞ்சம் இசைந்து போகிறதாயிருக்கிறது.

57. பொதுவாக ஸ்தாபன சபைகள் யாவும் தங்களது வெளிப்படுத்தின விசேஷம் வியாக்கியானங்களில் அந்தத் தூதன் இரட்சிப்பை சுதந்தரித்துக் கொள்ளப் போகிறவர்கள் நிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாகிய தேவதூதர்களில் ஒருவன் (எபி.1:14) என்றே கூறுகிறது. ஏழாம் சபைக்காலத் தூதன் சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் உபயோகித்து வந்த ஸ்கோபீல்ட் வேதாகமம் கூட அந்தத் தூதன் ஒரு தேவதூதன் (எபி.1:14) என்றே கூறுகிறது.

58. ஆக, ஸ்தாபன சபைகளின் உபதேசம் பொதுவாக அந்தத் தூதன் ஒரு தேவதூதன் (எபி.1:14) என்றும் அவர் தேவதூதனாகிய காபிரியேல் என்றும், அவர் பூமியிலுள்ள தேவனுடைய மற்ற வேலைக்காரருடன் தன்னையும் சேர்த்துக்கொண்ட ஒருவர் என்றும் பெயரைக் குறிப்பிடாமல் இருக்கிறது. இந்நிலையில் நாங்கள் இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம், அதாவது ஏழாம் சபைக்காலமாகிய லவோதிக்கேயா சபைக்காலத்தில் தேவன் தம்முடைய தூதன் மூலம் இந்தச் சபைக்குக் கொடுத்த செய்தியில் இருக்கிறோம், நாங்கள் தான் மணவாட்டி, நாங்கள் மணவாட்டி சபையை வழிநடத்தும் மேய்ப்பர்கள் என்று தங்களைத் தான் மேன்மைப்படுத்திக் கொள்ளும், மிகைப்படுத்திக் கொள்ளும் விசுவாசிகள், மேய்ப்பர்கள் மத்தியில் பெரும்பான்மையினர் அந்தத் தூதன் லவோதிக்கேயா சபைக்காலத் தூதனும், தீர்க்கதரிசியுமாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் என உபதேசித்து வருகிறார்கள். இது சர்ப்பத்தின் வித்து ஆகும்.

59. இவ்வாறாக, அந்தத் தூதன் குறித்து பற்பல உபதேசங்கள் பரத்திலிருந்து இறங்கி வராத, ஜென்ம சுபாவ, லௌகீக ஞானத்தினால் போதிக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஆவிக்குரியவர்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறார்கள். ஜென்ம சுபாவ மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால் அவைகளை அறியவும் மாட்டான்.

60. இக்காலத்துக்குரிய செய்தியில் நான் மூன்று வகையான மக்களைக் காண்கிறேன்.

முதல் வகை : தேவனுடைய வார்த்தை, இக்காலத்துக்குரிய செய்தி என்ன சொல்கிறதோ, போதிக்கிறதோ அதைக் கேட்டு, இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்து கனிக்கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். செடியாகிய அவரில் கொடியாக நிலைத்திருந்து கனிக்கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். வீட்டில் டி.வி. வைக்கக்கூடாது என்றால் ஐயா, நான் வீட்டிலிருந்து எனது டி.வி.யை எடுத்துவிட்டேன் என்பார்கள். கர்த்தருக்குரிய தசமபாகத்தை தவறாது கொடுக்க வேண்டும் என்றால் சகோதரனே, நான் கடந்த மாதம் வரை கொடுக்கவில்லை. இந்த மாதம் முதல் எனக்கு வரும் அனைத்து வருவாயிலும் கர்த்தருக்குரிய தசமபாகத்தை முதலில் செலுத்துவேன். அதோடு மட்டுமல்ல இனி ஒழுங்காக மாதந்தோறும் ஒழுங்காகக் கொடுப்பேன் என்று உறுதி கூறுகிறேன் என்பார்கள். திருமண ஒப்பந்தத்துக்கு, உடன்படிக்கைக்கு அடையாளமாக நம் நாட்டு வழக்கப்படி தாலி, மோதிரம் ஆண், பெண்ணுக்கு அணியவேண்டும். எந்த ஒரு உடன்படிக்கைக்கும் நிச்சயமாக ஒரு அடையாளம் இருக்க வேண்டும் என்றால் பிரியமானவரே நிச்சயமாக அதை எனது குடும்ப வாழ்க்கையில் கடைபிடிப்பேன் என்பார்கள். இவ்வண்ணமாக கேட்ட வசனத்திற்குத் தங்களை முற்றிலுமாக அர்பணிக்கிறவர்களே முதல் வகையைச் சார்ந்த விசுவாசிகள்.

61. இரண்டாம் வகை: நோ, நோ அது அப்படியல்ல. அது இப்படி. அவர் அந்த நோக்கத்தோடு அதைக் கூறவில்லை. அவர் இந்த நோக்கத்தோடு தான் அதைக் கூறினார். அவர் வீட்டில் டி.வி. இருந்தது. எனது வீட்டிலும் இருப்பதில் தவறில்லை. நான் டி.வி.யில் செய்தி, அத்துடன் டிஸ்கவரி சேனல் மட்டும் தானே பார்க்கிறேன். ஆதலால் டி.வி. வைப்பதில் தவறு இல்லை என்கிறவர்கள். பொன் ஆபரணங்களினால் அலங்கரிக்காதே என்று தேவனுடைய வார்த்தைக் கூறுகிறது. அலங்கரியாதே என்பதும் அணிவதும் ஒன்று தான் என்று தங்கள் சொந்த வியாக்கியானத்தைக் கொடுத்து, உடன்படிக்கைக்கு அடையாளமில்லாத ஒரு வாழ்க்கைப் பயணத்தில் உள்ளவர்கள். ஆடை அணிவதற்கும், ஆடையினால் ஒரு ஆண், பெண் தங்களை அலங்கரிப்பதற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள். இவ்வாறாக தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்திற்குரிய செய்திக்கு தங்கள் சொந்த கருத்துக்களைக் கூறி கோட்பாடுகளைக் கொண்டுவந்து அவைகளை உபதேசங்களாக இடதுகைக்கும் வலதுகைக்கும் வித்தியாசம் தெரியாத மக்கள் மீது திணிக்கும் பக்க வழியில் நுழைந்த கள்ளப்போதகர்கள், பின்வாங்கிப் போகிறவர்கள்.

62. மூன்றாம் வகை: தேவனுக்குச் செலுத்த வேண்டிய மகிமையை சபைக்காலத் தூதனுக்குச் செலுத்தி தேவனுடைய வார்த்தையை (பைபிளை) ஒரு புறம் ஒதுக்கி அதை தலைக்கு தலையணையாக வைத்துவிட்டு, இக்காலத்துக்குரிய செய்திப் புத்தகங்கள் சிலவற்றைக் கைகளில் வைத்துக்கொண்டு, எல்லாம் பிரன்காமே, எனக்கு எல்லாம் பிரன்காமே ; பிரன்காம் போதுமே, எனக்குப் பிரன்காம் போதுமே என்று தூதனை தலையாக வைத்து துதிபாடும் வஞ்சிக்கப்பட்ட கூட்டம்.

63. மேலும் விசுவாசிகள் மூன்று வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டவர்களாகவும் பிரிந்திருக்கிறார்கள். முதல் பிரிவினர் செய்தியை விசுவாசிக்கிறார்கள். இரண்டாம் பிரிவினர் செய்தியைப் பகைக்கிறார்கள். மூன்றாம் பிரிவினருக்கு செய்தியைக் குறித்து என்ன செய்வதென்றே தெரிவதில்லை. இவர்கள் எதைக் குறித்தும் கவலைப் பட்டுக் கொள்வதில்லை. ஞாயிறு காலை ஆராதனை. இத்துடன் முடிந்தது இவர்களது பணி.

64. வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய தூதன் சகோ. பிரன்காம் என்ற உபதேசத்தில் தீவிரமாக இருந்தவர்கள் பிரன்காம் கிறிஸ்து கூட்டத்தினர். ஆதலால் இந்த கிறிஸ்து பிரன்காம் உபதேசம் குறித்து ஏழாம் சபைக்கால தூதன் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல், இரண்டாவது பாகம் 1209 பக்கத்தில், 24வது பத்தியிலிருந்து கூறுவதை கவனியுங்கள்.

65.பத்தி 24. நான் எப்பொழுதும் விரும்பியிருக்கிற காரியம் யாதொன்றும் எனக்கு இருக்குமென்றால், என் இருதயத்தின் வாஞ்சைகள் என்னவெனில், என்னுடைய ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையான ஊழியக்காரனாக இருக்க வேண்டும் என்பதேயாகும். என்னுடைய சாட்சி சுத்தமானதாகவும், தெளிவானதாகவும் உடையவனாக நான் நிற்க வேண்டுமென்பதையே நான் விரும்புகிறேன். என்னிடம் எத்ததையோ பிழைகள் இருந்தன; ஆயினும் நான் அவரை என் முழு இருதயத்தோடும் நேசிக்கிறேன்.

66.பத்தி 25. நான் ஊழியத்தைவிட்டு விலகுகிறேன் என்று கூறும்படி நிர்பந்தப்படுத்தப்பட்டுள்ளேன். ஏனெனில் ஜனங்கள் மத்தியில் ஒரு காரியம் எழும்பியுள்ளது. அதுவே நான் அவ்வாறு கூறும்படி செய்திருக்கிறது. அதென்னவெனில், நான் ஊழியக்காரன் அல்லது ஒரு சகோதரன் என்று அழைக்கப்படும் அடைப்புக் குறியிலிருந்து எடுக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து என்று அழைக்கப்படுகிறேன். அவ்விதமாக என்னை அழைப்பது எனக்கு அந்திக்கிறிஸ்து என்ற பட்டத்தைச் சூட்டிவிடும். நான் அவரை ஒரு அந்திக்கிறிஸ்துவாக சந்தித்து அவரைவிட்டு அகற்றப்படுவதற்கு முன்னர், ஊழியத்தைவிட்டு விலகி ஓடிப்போனவனாகவே சந்திக்க விரும்புகிறேன்.

67. இந்த பிரன்காம் கிறிஸ்து உபதேசம் தான் எனது இரு பையன்கள் வேலை செய்து வந்த கம்பெனியின் முதலாளிக்கும் அவரது உயர்ந்த மட்ட அதிகாரிகளுக்கும் எனக்கும் மத்தியில் ஒரு பெரிய பிரச்சனையாக உருவெடுத்து, அதன் மூலமாக எனக்கும் அவர்களுக்கும் இடையில் இருந்த உறவுக்குப் பாதகம் வந்தது. அதோடு மட்டுமல்ல, அது என் மகன் ஒருவனுடைய வேலைக்கும் பாதகம் விளைவித்தது. அவர் ஒரு அசெம்பிளி ஆப் காட் சபை விசுவாசி. சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் பெயரை உச்சரித்தாலே அவர்களுக்கு அலர்ஜி வந்து விடுகிறது. இந்த பிரன்காம் கிறிஸ்து கூட்டத்தார் அநேகருக்கு இடறலாகவே இருந்து வருகிறார்கள். இவர்களால் உண்மையான ஊழியக்காரர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அதோடு மட்டமல்ல இக்காலத்திற்குரிய செய்தியும் இவர்களால் தூஷிக்கப்படுகிறது.

68. பத்தி 30. நான் கிறிஸ்து என்று கூறுகிறதான எல்லாவிதமான கடிதங்களும், தொலைபேசி அழைப்பு மூலம் கூறுவதும் கடந்த சில நாட்களில் எனக்கு வந்துள்ளன. சகோதரரே, அது பிசாசினுடைய பயங்கரமான, வெட்கக்கேடான, தேவபக்தியற்ற ஒரு பொய்யாகும். பார்த்தீர்களா? நான் உங்களுடைய சகோதரன் என்பதை உணருங்கள். அவ்விதமாதக் கூறுவது, கிறிஸ்துவை நேசிக்கிற எந்த ஒருவனையும் ஊழியத்தை விட்டு ஓடிப்போக செய்துவிடும்.

69. பத்தி 33. அநேக சமயங்களில் மக்கள் என்னை தீர்க்கதரிசி என்று அழைக்கும்போது, அதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஏனெனில், ஆங்கில மொழிப்பெயர்ப்பு புதிய ஏற்பாட்டில் தீர்க்கதரிசி என்றால் ஒரு பிரசங்கி என்றும் தீர்க்கதரிசனம் உரைப்பவன் என்றும் வார்த்தையை முன்னுரைப்பவன் என்றும் பொருள்படும். அப்படி அழைத்தபொழுது நான் ஓடிப்போய்விடவில்லை. ஏனெனில் அதையெல்லாம் நாம் சகித்துக்கொள்ளலாம். ஆனால் அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்து என்று அழைக்கப்படும் நிலைக்கு வரும் போது, அது என்னால் தாங்கிக்கொள்ள முடியாத காரியமாக இருக்கிறது. எனவே என்னால் அதை சகித்துக் கொள்ள முடியவில்லை.

70. பத்தி 34. எஸ்கிமோக்கள் அல்லது இந்தியர்கள் மத்தியிலும் அவ்விஷயம் பரவியிருக்கக் கண்டேன்.

71. பத்தி 35. அது என்னை முழுவதுமாக மனமுறிவடையச் செய்துவிட்டது...... 39 ஆண்டுகால ஊழியமானது பிசாசின் சாக்கடைக் குழாயில் ஆழத்தில் விழுந்துவிட்டதே என்பதை எண்ணுகையில் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

72. பத்தி 38. இதையெல்லாம் கூறுவது என்னுடைய சத்துருவாயிருந்தால் அதைப்பற்றி பரவாயில்லை. நான் அதைப்பற்றி கேள்விப்பட்ட மாத்திரத்தில் அதைக் குறித்து நகைத்து என் வேலையை செய்து கொண்டேயிருந்திருப்பேன். ஆனால் இதையெல்லாம் கூறுவது விலையேறப்பெற்ற சகோதரனோ, விலையேறப்பெற்ற சகோதரியாகவோ இருக்கும்போது அதுவே என்னைப் புண்படுத்துகிறது.

73. பத்தி 44. நீங்கள் என்னை விசுவாசிப்பீர்களாயின், இது உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும் : நீங்கள் என்னை கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று விசுவாசிப்பீர்களாயின் அப்பொழுது ஒரு காரியம் உங்களுக்கு ஞாகமிருக்கட்டும்: அதென்னவெனில், அப்போதகம் சத்தியத்திற்கு விரோதமான நெறிப்பிரண்டதாக இருக்கிறது. அது பொய்யானதாக இருக்கிறது. கர்த்தர் உரைக்கிறதென்னவென்றால் அது முறைகேடானதாக இருக்கிறது.

74. பாருங்கள், இவ்வாறாக ஏழாம் சபைக்காலத் தூதன் சகோ. பிரன்காம் : தான் கிறிஸ்து அல்ல என்று கூறினாலும், இல்லை, இல்லை அது உமக்கு தெரியாது, நீர் தான் கிறிஸ்து, நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவையே சேவிப்போம் என்று கூறி கிறிஸ்தவ விசுவாச கப்பலை சேதப்படுத்தும் சகோ. ஆனந்தவேல் போன்றவர்கள் சாத்தானினால் இழுக்கப்பட்டு விசுவாசத்தைச் சீர்குலைத்து வருகிறார்கள். ஆனால் இந்த உபதேசம் விரைவில் மரித்துவிடும் என்று தீர்க்கதரிசி 43வது பத்தியில் கூறியபடி, அந்த உபதேசம் மரித்துக்கொண்டே வருகிறதை நாம் காண்கிறோம். முன்நாட்களில் அவர்கள் மத்தியில் இருந்த எழுப்புதல் இந்நாட்களில் அணைந்துவிட்டதே. நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் அன்பு கூறுகிறீர்களா என்று உங்களை சோதிக்கவே அப்படிப்பட்ட உபதேசங்களை தேவன் உங்களுக்குள் அனுமதித்தார்.

75. யோவான் வணங்கிய அந்தத் தூதன் குறித்து ஏழாம் சபைக் காலத் தூதன் என்ன கூறுகிறார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள தவறக்கூடாது.
அ) திவ்வியவாசகனாகிய பரிசுத்த யோவான் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை எழுதுவதற்காக, கர்த்தருடைய தூதனிடத்திலிருந்து வெளிப்படுத்துதலைப் பெற்று அதை எழுதினான் (இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல். பக்கம் 625. பத்தி 29)
ஆ) இது அவர் தம்முடைய தூதனை அனுப்பி யோவானுக்குத் தெரியப்படுத்தினார். அந்தத் தூதன் யார்? என்பது நமக்குத் தெரியாது. அந்தத் தூதன் யார் என்பதை பற்றி வேதமும் ஒன்றும் கூறவில்லை. ஆனால் அந்தத் தூதன் ஒரு தீர்க்கதரிசி. அது எலியாவாகயிருக்கக்கூடும். தீர்க்கதரிசிகளில் ஒருவனாக இருக்கக்கூடும். யோவான் அப்போஸ்தலனாயிருந்தான். ஆதலால் இத்தீர்க்கதரிசி அனுப்பப்பட்டான். (இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்துதல், பக்கம் 29, பத்தி 112 & 113) பிரியமானவர்களே, நீங்கள் இதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம். இதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்.

76. அந்தத் தூதன் எலியாவாக இருக்கலாம் என்று ஏழாம் சபைக்காலத் தூதன் கூற பிரன்காம் கிறிஸ்து பக்தர்களைப் போன்று நம்மில் அநேகர் நோ, நோ அது எலியாவாக இருக்கமுடியாது. இக்காலத்துக்குரிய எலியா நீங்கள் தான் எங்களுக்கு, நீர் தான் எங்களுக்கு எல்லாம், நீர் ஆதி முதலாம் அதி. முதலாம் வசனம் முதல் வெளி.22 அதி. 21 வசனம் வரை அறியாதது ஒன்றுமில்லை. ஆதலால் அந்தத் தூதன் நீர் தான், நீர் தான் யோவானுக்கு காட்சியாகமத்தைக் காண்பித்தீர். நீர் அறியாதது ஒன்றுமில்லை. எல்லாம் பிரன்காமே, எங்களுக்கு எல்லாம் பிரன்காமே என்று துதிபாடும் பாஸ்டர் பி.எம்.ஏ.சாமி. மற்றும் வளசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் போன்றவர்கள் யோவான் வணங்கிய அந்தத் தூதன் ஏழாம் சபைக்காலத் தூதனாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் என்று கூறி தங்கள் உபதேசத்தினால் சபையை பாழாக்கி வருகிறார்கள். இவர்களது ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல் பேய்த்தனத்துக்கடுத்ததாயிருக்கிறது என்று

77. அது எலியாவாக இருக்கலாம் என்று கூறினவுடன் நமது புள்ளிகள், சகோ.பிரன்காம் எலியாவின் ஆவியை உடையவர் தானே, ஆதலால் அந்தத் தூதன் சகோ.பிரன்காம் தான் என்று சாதிக்கிறார்கள். ஒரேவிதமான ஊழியத்தைக் குறிக்க அது எலியாவின் ஆவி என்று அழைக்கப்படுகிறது. தேவஆவி எலியா மீது வல்லமையாகத் தங்கியிருந்தது. அதே ஆவி இரட்டிப்பான வல்லமையோடு எலிசாவின் மேல் அமர்ந்தது. நூற்றாண்டுகள் கழித்து இந்த எலியாவின் ஆவி யோவான்ஸ்நானன் மீது இறங்கியது. புறஜாதிகளின் சபைக்காலம் முடிவடையும் தருணத்தில் அந்த ஆவி ஒரு மனிதன் மேல் இறங்கி அதே விதமான ஊழியத்தைக் கொடுக்கும் (ஏழு சபைக்கால வியாக்கியானம், பக்கம் 309, பத்தி 2) இது மோசேயின் மேலிருந்த தம்முடைய ஆவியை, தேவன் 70 மூப்பர்கள் மேல் வைத்தது போன்றதாகும். எண்.11:25.

78. மேலும் கே.ப.189ல் சகோ.பிரன்காம் தான் சொல்லுக்குச் சொல் சரியான எலியா கிடையாது. தான் ஒரு புறஜாதி என்கிறார். And the man of the seventh angel messenger at the end of the Laodicean age will not the litereal Elijah, he will be a gentile to his people.

79. மேலும் செய்தி ஷாலோம், பத்தி 170ன் படி ஏழாம் தூதனின் செய்தியே சபைக்குக் கடைசிச் செய்தி. ஆதலால் இந்தக் கடைசிச் செய்தியை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் இந்த செய்தியோடு தங்கள் கருத்தை கூட்டி அந்தத் தூதன் சகோ.பிரன்காம் தான் எனக் கூறும் பாஸ்டர் பி.எம்.ஏ.சாமி, பாஸ்டர் சாமுவேலின் ஆவிக்குரிய நிலையை நீங்களே நிதானித்துக்கொள்ளுங்கள்.

80. பாருங்கள் ஆங்கிலத்தில் keep your skirts clean என்ற ஒரு பழமொழி உண்டு. அதன் அர்த்தம் என்னவென்றால்சந்தேகமுள்ள காரியங்களில் தலையிடாதே. இவைகளில் தலையிட வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தாலும், மற்றவர்கள் இவைகளில் சிக்க வைக்க முயற்சித்தாலும், இவைகளை விட்டு விலகி நேரான பாதையில் நாம் செல்ல வேண்டும் என்பதாகும். தேவனுடைய வார்த்தை, இக்காலத்துக்குரிய செய்தி எங்கு அமைதலோ அங்கு நாம் அமைதலை கடைபிடிக்க வேண்டும். எங்கு அது பேசுகிறதோ அங்கு நாம் பேசவேண்டும். எங்கு கமா (,) காணப்படுகிறதோ அது கமாவாகவேயிருக்கட்டும், அதை நீட்டிச் சென்று நம்முடைய சுயக் கருத்தை அதில் சேர்த்து நாம் அதற்கு முற்றுப்புள்ளி (.) வைக்கக்கூடாது. செய்தியானது சபையின் தூதனுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. அது பாஸ்டர் பி.எம்.ஏ. சாமிக்கும், பாஸ்டர் சாமுவேலுக்கும் அல்ல.

81. கடைசிச் சபைச் செய்தியாளனுடைய பணி என்ன? மணவாளனுக்கு மணவாட்டியை, பரிசுத்தவான்களை ஆயத்தம் செய்வதாகும். அது தான் அவனுடைய செய்தியாகும். (சாயங்கால செய்தியாளன் பத்தி 249)

82. ஆதலால் பிரியமானவர்களே, செய்தி என்ன கூறுகிறதோ அதில் நிலைத்திருங்கள். உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லையென்றும் சொல்லுங்கள், இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்.

83. சபையில் கள்ள, கபடமுள்ள வேலையாட்கள் உண்டு. 2கொரி.11:13. கள்ளப்போதகர்கள் உண்டு. 2பேது.2:1. தந்திரமான போதனைகள் உண்டு. எபே.4:14. கூலிக்காக (தசமபாகம் மற்றும் காணிக்கைக்காக) மாரடிக்கிறவர்கள் உண்டு. யோ. 10:13. பகுத்தறிவு இல்லாத மேய்ப்பர்கள் உண்டு. ஏசா. 56:11 கள்ளச் சகோதரர்கள் உண்டு. 2 கொரி.11:26. இவர்கள் தேவனுடைய வார்த்தையை மாற்றுவது கிடையாது. மாறாக தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்துக்குரிய செய்திக்கு தவறான வியாக்கியானம் கொடுத்து, தேவனுடைய வார்த்தையை விட்டு உங்களை விலகச் செய்வார்கள். பாஸ்டர் சாமியும், பாஸ்டர் சாமுவேலும் இதைத்தான் செய்துகொண்டு இருக்கிறார்கள். இவர்களுடைய ஊழித்தைக் குறித்து இதை உங்களுக்கு எச்சரிக்கையாக எழுதுகிறேன். சபையில் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்தவர்கள் உண்டு. 2 கொரி. 11:13-15 இதனால் சபையில் தேவனுடைய வார்த்தையில், இக்காலத்திற்குரிய செய்தியில் கூட்டுதல், குறைத்தல் உண்டு. தவறான போதனைகள் உண்டு. இவர்கள் வெளிப்பாடு என்று கூறிக்கொண்டு, தேவனுடைய வார்த்தையோடு, இக்காலத்திற்குரிய செய்தியோடு, தங்கள் சுயகருத்துக்களைச் சேர்த்து செய்தியை தங்கள் சுயநோக்கத்திற்கேற்றவாறு, விருப்பத்திற்கேற்றவாறு அமைத்து விடுகிறார்கள்.

84. இப்பொழுது கவனியுங்கள், இங்கு யோவான் என்ன கூறுகிறான்? அப்பொழுது இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்துக்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன். அது ஏழு கொம்புகளையும், ஏழு கண்களையும் உடையதாயிருந்தது. அந்தக் கண்கள் பூமி எங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம். வெளி. 5:6.

85. அதாவது இந்த ஏழு கண்கள் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்பட்டு அதன் வல்லமையினால் ஊழியம் செய்யும் ஏழு மனிதர்களாகும். ஒரே ஆவி, தேவன் ஒரு ஆவி. யோ. 4:24, அதாவது தேவனுடைய ஆவியாகிய பரிசுத்த ஆவி ஏழு மனிதர்களின் ஜீவியத்தின் மூலம் ஊழியத்தை ஏழு சபைக் காலங்கள்தோறும் தொடர்ச்சியாய் நடத்திக்கொண்டு வருகிறது. அந்த மனிதர்கள் ஏழு சபைக்காலத் தூதர்கள். ஆக ஏழு ஆவிகளும் ஏழு சபைக்காலத் தூதர்கள். ஏழு ஆவிகளும் தேவனுடைய ஒரே ஆவியாக இருந்து, வித்தியாசமான ஏழு சபைகாலங்களில் தேவனுடைய ஒரே ஆவியாக இருந்து, வித்தியாசமான ஏழு சபைக்காலங்களில் தேவனுடைய சித்தத்தையும், அந்தந்தக் காலத்துக்குரிய தேவனுடைய வார்த்தையையும் நிறைவேற்றின. அத்தூதர்கள் அவருடைய கரத்தில் அவருடைய ஆதிக்கத்துக்குள் இருந்து கொண்டு, அவரது வலது கரத்திலுள்ள ஒளியையும், வல்லமையையும் கொடுத்துக் கொண்டிருக்கிறதாக இருக்கிறார்கள். அவர்களே அவரது வலது கரமாயிருக்கிறார்கள் ...... அவர்கள் அவரிடமிருந்து வரும் ஒளியாக அந்தந்தச் சபைக்காலத்துக்கு ஒளியை கொடுத்துக் கொண்டிருக்கிறவர்களாயிருக்கிறார்கள். இது குறித்து இயேசு

கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல், பக்கம் 460 பத்தி 289 தியானியுங்கள். ஆக சகோ. பிரன்காம், கிறிஸ்துவிடமிருந்து வரும் ஒளியாக, லவோதிக்கேயா சபை காலத்துக்கு ஒளியைக் கொடுத்தவராக இருந்தார். அவ்வளவுதான். அதற்கு மிஞ்சினது தீமையாயிருக்கிறது.

86. இங்கு, யோவான் வணங்கிய தூதன் ஏழாம் சபைக்காலத் தூதனும் தீர்க்கதரிசியுமாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் என்பது தவறானது என்பதைக் குறித்து பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின்படி வேத வாக்கியங்களையும், இக்காலத்துக்குரிய செய்தியையும் கொண்டு தியானிப்போம். சத்திய ஆவி உங்களை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்துவாராக. ஆமென். உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவானன் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல, உன் செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாயிருப்பது இந்தச் செய்தியே. அப்படித்தான் கர்த்தருடைய தூதன் உரைத்தார். கே.ப. 123, பத்தி 384. இங்கு நீங்கள் நன்கு கவனிக்க வேண்டும். யோவான் ஸ்நானன் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடி மாற். 1:7, யோ.1:29-31, 3:30-34. ஆனால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு பிரன்காம் முன்னோடி அல்ல. அவர் சபைக்குக் கொடுத்த செய்தி. கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். 1 தெச. 4:6. இந்த ஆரவாரம் தான் இவரது செய்தி.

87. செய்தி எங்கிருந்து வந்தது? ஏழு முத்திரைகளிலிருந்து. அந்த முத்திரை யாருடையது? இயேசு கிறிஸ்துவினுடையது. அப்படியானால் ஏழு முத்திரைகளிலிருந்து வந்த செய்தி யாருடையது? இயேசு கிறிஸ்துவினுடையது. இந்தச் செய்தியை ஏழு தூதர்கள் கொண்டு வந்தார்கள். இவர்கள் தேவ தூதர்கள். இந்த ஏழு தூதர்களிடமிருந்து செய்தியை ஏழாம் சபைக்காலத் தூதன் பெற்று சபைக்குக் கொடுத்தார். இச்செய்தி மணவாட்டியை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்துகிறது. ஏழாம் சபைக்காலத் தூதன் சபைக்கு செய்தியைக் கொண்டு வந்த செய்தியாளன்தான். ஆனால் அவர் அச்செய்திக்குரியவர் அல்ல. அந்தச் செய்திக்குரியவர் இயேசு கிறிஸ்து. ஆதலால் தான் சகோ. பிரன்காம் 10.2.1960ல் தன் சாட்சியில்( Testimony William Branham) தான் இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்னோடியல்ல, தான் கொண்டுவந்த செய்தியே முன்னோடி என்கிறார்.

88. A voice came that shook all around the places there, as John the Baptist was send to forerun the first coming of Christ, the Message that is given you will be the forerunning the Second Coming of Christ. **Not that I would be the forerunner but the Message was the forerunning**. (Testimony of William Branham 10.2.1960 San Juan). இது தமிழில் இதுவரை மொழி பெயர்க்கப்படவில்லை.

89. மேலும் கர்த்தாவே, அழிவுக்கேதுவான களிமண்ணாகிய ஊழியக்காரனை விட்டு பார்வையைத் திருப்பி சர்வ வல்லவராகிய அவரை நோக்கிப் பார்க்கட்டும். நாங்கள் முடிவுள்ளவர்கள் என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். கர்த்தாவே நாங்கள் யாராயிருந்தாலும் சரி, நாங்கள் அழிவுள்ளவர்கள்தான். செய்தியாளன் அல்ல, செய்திதான். அதை அளித்தருளும். (முற்றிலுமானவர், பத்தி 374. நாள் 30.12.1962) ஏழாம் சபைக்காலத் தூதன் நான் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி அல்ல என்று கூறியப்பின் நீர் தான் முன்னோடி என்று கூறுவது பிரன்காம் கிறிஸ்துவின் ஆவியே. அப்படியானால் உங்கள் பாஸ்டர் சாமுவேலிடம் எந்த ஆவி உள்ளது?

90. இந்தச் செய்தித் தொகுப்பின் தலைப்பு உபதேசம் குறித்து நாம் தியானிக்கும் வேளையில் அப்போஸ்தலனாகிய யோவானைக் குறித்தும், தீர்க்கதரிசியாகிய எலியாவைக் குறித்தும் அறிந்து கொள்வது நமக்கு மிக்க அவசியம்.

அ) யோவான் கலிலேயா கடலோரத்தில் செம்படவ தொழில் (மீன் பிடிக்கும் தொழில்) செய்து வந்த செபெதேயு என்பவனுடைய மகன். மத்.4:18 & 21. செபெதேயுவுக்கு பல படகுகள் இருந்ததால், யோவான் ஒரு பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன் ஆவான்.

ஆ) இவனது ஊர் பெத்சாயிதா.

இ) இயேசுவுக்கு பணிவிடை செய்துவந்த ஸ்திரீகளில் ஒருத்தியாகிய சலோமே என்பவள் செபேதேயுவின் மனைவி. யோவானின் தாய். மாற். 15:40, 16:1 இந்த சலோமே இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரி.

ஈ) யோவான்ஸ்நானன் பிரசங்கம் செய்து வந்த காலத்தில், யோவான் அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு வந்தான். யோ. 1.40 யோவான்ஸ்நானன் இயேசுவைக் குறித்து சொன்ன சாட்சியைக் கேட்டு இயேசுவின் சிஷனானான். இயேசு தமது ஊழியத்தை ஆரம்பித்தபோது இவன் சகோதரனாகிய யாக்கோபையும், மற்றும் பேதுரு, அந்திரேயாவையும் அழைத்தார். யோவானுக்கும், யாக்கோபுவுக்கும் பேதுரு, அந்திரேயா நண்பர்கள். பேதுருவும் அந்திரேயாவும் சகோதரர்கள். மத்.4:18, மாற். 1:16-20. இயேசு தெரிந்து கொண்ட அப்போஸ்தலர்கள் பன்னிருவரில் யோவான் நான்காவது இடத்தில் இருந்தான். யாக்கோபையும் யோவானையும் இடி முழக்கத்தின் மக்கள் (பொவனெர்கேஸ்) என்று இயேசு பெயரிட்டார். இது இவர்களது வைராக்கியத்தையும், ஆத்திரக் குணத்தையும் குறிக்கிறது.

உ) யோவான், இயேசு கிறிஸ்துவினால் அதிகமாக நேசிக்கப்பட்டான். இவன் இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்தான். யோ. 13:23, 21:19.

ஊ) இயேசு தம்முடைய தாயாகிய மரியாளை தனக்குப் பின் பராமரிக்கும் பொறுப்பை இவனிடமே ஒப்படைத்தார். யோ 19:26. இதனால் இவன் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் என்று கருதப்பட்டான். யோ. 21:7. ஆதலால் இவன் அன்பின் அப்போஸ்தலன் எனவும் அழைக்கப்பட்டான்.

எ) இவன் இயேசு கிறிஸ்துவின் பாடு மரணவேளையில் அவருடனே கூட இருந்து அவரை சிலுவையில் அறையும் காட்சியைத் தன் கண்களினால் கண்டான். யோ 19:35.

ஏ) மூன்றாம் நாள் இயேசு உயிரோடு எழுந்த பின் பேதுருவுடன் ஒருமித்து ஓடிச்சென்று சீக்கிரமாய் கல்லறையினிடத்துக்குப்போய் அவருடைய உயிர்தெழுதலைக் குறித்து நிச்சயப்படுத்திக் கொண்டான். யோ 20:3.

ஐ) இயேசு பரத்துக்கேறிய பின் அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து பயமின்றிச் சாட்சியாக அறிவித்தான். அப் 4:13-20.

ஒ) யோவான் ஒரு அஞ்ஞானி அல்ல. இவன் வேத வாக்கியங்களை நன்கு அறிந்தவன். மூன்று சுவிசேஷகர்களை விட இவன் தன் சுவிசேஷத்திலும் மற்றும் நிருபங்களிலும் இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையையும், மனிதத்தன்மையையும் விளக்கமாக எழுதுகிறான். யோ.1அதி. 1யோ. 1,4 & 5 அதிகள். இயேசு கிறிஸ்துவின் மகிமையைக் கண்டவன். வெளி. 1:13. தன் சுவிசேஷத்தை கி.பி.85-90 லும் தனது நிருபங்களை கி.பி. 90-95 லும் எழுதினான். தனது நிருபங்களில் கீழ்படிதலைக் குறித்து வற்புறுத்தி புத்தி சொல்வதோடு மட்டுமல்ல கள்ளப்போதகர்களைக் குறித்து கடுமையாக எச்சரிக்கிறான். கள்ளப்போதகர்களையும் அவர்களுடைய போதனைகளையும் குறித்து மந்தையில் உள்ள ஆடுகளை எச்சரித்து காக்கவேண்டியது ஒவ்வொரு உண்மையும் உத்தமுமான மேய்ப்பனுடைய, ஊழியக்காரனுடைய கடமையாயிருக்கிறது. இந்தக் கடமையைச் செய்வதினால் தான் ஒரு ஊழியக்காரன் பலரால் பகைக்கப்படுகிறான்.

ஓ) ரோமராயன் கொதிக்கிற எண்ணெயில் இவனை அமிழ்த்தும்படி செய்த போது, அற்புதமான வழியில் காக்கப்பட்டான்.

ஔ) இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் பத்மு என்னும் தீவில் ரோமராயன் டொமிட்டியனினால் கைதியாக சிறையில் அடைக்கப்பட்டான். இங்குதான் இயேசு கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்படுத்துதலை பெற்றான். இங்குதான் கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளாகி, கிறிஸ்துவின் மகிமையைக் கண்டான். வெளி 1:13-20. இங்கிருந்துதான் வெளிப்படுத்தின விஷேசம் புத்தகத்தை எழுதினான்.

ஃ) ரோமராயன் மரித்தபின்பு இவன் எபேசு பட்டணத்திற்கு வந்து, அங்கு சபை போதகனாக ஊழியம் செய்தான்.

க) ரோமராயனாகிய திராஜன் அரசாண்ட காலத்தில் ஏறக்குறைய நூறு வயதில் மரித்தான்.

கா) இவன் ஒரு அப்போஸ்தலன் மட்டுமல்ல. தீர்க்கதரிசியும் கூட என்று இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல், பாகம் 1, பத்தி 113ல் மற்றும் பக்கம் 137, பத்தி 88ல் வாசிக்கிறோம்.

கி) இவன் வேதசாஸ்திர பயிற்சிசாலையில் எந்தவித பயிற்சியும் பெற வில்லை. விசேஷித்த கல்விமானும் இல்லை. இவனுடைய ஆவிக்குரிய பயிற்சி எல்லாம் இயேசு கிறிஸ்துவோடு மூன்றரை ஆண்டுகள் இருந்து பெற்ற அனுபவமே.

91. இப்பொழுது திஸ்பியனாகிய எலியா தீர்கத்தரிசியையும், அவனுடைய ஊழியத்தையும் குறித்து நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்.

அ) எலியா என்பதற்கு யேகோவா என் தேவன் என்று பொருள்.

ஆ)இவனுடைய வாழ்க்கை வரலாற்றை நாம் 1இரா.17,18,19&21 அதிகாரங்களிலும்; 2 இரா.1&2 அதிகாரங்களிலும் காணலாம்.

இ) இவன் கிலேயாத் நாட்டின் திஸ்பி என்னும் ஊரில் பிறந்தவன் 1 இரா. 17.1.

ஈ) இவன் ஒரு தீர்க்கதரிசி. 1 இரா. 17:1. இவன் இஸ்ரவேலில் உள்ள அனைத்து தீர்க்கதரிசிகளிலும் மிக்க விசித்திரமான, பயபக்தியுள்ள தீர்க்கதரிசி. இவன் ஆகாப், அகசியா என்னும் இஸ்ரவேல் இராஜாக்கள் காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தான்.

உ) எலியாவின் ஆவி கிறிஸ்துவின் ஆவி (ஏழு முத்திரை, பக்கம் 472, பத்தி 2)

ஊ) எலியாவினுடைய ஜீவியம் ஒரு சந்நியாசி நிலைக்கடுத்ததாய் இருந்தது. எலியா கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாக திகழ்ந்த ஒரு மகத்தான தீர்க்கதரிசி என்று இக்காலத்துக்குரிய செய்தி கூறுகிறது. (அழுத்தத்தை வெளியேற்றல், பக்கம் 35, பத்தி 124)

எ) இயேசு பூமியில் இருந்த காலத்தில் இயேசுதான் எலியா என்று சிலர் எண்ணினார்கள். மாற் 6:15, 8:28.

ஏ) மறுரூப மலையில் கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்படும் உயிருள்ள பரிசுத்தவான்களுக்குச் சாயலாக எலியா அங்கே நின்றான். மரித்த பரிசுத்தவான்களுக்கு சாயலாக மோசே அங்கு நின்றான். இவர்கள் இருவரும் உயிர்ப்பிக்கும் வல்லமையை பெற்றிருந்தார்கள். மரித்தாலும், மரிக்காமல் இருந்தாலும் இவர்கள் அங்கே நின்றார்கள். (இது சூரிய உதயம், பக்கம் 77, பத்தி 2) சுழல் காற்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட எலியா 900 ஆண்டுகள் கழித்து, இயேசு கிறிஸ்துவுடனும், மோசேயுடனும் மகிமையில் காணப்பட்டான். லூக். 9:31.

ஐ) எலியா பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். (அவன் சபைக்கு அடையாளம்) சரிதான். எலியா. எலிசா உயிர்தெழுதல் வரைக் காத்திருந்தான். இந்த இரண்டு தீர்க்கதரிசிகளுமே சபைக்கு முன் அடையாளமாக இருந்தார்கள். (இது சூரிய உதயம், பக்கம் 73 பத்தி 1)

ஒ) தன்னுடைய பெயருக்கு ஏற்றபடி கர்த்தரே தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள், பாகால் தெய்வமானால் அவனைப் பின் பற்றுங்கள் என்று முழக்கமிட்டு விக்கிரக வழிபாட்டை இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் உடைத்தெரிந்தான். அவன் காலத்தில் மார்க்கக் கொள்கைகளை சரியாகப் பின்பற்றாதவர்களை, மதத்தலைவர்களை, நேர்மையற்றவர்களை, நேர்மை இழக்கச் செய்கிறவர்களை எதிர்த்தான். 1 இரா.19:1. இந்த ஆவியைக் கொண்டுதான் சகோ. பிரன்காம், ஏழாம் சபைக் காலத் தூதன் திருத்துவ வழிபாட்டை, ஸ்தாபன சபை கோட்பாடுகளை உடைத்தெறிந்தார். கர்த்தரே தெய்வம் என்று எலியா முழக்கமிட்டதுபோல் பழைய ஏற்பாட்டின் யேகோவா புதிய ஏற்பாடு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என பிரன்காம் முழக்கமிட்டார். எலியாவின் ஆவி சகோ. பிரன்காமின் மேல் தங்கி எலியாவின் ஊழியத்தைப் போன்றதொரு ஊழியத்தைச் செய்தது.

ஓ) சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்கு வெகு பக்தி வைராக்கியமாயிருந்தவன். 1 இரா. 19 :10

92. அவர் அங்கு (மறுரூப மலையில்) என்ன மறுபடியும் செய்துகொண்டிருந்தார்? அவர் தம்மை வேறொரு தோற்றத்தில் வெளிப்படுத்தினார். அவர் எந்த நிலையில் இருந்தார்? மகிமைபட்ட, மறுரூபப்பட்ட நிலையில், அவர் எப்படி வரப்போகிறாரோ அப்படி மறுரூபமடைந்த மகிமைப்பட்ட கிறிஸ்து ...... அவர் மகிமையின் மேகங்களுடன் வரப்போகிறார்.... இப்பொழுது கவனியுங்கள், அவர் நின்றுகொண்டிருக்கிறதை அவர்கள் கண்டார்கள். அப்பொழுது மோசேயும், எலியாவும் அங்கு காணப்பட்டனர். அதைக் கவனியுங்கள். மோசே யாருக்கு அடையாளம்? மரித்து கல்லரையில் நித்திரை செய்து கொண்டிருப்பவர்களுக்கு மோசே அடையாளமாயிருக்கிறான். ஏனென்றால் மோசே மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். அவன் அடக்கம் பண்ணப்பட்ட இடம் யாருக்குமே தெரியாது. நித்திரை அடைந்தவர்களுக்கு அவன் அடையாளமாயிருக்கிறான். அவர் வரும் போது அவருக்குள் நித்திரையடைந்தவர்களுக்கு. மரிக்க அவசியமில்லாமல் மறுரூபமாகிறவர்களுக்கு எலியா அடையாளமாயிருக்கிறான். பேதுருவும், யாக்கோபும், யோவானும் இதோ, எங்கள் தேவன், இவருக்காக காத்திருந்தோம் என்று கூறும் இஸ்ரவேலில் மீதியானவர்களுக்கு அடையாளமாயுள்ளனர். (விளங்காத சத்தம், பத்தி 386-392, டிசம்பர் 18, 1960)

93. பிரியமானவர்களே, மிக்க கவனமாக இதைக் கவனியுங்கள். அந்த ஏழாம் முத்திரை, இன்னும் திறக்கப்படவில்லை. உங்களுக்கு தெரியும். அது அவருடைய வருகை. (எக்காள பண்டிகை, பக்கம் 41, பத்தி 1, ஜூலை 19, 1964.) இந்தச் சபை ஏழாம் முத்திரையின் இரகசியத்தை அறிந்தவுடன் யூதர்கள் ஏழாம் எக்காளத்தின் இரகசியத்தினால் அழைக்கப்படுகின்றனர். அது இரண்டு தீர்க்கதரிசிகள் எலியாவும், மோசேயும். அவர்கள் திரும்பி வருகின்றனர். (பக்கம் 60, பத்தி 3) வெளி.11ல் அவர்களுடைய ஊழியம் மோசேயின் ஊழியமும், எலியாவின் ஊழியமுமாக அமைந்திருந்து, ஏழாம் தூதனின் செய்தி மணவாட்டியை பெந்தெகொஸ்தே பாரம்பரியங்களிலிருந்து வெளியே அழைத்ததுபோன்று, இஸ்ரவேலரை யூதருடைய பாரம்பரியங்களிலிருந்து வெளியே அழைக்கும். (பக்கம் 61, பத்தி 3) பிரியமானவர்களே, இங்கு கவனியுங்கள். ஏழாம் தூதனின் ஊழியத்தைப்போன்ற ஒரு ஊழியம் இந்த இரண்டு சாட்சிகளும் ஏழாம் எக்காளத்தின் கீழ் - ஆறாம் எக்காளத்தின் கீழ், ஏழாம் எக்காளத்துக்கு சற்று முன்பு. (பக்கம் 62, பத்தி 1) பிரியமானவர்களே ஏழாம் சபைக்காலத் தூதன் செய்த ஊழியத்தைப் போன்று இயேசு கிறிஸ்துவின் தெய்வீக தன்மையைப் பிரசங்கித்து, கர்த்தராகியஇயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானத்தையும் பிரசங்கித்து அந்த இரு தீர்க்கதரிசிகளும் இஸ்ரவேலர் மத்தியில் ஊழியம் செய்வார்கள். சகோ. பிரன்காம் புறஜாதி மத்தியில் செய்த அதே ஊழியத்தை அவர்கள் இஸ்ரவேல் மக்கள் மத்தியில் செய்யப் போகிறார்கள். தேவனுடைய இரண்டு ஊழியக்காரர்கள், வெளிப்படுத்துதலில் கூறப்பட்டுள்ள அந்த இரண்டு தீர்க்கத்தரிசிகள் தோன்றி ஏழாம் எக்காளத்தை ஊதி கிறிஸ்துவை அவர்களுக்கு தெரியப்படுத்துவார்கள். (எக்காளப் பண்டிகை பக்கம் 68 நாள் 19.7.1964) வெளிப்படுத்தின விசேஷத்தில் எங்கெங்கு ஏழாம் தூதன் சொல் வருகிறதோ அங்கு சகோ. பிரன்காமைப் பொருத்த வேண்டும் என்று பாஸ்டர் சாமுவேல் உபதேசிப்பது பிரன்காம் கிறிஸ்துவின் ஆவியே.

94. அது மோசேயாக இருக்கமுடியாதென்று யாரோ ஒருவருடைய மனதில் எழுந்ததை உணருகிறேன் ..... அது மோசே தான் ...... மோசே மரித்ததால் அது அவனாக இருக்க முடியாது என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். அது ஏனோக் என்பது உங்கள் கருத்து. மோசே ஏற்கனவே மரித்துவிட்டான் என்று கூறுகிறீர்கள். ஆனால் அவன் மீண்டும் உயிர்பெறமுடியும் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். அவன் உயிர்பெற்றான். 800 ஆண்டுகள் கழித்து அநேக ஆண்டுகளுக்குப் பிறகு அவன் மறுரூப மலையின் மேல் தோன்றினான். ஒரு மனிதன் மரித்தபிறகு? என்று நீங்கள் கேட்கலாம். ஆம் ஐயா, லாசரு மரித்து, உயிரோடெழுந்து பிறகு மரிக்க வேண்டியதாயிற்று. நிச்சயமாக. (பக்கம் 60, பத்தி 4 மற்றும் 5)

95.எலியாவில் இருந்த கிறிஸ்துவின் வெளிப்படுத்துதலை அவர்கள் கண்டார்கள். (கிறிஸ்து தேவனுடைய பரம இரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார். பக்கம் 69, பத்தி 1, ஜூலை 28, 1963)**They seen the revelation of Christ that was in Elijah.** சகோ. பிரன்காமில் இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்துதலை அவர்கள் காணவில்லை.

96. சகோ.தேவன் எடுக்கப்படுதல் மூலம் எலியாவை எடுத்துக்கொண்ட பின்பு தம்முடைய ஜனங்களுடைய மத்தியில் அவன் தீர்க்கதரிசியின் ஸ்தானத்தை எடுக்கும்படி திரும்பவும் அவனை பெயர்த்து நடுகிறார். அதிசீக்கிரமாய் அதைச் செய்யப்போகிறார். 2500 வருடம் அவனை உயிரோடே வைத்திருந்து அவன் தன்னை திரும்பவுமாக காண்பிக்க இருக்கிறான். மோசேயை மரித்தோரில் இருந்து எழுப்பினார்..... பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயின் சரீரத்தைக் குறித்து பிசாசுடனே தர்க்கித்து பேசினபோது, கர்த்தர் உன்னை கடிந்து கொள்வாராக என்றான். ஆனால் பேதுரு, யோவான், யாக்கோபு மணவாடி வாழப்போகிறதான அதே மலையின் மேல் மறுரூப மலையின் மேல் சரியாக நின்றுகொண்டு மோசேயைக் கண்டார்கள்.

97. எடுத்துக்கொள்ளப்பட்ட சபையும் நித்திரையாயிருந்த சபையும் அங்கு அடையாளங்களினால் காட்டப்பட்டது. அந்த மூன்று சாட்சிகளையும் அந்த மலையின் மேல் பேதுருவும், யாக்கோபும், யோவானும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பரலோக சாட்சிகளாக எலியாவும், மோசேயும், இயேசுவும் அங்கே நின்றுகொண்டிருந்தார்கள். மரித்தோர் உயிரோடெழும்புவதற்கு உதாரணமாக மோசேயும் உயிரோடு எடுக்கப்பட்ட சபைக்கு உதாரணமாக எலியாவும் இன்றும் உயிரோடு அங்கு நின்று கொண்டிருந்தனர் ...... ஓ சகோதரரே, சகோதரியே மரணம் உங்களை மாற்றப்போடுவது இல்லை. மரணம் உங்கள் வாசஸ்தலத்தை மட்டுமே மாற்றுகிறது. சாமுவேல் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, பரதீசுக்கு சென்று எந்தோர் தேசத்து குறிசொல்பவள் சாமுவேலை அழைத்தபோது, சவுல் அவனை யார் என்று அறிந்து கொண்டான்..... சாமுவேல் ஒரு சிறு அணுவும் மாறவில்லை. அவன் அதே சாமுவேலாகவே இருந்தான். அவன் மரித்து இரண்டு வருடம் ஆன பின்பும் அவன் தீர்க்கதரிசியாகவே இருந்தான்.... ஆகவே வெளிப்படுத்தின விஷேசம் 11ம் அதி. யின் நிறைவேறுதலாக மோசேயும், எலியாவும் திரும்ப வரும்போது அவர்கள் தீர்க்கதரிசிகளாகவே இருப்பார்கள்.

அல்லேலூயா! (பரலோக மணவாளன் மற்றும் பூமிக்குரிய மணவாட்டியின் வருங்கால இருப்பிடம், பக்கம் 94, பத்தி 3 முதல் பக்கம் 95, கடைசி பத்தி வரை ஆகஸ்ட் 2, 1964)

98.And after while down from the heaven came a chariot of fire and Angels of fire, horses of fire, and Elijah stepped in and went up unto glory. He never tasted death, he was translated, he's got to die! And if you will watch these two prophets of Revelation 11, they do the very same thing that Moses and Elijah done. You say, brother Branham, do you mean to tell me that Elijah and Moses still alive? Absolutely! At mount Transfigration, before Jesus went to Calvary, there stood both Moses and Elijah standing there talking to Him. Certainly, they did, they are not dead. And they had never died: they're mortals, they got to die. So they're just in a glorified state waiting for that time. And then when they come back and preach exactly three and half years under the anointing of the Baptism fo Holy Ghost, While blessings is taken from the Gentiles..... they were hunted down and killed...... And they laid on the streets for three days and nights. And then at the end of the three and a half days the spirt of life came into them and they rose up. They had to die like other mortals: they had to do it (Hebrews, Q&A. Part III. para 724-728)

99. மேற்கூறிய ஆங்கிலப்பகுதியிலிருந்து நாம் அறிந்து கொள்வதென்ன? எலியா மரணத்தை ருசிபார்க்காமல் எடுத்துக்கொள்ளப்பட்டு, மகிமைக்குள் பிரவேசித்தான். அவன் மரிக்கவேண்டும். எலியாவும், மோசேயும் இதுவரை மரிக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் இயேசுவோடு மறுரூப மலையில் காணப்பட்டனர். அவர்கள் மரிக்கவில்லை. ஆனால் மற்ற மனிதர்களைப்போன்று அவர்களும் மரிக்கவேண்டும். அவர்கள் இப்போது மகிமையில் இருந்து சரீரத்தில் மரிப்பதற்கான வேளையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் மூன்றரை ஆண்டுகள் இஸ்ரவேல் மத்தியில் ஊழியம் செய்து கொல்லப்படுவார்கள்.

100.அடுத்து ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனியுங்கள். எலியா எல்லா தேசங்களுக்கும் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தான். மோசே யூதருக்கு மாத்திரம் நியாயப்பிரமாணத்தை அளித்தான். மோசே யூதர்களிடம் மாத்திரமே வருகிறான். அவன் யூதர்களுக்கு தீர்க்கதரிசியாக விளங்கி நியாயப்பிரமாணத்தை அளிக்கிறான். ஆனால் எலியா எல்லா தேசங்களுக்கும் தீர்க்கதரிசியாக இருப்பதால் அவன் புறஜாதிகளிடமும் வர முடிகிறது. (ஏழு முத்திரை, பழைய பதிப்பு, பக்கம் 384, பத்தி 3)

101.பாருங்கள் எலியாவின் ஆவியையுடைய சகோ. பிரன்காம் ஒரு புறஜாதி தீர்க்கதரிசி. அவர் ஏழாம் சபைக்காலத் தூதன். அவர் ஏழாம் சபைக்கு மட்டுமே வருகிறார். ஆனால் எலியா எல்லா தேசங்களுக்கும் தீர்க்கதரிசி. அவன் யூதர்களிடமும் புறஜாதியிடமும் வருகிறான். வெளிப்படுத்தின விஷேசம் சம்பவங்கள் யாவும் புறஜாதி சபைக்கு மட்டுமல்ல. அவைகள் யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் சம்பந்தப்பட்டதாகும். வெளிப்படுத்துதல் முதல் மூன்று அதிகாரங்கள் சபைக்குரியது. 4 -19 அதிகாரங்கள் இஸ்ரவேலருக்குரியது. மீதமுள்ள அதிகாரங்கள் இரண்டையும் பற்றியது. ஆதலால் புறஜாதி சபைக்கும் இஸ்ரவேலருக்கும் உள்ள காரியங்களை வெளிப்படுத்த இயேசு கிறிஸ்து எல்லா தேசங்களுக்கும் ஒரு பொதுவான தீர்க்கதரிசியையே எடுத்து உபயோகித்திருக்கவேண்டும். அப்படியானால் தேவனுடைய வார்த்தையின்படியும் இக்காலத்திற்குரிய செய்தியின்படியும் அது திஸ்பியனாகிய எலியாவாகத்தான் இருக்கவேண்டும். அது சகோ. பிரன்காமாக இருக்க முடியாது. அவர் எலியாவின் ஆவியையுடைய ஒரு தீர்க்கதரிசியாக புறஜாதி சபைக்கு மட்டுமே இருந்தார். அதுவும் கடைசி சபையாகிய லவோதிக்கேயா சபைக்கு மாத்திரமே அவர் தூதனாக இருந்தார். அவர் மேல் தங்கியது எலியாவின் ஆவி. எலியாவின் ஆவி கிறிஸ்துவின் ஆவி. பாருங்கள், எலியாவின் ஊழியம் புறஜாதியிடமும், இஸ்ரவேலரிடமும். யூதர்களுடன் மோசே மற்றும் எலியா, சகோ. பிரன்காம் புறஜாதிகளிடம் பிரசங்கித்த அதே சுவிசேஷத்தையே பிரசங்கிப்பார்கள். பிரியமானவர்களே பாருங்கள் நாம் தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய வேண்டாம். அவைகளை ஆராய்ந்து பார்ப்போம்.

102. இங்கு நன்கு கவனியுங்கள். யோவான் தரிசனத்தில் நடந்த, நடக்கிற, நடக்கப்போகிற காரியங்களை தரிசனத்தில் கண்டான். எலியாவின் ஆவியைப் பாருங்கள் அன்று எலியா மற்றும் எலிசாவின் மேல். இன்று யோவான் ஸ்நானன் மீது மற்றும் ஏழாம் சபை தூதன் பிரன்காம் மீது. இனி எலியாவாக இஸ்ரவேல் மத்தியில், ஆக மூன்று காலங்களிலும் எலியாவின் ஆவியை தேவன் உபயோகிக்கிறார். ஆம் அவனே மூன்று காலங்களுக்குரிய காட்சிகளையும் யோவானுக்கு தரிசனத்தில் காண்பித்த தீர்க்கதரிசி தூதனாகும்.

103. தேவத்துவத்தைக் குறித்து எலியாவின் ஆவியை அன்றும் இன்றும் நாளையும் பாருங்கள். அந்த ஆவி ஜனங்களை தேவனிடத்துக்குத் திருப்புவதைப் பாருங்கள். கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள். பாகால் தெய்வமானால் அவனை பின்பற்றுங்கள். 1 இரா. 18:21. கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு என்னைக் கேட்டருளும். என்னைக் கேட்டருளும் என்றான். 1 இரா 18:37-39 வசனங்களை வாசியுங்கள். இன்று எலியாவின் ஆவி ஸ்தாபன சபைகளை கடிந்து, கண்டனம் பண்ணி ஒரு கூட்டம் ஜனங்களை ஒரே தேவன் அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் விசுவாசத்திற்கு திருப்பியது. அதாவது ஜனங்களை தேவனிடத்திற்குத் திருப்பியது. நாளை எலியா இஸ்ரவேல் ஜனங்களை யேகோவா தேவன் மீது பக்தி வைராக்கியம் கொண்டிருக்கும் ஜனங்களை அந்த யேகோவா வேறு யாரும் இல்லை . நீங்கள் சிலுவையில் அடித்து கொலை செய்த அந்த இயேசுவே. யேகோவா வேறு யாரும் இல்லை, அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று பிரசங்கித்து இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்திற்கு இஸ்ரவேல் ஜனங்களை திருப்புவான், பாருங்கள். மூன்று காலத்திலும் தேவத்துவத்தை நிலைநாட்டும் எலியாவின் ஆவியை. இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் எலியாவின் ஊழியம் இயேசு கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தப்படுத்த அல்ல, எதையும் சீர்படுத்த அல்ல, மாறாக இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக ஊழியம் செய்யப்போகிறான். ஆம் எலியா மூன்று காலங்களுக்கும்

உரிய தீர்க்கதரிசி. அவனே மூன்று காலங்களிலும் உள்ள காரியங்களை யோவானுக்குத் தரிசனத்தில் காண்பித்த தீர்க்கதரிசியாயிருக்கிறான். அவனே இயேசு கிறிஸ்துவின் தூதன், இவனே 2500 ஆண்டுகளாக உயிரோடு இருக்கிறான். இன்னும் மரணத்தை ருசி பார்க்காதவன். அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருப்பதால் (எபி 9:27) இவன் இஸ்ரவேல் மத்தியில் ஊழியம் செய்து மரணத்தை ருசி பார்ப்பான்.

104. பாருங்கள், இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். எபி. 13: 8 எலியாவில் இருந்த கிறிஸ்துவின் வெளிப்படுத்துதலை அவர்கள் கண்டார்கள். எலியாவின் ஆவி கிறிஸ்துவின் ஆவியாயிருப்பதினால் அது மூன்று காலங்களிலும் கிரியை செய்வதை நீங்கள் காணலாம். இது குறித்து ஏழு முத்திரை, பக்கம் 472ல் தியானிக்கலாம். கடந்தக் காலம் : எலியா மற்றும் எலிசா. நிகழ்காலம் : யோவான் ஸ்நானன் மற்றும் பிரன்காம். வருங்காலம் : எலியா. ஆக முக்காலங்களிலும் எலியாவின் ஆவி கிரியை செய்கிறது. இதன்படி முன்னே நடந்ததும் (கடந்தகாலம்) இப்பொழுது நடக்கிறதும் (நிகழ்காலம்) இனி நடக்கப்போகிறதுமான (வருங்காலம்) காண்பதற்கு யோவான் வெளி.4ம் அதிகாரத்தில் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டான். (எ.மு. பக்கம் 123 பழைய பதிப்பு, கடைசி பத்தி) யோவான் கண்டவைகளையும் (கடந்தகாலம்) இருக்கிறவைகளையும் (நிகழ்காலம்) இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும் (வருங்காலம்) எழுதக் கட்டளைப் பெற்றான். வெளி. 1: 19. இவை அனைத்தையும் முக்காலத்திற்கும் உரிய தீர்க்கத்தரிசியாகிய, எல்லா தேசங்களுக்கும் உரிய தீர்க்கத்தரிசியாகிய திஸ்பியனாகிய எலியா யோவானுக்குக் காண்பித்தான்.

105. மேலும் கவனியுங்கள், அன்று எலியாவின் ஆவி : எலியா என்பதற்கு யேகோவா என் தேவன் என்று பொருள். ஆதலால் அன்று கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள். பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள். என்றான் எலியா 1 இரா 18: 21. எலியா- ஒருவன்- கர்த்தருடைய தீர்க்கத்தரிசி. பாகாலுக்கு 450 தீர்க்கத்தரிசிகள். ஒருவன் 400 தீர்க்கத்தரிசிகளை எதிர்த்து நின்றான்.

இன்று எலியாவின் ஆவி : கர்த்தருடைய தீர்க்கத்தரிசியாகிய பிரன்காம் ஸ்தாப கோட்பாடுகளை, ஸ்தாபனக் கட்டுக்களை உடைத்தார். மணவாட்டியை பெந்தெகோஸ்தே பாரம்பரியங்களிலிருந்து வெளியே அழைத்தது. பிரன்காம் ஆயிரக் கணக்கான ஸ்தாபன பிரபலமான ஊழியர்களை எதிர்த்து நின்றார்.

நாளை எலியாவின் ஆவி : இஸ்ரவேலரை யூதர்களுடைய பாரம்பரியங்களிலிருந்து வெளியே அழைக்கும். பழைய ஏற்பாடு யேகோவா புதிய ஏற்பாடு இயேசு கிறிஸ்து, பாவமன்னிப்பு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் என்று உபதேசித்து யூதர்களுடைய பாரம்பரியத்தை எதிர்த்து நிற்கும்.

106. எலியா தீர்க்கத்தரிசிகளுக்கு அடையாளமாயிருக்கிறான். (கிறிஸ்து தேவனுடைய பரம இரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார். பக்கம் 79, கடைசி பத்தி ) அதோடுமட்டுமல்ல எலியா மரிக்க அவசியமில்லாமல் மறுரூபமாகிறவர்களுக்கு அடையாளமாயிருக்கிறான். (விளங்காத சத்தம், பத்தி 386 -392) ஆதலால் பிரியமானவர்களே, முக்காலத்திற்கும் உரிய, கிறிஸ்துவின் வெளிப்படுத்துதலாயிருக்கிற, எல்லா தேசங்களுக்கும் தீர்க்கத்தரிசியாயிருக்கிற, 2500 ஆண்டுகளாக மரிக்காமல் இன்று வரை உயிரோடிருக்கிற தீர்க்கத்தரிசியாகிய திஸ்பியனாகிய எலியாவின் பாதத்தில் மரியாதையின் நிமித்தமாக, அன்பின் நிமித்தமாக யோவான் விழுந்து வணங்கினான். இதுவே உண்மை, சத்தியம். இந்த ஸ்தானத்தை புறஜாதி தீர்க்கத்திரிசியும், ஏழாம் சபைக்காலத் தூதனுமாகிய சகோ. பிரன்காம் வகிக்கமுடியாது, முடியவே முடியாது!

107. இங்கு நாம் லவோதிக்கேயா சபை தூதன் தான் யோவான் வணங்கிய தூதன் என்ற தவறான உபதேசத்தைக் குறித்து ஆராய்ந்து தியானிக்கும் போது நம்முடைய கண்கள் கிறிஸ்துவை மாத்திரம் மையமாக கொள்ளும்படி பார்த்துக்கொள்வோம். உங்களுடைய கண்கள் பற்பல உபதேசங்களை கொண்டுவரும் நபர்கள் மீது அல்லது அவர்கள் கொண்டுவரும் உபதேசங்கள் மீது மையம் கொள்ளுமானால் நீங்கள் அவர்களது உபதேசங்களில் சற்று உணர்ச்சி வசப்பட்டு அது உங்களை ஒரு மூட பக்தியுள்ளவனாக்கிவிடும். முன் நாட்களில் சகோ. ஆனந்தவேலுடைய உபதேசம் அநேகரை மூட பக்தியுள்ளவர்களாக்கியது போன்று. மேலும் நிங்கள் சற்று குளிர்ந்து போன நிலையில் இருப்பீர்களானால் அது உங்களைச் சாலையின் ஓரத்திற்குக் கொண்டுச் சென்று விடும். ஆதலால் உங்கள் பார்வையை கிறிஸ்து மீது மையமாக வைத்து வேத வாக்கியங்கள் மீது இக்காலத்துக்குரிய செய்தியின் மீது மையம் வைத்து சாலையின் நடு மையத்தில் உங்களை அனல் உள்ளவர்களாய் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் வலதுபுறமோ இடது புறமோ சாய்ந்து விடாதபடி வழி இதுவே. இதிலே நடவுங்கள் என்று ஆவியானவர் கூறும் வார்த்தைகளை கேட்கத்தக்கதாக உங்கள் செவிகளை தேவன் விருத்தசேதனம் செய்வாராக. ஆமென்.

<u>வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய தூதன் பிரன்காம் என்கிற</u>
<u>முதலாம் கள்ள உபதேசம் மற்றும் அதை எதிர்த்த தேவனுடைய வல்லமை.</u>

108. இந்தக் கள்ள உபதேசத்தைக் கொண்டுவந்ததில் முதன்மையானவர் சகோ. ஆனந்தவேல். இவர் பிரன்காம் கிறிஸ்து என்ற உபதேசத்துக்கு முன்னோடி மற்றும் அதில் தீவிரமானவர். அநேக ஆத்துமாக்களை பாதாளத்துக்குள் தள்ளிய பெருமை இவரைச் சாரும். இவருக்கு Voice of God Recording ல் பிரத்தியேகமான மதிப்பும், ராஜமரியாதையும் உண்டு. இவர் 12.6.1992ல் வெளியிட்ட கர்த்தருடைய தூதனானவர் என்ற சுற்றறிக்கையில் வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய தூதன் ஏழாம் சபைத் தூதனும் தீர்க்கதரிசியுமாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் என்று உபதேசித்தார். அதைக்குறித்து சற்று தியானிப்போம். இவரது சுற்றறிக்கையில் இது குறித்து எழுதப்பட்ட காரியங்கள் பக்கம் 12 முதல் 17 வரை அடங்கியுள்ளது. அதை இங்கு எடுத்து எழுதுகிறேன்.

அ) இப்பொழுது அப்போஸ்தலனாகிய யோவானுக்கும், புற ஜாதி ஏழு சபைகளுக்கும், புறஜாதி ஏழு உன்னத சபைகளுக்கும் தேவனுடைய ரகசியங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிற அந்தத் தூதன் யார்? என்று அறிந்து கொள்ள நாம் மிகுந்த ஆவலாயிருக்கிறோம். சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு காண்பிக்கும் பொருட்டு தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும் இவர் தம்முடைய தூதனை அனுப்பி தன்னுடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்தினதுமான விசேஷம். வெளி 1:1. இந்த வெளிப்படுத்துதல் புஸ்தகத்தில் ஒரு இடத்தில் கூட இயேசு யோவானிடத்தில் பேசியது கிடையாது. ஆகையால் யோவானோடு பேசின அந்தத் தூதன் யார் என்பதை நாம் கண்டுபிடிக்க கடமைப்பட்டுள்ளோம். சபைகளில் இவைகளை உங்களுக்கு சாட்சியாக அறிவிக்கும்படி இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். (வெளி 22:16) யோவானுக்கு வெளிப்படுத்தின அதே தூதனே புறஜாதி ஏழு சபைகளுக்கும், புறஜாதி ஏழு உன்னத சபைகளுக்கும் தேவனுடைய ரகசியங்களை வெளிப்படுத்திக் கொண்டு வருகிறார். ஆகையால் வேதாகமத்தில் அப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகத்தின் இரண்டாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பெந்தெகொஸ்தே நாள்முதல் இரண்டாயிரம் வருஷ காலமாக அந்த தூதன் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். காலவரையில்லாமல் நித்தியமாக வாழ்ந்து கொண்டு புறஜாதி சபைகளுக்கு இரகசியங்களை வெளிப்படுத்தி வருகின்ற அந்தத் தூதன் யார்?

ஆ) கர்த்தருடைய நாளில் நான் (யோவான்) ஆவிக்குள்ளானேன். அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன். அது நான்,அல்பாவும் ஓமேகாவுமாக இருக்கிறேன். முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி ஆசியாவில் இருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்திரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிகேயா என்னும் பட்டணங்களில் உள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு விளம்பினது. அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன். திரும்பினபோது ஏழு பொன் குத்து விளக்குகளையும் அந்த ஏழு பொன் குத்து விளக்குகளின் மத்தியிலே புறஜாதிகளின் ஏழு சபைகாலங்களின் மத்தியிலும், ஏழு உன்னத சபைக்காலங்களின் மத்தியிலும் நிலையங்கி தரித்து மார்பருகே (Paps = breasts) பொற்கச்சைக் கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கு ஒப்பானைவரையும் கண்டேன். (வெளி. 1:10-13) மேலே சொல்லப்பட்டுள்ள வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த மனிதன் மனுஷ குமாரனுக்கு ஒப்பானவராயிருக்கிறார். அவர் தேவ குமாரனல்ல. ஆனால் அல்பாவும் (Alpha = முதல் எழுத்து) ஓமேகாவும் (Omega = கடைசி எழுத்து) முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிற புறஜாதி மனுஷ குமாரனுக்குள் அந்த தேவகுமாரன் (The son of God) வாசம் செய்து வருகிறார். அப்படியானால் புறஜாதி ஏழு சபையின் காலங்களிலும் புறஜாதி ஏழு உன்னத சபையின் காலங்களிலும் உலாவிக்கொண்டிருக்கிற அந்த புறஜாதி மனிதன் யார்? ஆகையால் இந்த மனிதன் இயேசு அல்ல. ஏனென்றால் யோவானுக்கும், சபைகளுக்கும் இந்த சம்பவங்களை வெளிப்படுத்தின தூதனாகிய மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர் இரட்சகர் அல்ல. ஆனால் அவர் நீதிபதியாக இருக்கிறார். ஏனென்றால் அவர் மார்பகங்களைச் சுற்றிப் பொற்கச்சையை அணிந்திருந்தார். மேலும் அவர் ஆபிரகாமுக்கு தரிசனமாகி அவன் மனைவியாகிய சாராளின் இருதயத்தின் இரகசியங்களை வெளிப்படுத்திய மார்பகங்களையுடைய சர்வல்லமையுள்ள தேவனாகிய எல்ஷடாயாகவும் (Elshaddai) இருக்கிறார். ஆகையால் யோவானுக்கும் ஏழு சபைகளுக்கும் ஏழு உன்னத சபைகளுக்கும் இரகசியங்களை வெளிப்படுத்தின தூதன் அதே கர்த்தனுடைய தூதனானவர் ஆவார். இந்த கடைசி நாட்களில் புறஜாதி சபையாகிய சாராளுடைய (கலா. 4:22-26,30) இருதயத்தின் சிந்தனைகளை வெளிப்படுத்தி லூக்கா 17:28-30 ன் படி மனுஷகுமாரனுடைய ஊழியத்தை நிறைவேற்றுவதற்காகக் கர்த்தருடைய தூதனானவர் பரலோகத்திலிருந்து பூமியில் எலியா தீர்க்கதரிசிக்குள் இறங்கிவந்தார். இப்பொழுது அத்திமரத்தினுடைய ஒரு உவமையை கற்றுக் கொள்ளுங்கள். அவனுடைய (யூதனுடைய எரே.24:3-5) கிளைகள் இன்னும் இளமையாயிருந்து துளிர்விடும் போது கோடைக்காலம் சமீபித்திருக்கிறது (The summer is nigh) என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது அவர் சமீபமாய் வாசல் அருகே (Even at the doors = கதவுகள் அருகே) வந்திருக்கிறார். (மத்.24:32-33) அத்திமரமாகிய இஸ்ரவேல் தேசம் 1946 ம் வருஷம் மே மாதம் 7ம் நாள் சுதந்திரம் அடைந்தது. சரியாக அதே நாளில் கர்த்தருடைய தூதனானவர் கீழே இறங்கிவந்து இந்த நாளுக்குரிய எலியா தீர்க்கதரிசி சகோ. பிரன்காமின் சரீரத்ததுக்குள் வாசம் செய்து உலகத்தில் உள்ள சபைகளின் கதவுகளை தட்டினார். (வெளி.3:20-22) ஆகையால் கர்த்தருடைய தூதனானவர் கர்த்தராகிய யேகோவாவாக இருக்கிறார். யேகோவா என்பதற்கு தேவன் தம்முடைய குடும்பத்தோடு இருக்கிறார் என்று அர்த்தம். அதாவது புறஜாதி பிதாவாக, புறஜாதி குமாரனாக, புறஜாதி மணவாளனாக, புறஜாதி மணவாட்டியாக அவர் இருக்கிறார். (கலா.3:14-16, ரோ.9:4-5; 2, கொரி. 6:18, 11:2) ஆகையால் தேவனுடைய பரிபூரண சித்தத்தின்படியே கர்த்தருக்கு ஊழியம் செய்வது எப்படி என்பதை இப்பொழுது அறிந்து கொள்ள விரும்புகிறோம்.

இ) நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய (புறஜாதி மணவாளனுடைய) கலியாணம் வந்தது. அவருடைய மனைவி (புறஜாதி மணவாட்டி) தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான (வெண்மையான) மெல்லிய வஸ்திரம் (Fine linen) தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. பின்னும், அவன் (அந்த தூதன்) என்னை (யோவானை) நோக்கி. ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்துக்கு (Marriage supper = கலியாண இராப்போஜனம்) அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும் இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடைனே சொன்னான். அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்திலே விழுந்தேன். அவன் (தூதன்) என்னை நோக்கி. இப்படிச் செய்யாதபடிக்குப் பார் உன்னோடும், இயேசுவைக் குறித்துச் காட்சியிட்ட உன் சகோதரரோடும் கூட நானும் ஒரு ஊழியக்காரன். தேவனைத் தொழுது கொள். இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான். (வெளி. 19:7-10) தான் வணங்கின அந்த தூதன், ஒரு புதிய ஏற்பாட்டு பிரசிங்கயார் என்பதையும், தண்ணீர் ஞானஸ்நானத்தினாலும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினாலும் மீட்கப்பட்ட பாவி என்பதையும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கொடுக்கப்படும் ஞானஸ்நானத்ததைக் குறித்த சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் தன்னுடைய உடன்

ஊழியக்காரன் என்பதையும் யோவான் அறியாதிருந்தான். உடன் சகோதரன் என்பதையும் அறியாதிருந்தான். ஆகையால் யோவான் அந்தத் தூதனைத் தொழுது கொண்டான். யோவான் ஒரு அஞ்ஞானி அல்ல. வேத வாக்கியங்களை நன்கு அறிந்த யூதனாயிருந்தான். அவன் இயேசு கிறிஸ்துவை அவருடைய உயிர்தெழுதலுக்கு முன்னும் உயிர்தெழுதலுக்கு பின்னும் கண்டிருந்தான். மேலும் மறுரூபமடைந்த (வேறு ரூபமடைந்த) இயேசு கிறிஸ்துவையும் கண்டிருந்தான். (மத். 17:1-5, 2 பேது. 1:16-18) அதன் பிறகும் ஏன் நம்மைப் போல இயேசு கிறிஸ்துவின் (நாமத்தினால்) இரத்தத்தினால் மீட்கப்பட்ட ஒரு பாவியாகிய அந்தத் தூதனை யோவான் தொழுதுக் கொண்டான். ஏனென்றால் மறுரூபமடைந்த இயேசு கிறிஸ்துவாகிய புறஜாதி மணவாளனையே அந்தத் தூதனை யோவான் கண்டான் (மத்.17:1-9, 2 பேது. 1:16-18).

ஈ) இவைகளுக்குப் பின்பு இதோ பரலோகத்தில் திறக்கப்பட்ட ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காளசத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது (வெளி. 1:10-13) இங்கே ஏறிவா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை உனக்கு காண்பிப்பேன் என்று விளம்பினது (வெளி. 4:1) தன்னை குறித்து தானே ஒரு புதிய ஏற்பாட்டு பிரசிங்கியார் என்றும், ஒரு மீட்கப்பட்ட பாவி என்றும் அதேசமயத்தில் தன்னை அல்பாவும் ஓமேகாவும் என்று அழைத்துக் கொள்கிற அந்தத் தூதன் பரலோகத்தில் தங்கியிருந்து யோவானுக்கு இரகசியங்களை வெளிப்படுத்தினார். ஆகையால் யோவான் தன்னுடைய மண் சரீரத்ததை பூமியிலே வைத்துவிட்டு ஆவியில் (ஆவியின் சரீரத்தில) பரலோகத்தில் ஏறிச் சென்று இந்த சம்பவங்களை அந்த தூதனிடமிருந்து கற்றுக்கொண்டான். ஆனால் அந்த தூதன் மீட்கப்பட்ட பாவியாகவும் அதே நேரத்தில் அல்பாவாகவும் ஓமேகாவுமாகவும் பரலோகத்தில் வாசமாயிருக்கிறார்.

உ) யோவானாகிய நானே இவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தேன். நான் கேட்டுக் கண்டபோது இவைகளை எனக்கு காண்பித்தத் தூதனை வணங்கும்படி அவனுடைய பாதத்திலே விழுந்தேன். அதற்கு அவன், நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார். உன்னோடும் உன் சகோதரரோடும், தீர்க்கதரிசிகளோடும் இந்தப் புத்தகத்தின் (வெளிப்படுத்தின விசேஷம்) வசனங்களைக் கைக்கொள்கிறவர்களோடும் கூட நானும் ஒரு ஊழியக்காரன் (சகரி.3:8, ஏசா. 43:10, வெளி. 22:9, 19:10) தேவனைத் தொழுதுகொள் என்றான். (வெளி. 22:8-9) இந்த வேத வசனத்தில் யோவான் மறுபடியும் அந்தத் தூதனை வணங்கி ஆராதித்தான். ஆனால் அந்தத் தூதன் யோவானிடம் தன்னை ஒரு தீர்க்கதரிசி என்றும், புதிய ஏற்பாட்டு சபையின் ஊழியக்காரர்களோடு தானும் ஒரு உடன் ஊழியக்காரன் என்றும், இந்த வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உள்ள வசனங்களை கைக்கொள்கிற ஒரு மனிதன் என்றும் தன்னை வெளிப்படுத்தினார். யோவானிடம் அந்த தூதன் இரகசியங்களைப் பேசிக் கொண்டிருந்தபோது இந்த வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் எழுதப்படவில்லை. ஏனென்றால் அந்தத் தூதன் தாமே வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் பற்றி யோவானிடம் தானே சொல்லிக் கொண்டிருந்தார். ஆகையால் யோவான் இந்த புத்தகத்தை அப்போது எழுதவில்லை. ஆகையால் இந்த புத்தகத்தில் உள்ள வசனங்களை தான் சொல்லியபடி கடைபிடித்து நடக்கும்படியாக அந்த தூதன் மாமிசத்தில் மனிதனாக பிறந்து வரவேண்டியது அவசியமாயிருந்தது. மேலும் அந்தத் தூதன் பரலோகத்தில் உள்ள ஒரு தீர்க்கதரிசி என்று தன்னை அழைத்துக் கொண்டார். ஆகையால் இப்பொழுது பரலோகத்தில் எந்த தீர்க்கதரிசி இருக்கிறார் என்று கண்டுபிடிக்க வேண்டியது அவசியமாயுள்ளது. பரலோகத்தில் இருந்து இறங்கினவரும் பரலோகத்தில் இருக்கிறவனுமான மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை. (யோ. 3:13) இந்த வார்த்தைகளை இயேசு நிக்கதேமுவிடம் பேசின நாளில் இயேசு பரலோகத்திற்கு ஏறிப்போகவில்லை. அவருடைய உயிர்தெழுதலுக்குப் பின்பே இயேசு பரலோகத்துக்கு ஏறிச்சென்றார். ஆனால் இயேசு கிறிஸ்துவுக்கு முன்பிருந்த பழைய ஏற்பாட்டு காலத்தில் எலியா தீர்க்கதரிசி பரலோகத்துக்கு ஏறிச்சென்றிருக்கிறார். அவர்கள் பேசிக்கொண்டு நடந்து போகையில், இதோ அக்கினி ரதமும், அக்கினி குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்து, எலியா சூழல் காற்றிலே பரலோகத்துக்கு ஏறிப்போனான். (2 இரா. 2:11) ஆகையால் எலியாவே பரலோகத்தில் இருக்கிற மனுஷகுமாரனாகிய தீர்க்கதரிசி. எலியாவின் ஊழியத்தில் ஆகாப் இராஜா காலத்தில் இருந்த முதலாம் எலியா தன்னுடைய ஊழியத்தில் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசிங்கிக்கவில்லை. அப்படியே எலிசாவும் தன்னுடைய காலத்தில் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவில்லை. தீர்க்கதரிசியாகிய யோவான் ஸ்நானனும் தன்னுடைய காலத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கென்று கொடுக்கப்படுவதைக் குறித்து பிரசங்கிக்கவில்லை. ஏனென்றால் சிலுவை மரணத்துக்கு முன்பே யோவான் ஸ்நானன் கொல்லப்பட்டார்.

ஊ) மல்கியா 4:5-6 ன் படியே கர்த்தருடைய பெரிதும் பயங்கரமான நாள் வருகிறதற்கு முன்னே நான்காவது எலியாவின் ஊழியத்தில் பெந்தெகொஸ்தே பிள்ளைகளின் இருதயத்தை அவர்களுடைய பிதாக்களாகிய அப்போஸ்தலர்களின் உபதேசத்துக்கு திருப்பும்படியாக சகோ. பிரன்காம் ஒரு பாவியாக பிறந்து எலியாவின் ஊழியத்தை நிறைவேற்றினார். (1இரா. 18:30-39) எலியாவின் ஊழியத்தையும் (மல். 4:5-6) மனுஷகுமாரனுடைய ஊழியத்தையும் (லூக்.17:22-30) அதாவது கர்த்தருடைய தூதனாகிய (எல்ஷடாயின்) ஊழியத்தையும் சகோ. பிரன்காமுக்குக் கொடுக்கும்படியாக கர்த்தருடைய தூதனானவர் 1946ம் ஆண்டு மே மாதம் 7ம் நாள் பூமிக்குரிய சரீரத்தில் சகோ. பிரன்காமிடம் நடந்து வந்தார். ஆகையால் சகோ. பிரன்காம் மத். 24:32-33 ஐ நிறைவேற்றினார். ஆகையால் சகோ. பிரன்காம் 1909 ஏப்ரல் 6ம் நாள் ஒரு பாவியாக நமது மத்தியில் பிறந்து பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று பாவம் மன்னிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியால் பாவம் கழுவப்பட்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கொடுக்கப்படும் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்தும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளைக் குறித்தும் (ஏசா. 61:2ன் பிற்பகுதி) முழு உலகத்திற்கும் ஆகாய விமானத்தில் ஏழு முறை பறந்து சென்று பிரசிங்கித்தார். (வெளி.14:6-7) மேலும் வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டுள்ள அனைத்தையும் வாழ்க்கையில் கடைபிடித்தார். ஆகையால் இந்த ஆதாரங்களைக் கொண்டு பரலோகத்தில் இவைகளை வெளிப்படுத்தி யோவானுக்கு காண்பித்த அந்த தூதன் சகோ. பிரன்காம் என்பதை கண்டு கொண்டோம்.

109. இவர் ஆரம்பத்திலிருந்தே தேவனுடைய வார்த்தையைப் புரட்டுகிறார். அப்போஸ்தலனாகிய யோவானுக்கும், புறஜாதி ஏழு சபைகளுக்கும், புறஜாதி ஏழு உன்னத சபைகளுக்கும் தேவனுடைய

ரகசியங்களை அந்த தூதன் வெளிப்படுத்திக் கொண்டு வருகிறார் என்கிறார். ஆனால் வெளி. 1:1 அந்தவிதமாகக் கூறவில்லை. அது இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதலையும், சீக்கிரமாய் சம்பவிக்கப் போகிறவைகளையும் தன்னுடைய ஊழியக்காரர்களுக்கு காண்பிக்கும் பொருட்டு தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்து, இயேசு தம்முடைய தூதனை அனுப்பி அதை யோவானுக்கு வெளிப்படுத்தினார் என்றே கூறுகிறது. இயேசு தம்முடைய தூதனை அனுப்பி யோவானுக்கும் சபைகளுக்கும் வெளிப்படுத்தி வருகிறார் எனக் கூறவில்லை. ஆக ஆரம்பமே வேதப்புரட்டு.

110. மேலும் முதல் பத்தி மத்தியில் யோவானுக்கு வெளிப்படுத்தின அதே தூதனே சபைகளுக்கும் வெளிப்படுத்தி வருகிறார் என்பதற்கு தேவனுடைய வார்த்தையிலிருந்து, இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து இவர் ஆதாரம் எதுவும் கொடுக்கவில்லை.

111. அடுத்து பத்தி முடிவில் அந்தத் தூதன் காலவரையல்லாமல் நித்தியமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார் என எழுதுகிறார். ஆனால் தீர்க்கதரிசி பிரன்காம், அந்தத் தூதன் எலியாவாக இருக்கலாம் என்கிறார். எலியா இன்னும் மரிக்கவில்லை. இன்னும் உயிரோடு வானத்துக்குரிய மேனியில் இருக்கிறான். அவன் சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு இஸ்ரவேல் மத்தியில் இரு சாட்சிகளில் ஒரு சாட்சியாக இருந்து மரிக்கவேண்டும். எலியா மரிக்காமல் எடுத்துக்கொள்ளப்படும் மணவாட்டிக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறான்.

112. தனது இரண்டாவது பத்தியில் இந்த வேதப்புரட்டன், தேவனுடைய வார்த்தையை எவ்வாறு புரட்டுகிறான் என்று பாருங்கள். மனுஷகுமாரனுக்கு ஒப்பானவரை என்பதற்கு இவர் எவ்வாறு மாறுபாடான அர்த்தம் கொடுக்கிறார் என்பதை பாருங்கள். இவருடைய எல்லா புரட்டுகளுக்கும் நாம் விளக்கம் கொடுத்துக் கொண்டே இருக்க முடியாது. ஆனால் அந்த மனுஷகுமாரனுக்கு ஒப்பானவரை (one like the Son of Man) குறித்து செய்தி என்ன கூறுகிறது என்பதை கவனிப்போம்.

113. அவரை நீங்கள் கவனித்தீர்களா? இந்த வேளையில் அவர் ஒரு ஆசாரியனாக இல்லை. அல்லது அவர் ஒரு ராஜாவாகவும் இல்லை. அவர் ஒரு நியாயாதிபதியாக இருக்கிறார்.... இங்கோ அவர் மார்பருகே பொற்கச்சை கட்டினவராக, அதாவது இடுப்பிலே அல்ல, இடுப்புக்கு மேலே தோளிலே மார்பருகே இருக்குமாறு கச்சையை கட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டு வருகிறார். பொற்கச்சையை மார்பருகே கட்டி இருக்கிறார். இது என்ன? ஒரு வழக்குரைஞர், ஒரு நீதிபதி .... யோவான் அவர் நியாதிபதியாக வருகிற கர்த்தருடைய நாளுக்குள்ளாகத்தான் எடுத்துக்கொள்ளப்பட்டான். (இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல், பாகம் 1, பக்கம் 164, பத்தி 168-170)

114. இந்தப் புரட்டனது விளக்கத்திற்கு மாறாக இக்காலத்துக்குரிய செய்தி அமைந்துள்ளதை நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல் பாகம் 1, பக்கம் 155-165 வரை பத்தி 143-172 வரை காணலாம். இந்த ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்தவனுடைய உபதேசங்கள் யாவும் பிசாசின் உபதேசம். இவற்றோடு தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாதென தீர்க்கதரிசி கூறுகிறார். ஆதலால் இவருடைய உபதேசங்களுக்கு நான் விளக்கம் கொடுக்க விரும்பவில்லை. ஆனாலும் நமக்குத் தேவையான பகுதிகளை மாத்திரம் எடுத்து அவைகளுக்கு தேவனுடைய வார்த்தையைக் கொண்டும், இக்காலத்துக்குரிய செய்தியைக் கொண்டும் விளக்கம் கொடுக்கிறேன்.

115. யோவான் மறுரூபம் அடைந்த (வேறு ரூபமடைந்த இயேசு கிறிஸ்துவை மறுரூப மலையில் கண்டான். இந்த மறுரூபமடைந்த இயேசு கிறிஸ்துவாகிய புறஜாதி மணவாளனையே அந்த) தூதனாக யோவான் கண்டு தொழுதுகொண்டானென மத். 17:1-9, 2 பேது. 1:16-18 வசனங்களைக் குறிப்பிடுகிறார். ஆதலால் மத். 17:1-9 விளக்கத்தை இக்காலத்துக்குரிய செய்தியில் நாம் காணலாம்.

116. இப்பொழுது மத். 17:1-5 வசனங்களில் உள்ள விளக்கத்தை தீர்க்கதரிசியின் செய்தி தூஷனமான நாமங்கள் பக்கம் 35-39 வரை நீங்கள் தியானிக்கலாம்.

அ) குடும்பத்தில் ஒரு ஆண் பிள்ளை பிறக்கும்போது, அது ஆண்பிள்ளையாயிருக்கிறது. அந்த பிள்ளையை வளர்க்க ஆசாரியர்கள் இருந்தனர். அவன் சரியான குமாரனாக வளராமல் போனால் அவன் சுதந்திரவாளியாக முடியாது. ஆனால் அவன் தகப்பனுக்குக் கீழ்படிகிற சரியான மகனாக வளர்ந்தால், அவன் சுவிகாரப் புத்திரனாகி தன் ஸ்தானத்தில் வைக்கப்படுகிறான். தகப்பனுக்குள்ள எல்லாவற்றுக்கும் அவன் சுவிகாரப் புத்திரனாகிறான். அதைத்தான் தேவன் மறுரூப மலையின் மேல் செய்தார். தன் சொந்தக் குமாரன் எல்லாச் சோதனைகளையும் சகித்து, சரியான குமாரன் என்று நிரூபித்த போது, அவரை மறுரூப மலையின் மேல் கொண்டு சென்று அவரை நிழலிட்டார்.

ஆ) உங்களுக்குத் தெரியும், பழைய ஏற்பாட்டில் அவர்கள் குமாரனுக்கு நல்ல உடை உடுத்தி, பொது ஜனங்களுக்கு முன்பாக நிறுத்துவார்கள். அவர்கள் ஸ்தானத்தில் வைக்கும் - நாம் சுவிகாரம் என்றழைக்கும் வைபவத்தை நடத்துவார்கள். கலாத்தியர் நிருபத்தில் பரி. பவுல் இதைச் சுவிகாரப் புத்திரர் என்றழைக்கிறார்.

இ) இதைத்தான் தேவன் மறுரூப மலையின் மேல் செய்தார். இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்றழைத்தார்.

117. இங்கு தீர்க்கதரிசி, தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவை சுவிகாரபுத்திரனாக்கியதை குறித்து கூறுகிறார். மறுரூப மலையில் வேறு ரூபமடைந்த புறஜாதி மணவாளனைக் குறித்த கூறவில்லை.

118. மேலும் இது குறித்து தீர்க்கதரிசி கிறிஸ்து தேவனுடைய பரம இரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார் என்ற செய்தியில் 79 வது பக்கம் கடைசி பத்தி மற்றும் 80வது பக்கம் முதல் பத்தியில் இவ்வாறு கூறுகிறார். மறுரூப மலையை பாருங்கள். தேவனுடைய சாட்சி இவர் என்னுடைய நேசகுமாரன். இவருக்குச் செவிக்

கொடுங்கள். இங்கு நியாயப்பிரமாணத்தின் பிரதிநிதியாக மோசேயும், தீர்க்கதரிசியின் பிரதிநிதியாக எலியாவும் நின்று கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் மறைந்து விட்டனர். அவர், இவர் என்னுடைய நேச குமாரன், இவருக்குச் செவி கொடுங்கள் என்றார். இங்கு மூன்று காரியங்களுக்குப் பிரதிநிதிகள் இருக்கின்றனர். நியாயபிரமாணம், தீர்க்கதரிசிகள், கிறிஸ்து. அவர், இது அவர், இது அவர் என்றார். தேவன் பரிபூரணமாகத் தீர்க்கதரிசிகளில் வெளிப்படவில்லை. ஆனால் அவர் கிறிஸ்துவில் வெளிப்பட்டார்.

119. கிறிஸ்து இரக்கம் பாராட்டுகிறவர். நியாயப்பிரமாணம் உங்களை சிறையில் அடைக்கும். அது உங்களை வெளியே கொண்டு வர முடியாது. தீர்க்கதரிசிகள் தேவனுடைய நியாயத்தீர்ப்பை உங்கள் மேல் கொண்டு வந்து, உங்களை ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தி உங்களை அதன் விளைவாக கொன்று விடுகின்றனர். அது உண்மை. ஆனால் இயேசுவோ தேவனுடைய அன்பாயிருந்து முன் குறிக்கப்பட்ட வித்துக்கு தம்மை வெளிப்படுத்தி, அவர் அவர்களை அழைத்திருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறார். அது அவர், அவருக்குச் செவிகொடுங்கள். தேவத்துவத்தின் பரிபூரணம் வெளிப்பட்டது.

120. மேலும் இதுகுறித்து இவர் யார் என்று சொல்லுகிறீர்கள், செய்தியில் பத்தி 147 மற்றும் 148 ஐ வாசியுங்கள். பேதுரு, இங்கு நாம் மூன்று கூடாரங்களைப் போடுவோம். ஒன்று மோசேக்கு, - நியாயப்பிரமாணத்துக்கு ஒன்று, தீர்க்கதரிசிகளுக்கு ஒன்று .... என்றான். அவன் இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கிற போது, ஒரு சத்தம் உண்டாகி இவர் என்னுடைய நேசக்குமாரன் இவருக்குச் செவிகொடுங்கள் என்றுரைத்தது. அவர்கள் பார்த்தபோது, இயேசுவை மாத்திரம் கண்டார்கள்.அவர் அங்கு நின்று கொண்டிருந்தார். அவர் வார்த்தையாயிருந்தார். நீங்கள் செவி கொடுக்க வேண்டியது அந்த வார்த்தைக்கு மாத்திரமே. எந்த காலத்திலும் அது அவரே. இந்தக் காலத்தின் வார்த்தை என்ன சொல்கிறது என்பதைக் கண்டு, தேவன் அதை அபிஷேகிப்பதைக் கவனித்து அத்துடன் செல்லுங்கள். அவ்வளவுதான்.

121. இக்காலத்துக்குரிய வார்த்தை, செய்தி இவ்வாறிருக்க, மறுரூப மலையில் தேவத்துவம் பரிபூரணமாக வெளிப்பட்ட வேளையில், இந்த பிசாசின் மகன் சகோ. பிரன்காம் மறுரூபமடைந்த இயேசு கிறிஸ்துவாகிய புறஜாதி மணவாளன் என்று கூறி கிறிஸ்துவின் ஸ்தானத்தில் ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் அவர்களின் மாம்ச இச்சையில் பிறந்த அந்த ஏழும் சபைக் காலத் தூதனை, தீர்க்கதரிசியை வைக்கிறான். இவனுடைய இந்த உபதேசம் பேய்த்தனத்துக்கடுத்தாக இருக்கிறது. இவன் ஆவிக்குரிய மரணம் அடைய இவனை நம்பிய அனைவரும் சிதறி அவமாய் போனார்கள்.

122. அடுத்து அந்தத் தூதன் யோவானுக்கு உடன் ஊழியக்காரன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஆங்கிலத்தில் I am thy fellow servant என உள்ளது. உடன் ஊழியக்காரன் என்றால் தான் செய்யும் பணியையே செய்யும் மற்றொருவன் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. தேவனுடைய சரீரமாகிய சபை பக்தி விருத்தியடைய தேவன் அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகர்களையும், மேய்ப்பர்களையும், போதகர்களையும் ஏற்படுத்தினார். இதில் ஒரு அப்போஸ்தலன் தன்னுடைய உடன் ஊழியக்காரன் ஒரு அப்போஸ்தலன் தான் என்று கூறமுடியாது. அவ்வண்ணமாகவே இதர ஊழியக்காரர்களும். இந்த ஐந்துவகை ஊழியத்தில் ஒவ்வொருவரும் உடன் ஊழியக்காரர்கள். அப்போஸ்தலனுக்கு தீர்க்கதரிசி உடன் ஊழியக்காரனே. மேய்ப்பனுக்கு சுவிசேஷகன் உடன் ஊழியக்காரனே. உதாரணமாக ஒரு கம்பெனியில் மேனேஜர் முதல் கிளார்க் வரை பலவிதமான பதவிகளில் பலர் வேலை செய்கிறவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் உடன் வேலையாட்களே.ஒரு மேனேஜருக்கு உடன் வேலையாள் மற்றொரு மேனேஜர் தான் என்று கூற முடியாது. ஆதலால் உடன் ஊழியக்காரன் என்றவுடன் தன்னைப் போன்ற ஒரு ஊழியத்தை உடையவன் என்று பொருள் கொள்ளக்கூடாது.

123. உதாரணமாக பாருங்கள், பவுல் தீமோத்தேயுவை உடன் ஊழியக்காரன்(My work fellow) என்கிறான். ரோ.16:21. பவுல் ஒரு அப்போஸ்தலன். தீமோத்தேயு ஒரு சுவிசேஷகன் 2 தீமோ. 4:5. பவுல் அப்பொல்லோவைக் குறித்து, நான் நட்டேன், அவன் நீர்பாய்ச்சினான். ஆனால் இருவரும் தேவனுக்கு உடன் வேலையாட்கள் என்கிறான். 1 கொரி. 3:6-9. பவுல் எப்பாப்பிராவை தன் உடன் வேலையாள் (fellow servant) என்கிறான். கொலோ.1:7, 4:12 & 13. எப்பாப்பிரா பவுலின் எபேசு ஊழியத்தில் இரட்சிக்கப்பட்டவன். இவன் கொலோசே பட்டிணத்தில் சபையை உருவாக்கினான் என்று கருதப்படுகிறது. அவ்வண்ணமாகவே பவுல் தீகிக்குவையும் உடன் வேலையாள் (fellow servant) என அழைக்கிறான். கொலோ. 4:7.

124. ஆதலால் யோவானுக்கு உடன் ஊழியக்காரன் என்ற உடன் அவனுடைய ஊழியத்தை மாதிரி ஒரு ஊழியத்தைச் செய்கிறவன் என்று பொருள் கொள்ளக் கூடாது. ஆதலால் யோவான் தண்ணீரில் ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தில் கொடுத்தான். அவ்வண்ணமாகவே அந்தத் தூதனும் கொடுத்திருக்க வேண்டும் என பொருள் கொள்ளக் கூடாது. ஆனால் அந்தத் தூதன், எலியா தீர்க்கதரிசி இஸ்ரவேல் மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும்போது ஏழாம் சபை தூதன் பிரசிங்கித்த வண்ணமாகவே பழைய ஏற்பாட்டின் யேகோவா புதிய ஏற்பாட்டின் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனவும், இஸ்ரவேல் மனம் திரும்பி பாவ மன்னிப்புக்கென்று தண்ணீரில் ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பெற வேண்டும் எனவும் போதிப்பான். இங்கு யோவான் ஒரு அப்போஸ்தலன், ஒரு ஊழியக்காரன். அவ்வண்ணமாகவே எலியா ஒரு தீர்க்கதரிசி. ஒரு ஊழியக்காரன் .ஆனால் இங்கு சகோ. பிரன்காமும் ஒரு புறஜாதி தீர்க்கதரிசியாக இருப்பதால் யோவான் உடன் ஊழியக்காரன் என்று சொல்வதில் தவறு ஏதும் கிடையாது. நானும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைய கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டபடியால் சகோ. பிரன்காமுக்கு உடன் ஊழியக்காரனே. ஆனால் யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தைக் காட்சியாக கொடுத்துக் கொண்டிருந்த வேளையில் சகோ. பிரன்காம் பிறக்கவில்லை. ஊழியத்தில் இல்லை. சகோ. பிரன்காம் ஊழியநாட்களில் நானும் பிறக்கவில்லை. ஊழியத்தில் இல்லை. ஆதலால் யோவானுக்கு

சகோ.பிரன்காம் உடன் ஊழியக்காரனாக இருக்கமுடியாது. அவ்வண்ணமாகவே நானும் சகோ. பிரன்காமுக்கு உடன் ஊழியக்காரனாக இருக்கமுடியாது.

125. பாருங்கள் நடுகிறவனும், நீர்பாய்ச்சுகிறவனும் தேவனுக்கு உடன் வேலையாட்கள். 1கொரி.3:9. அவர்கள் ஒரு காலத்திற்குட்பட்ட வேலையாட்களாயிருந்தார்கள். உடன் ஊழியக்காரர்கள் என்றால் இருவரும் ஒரே வேளையில் உடன் ஊழியம் செய்கிறவர்களாயிருக்க வேண்டும். பாருங்கள் நானும் சென்னை, பல்லாவரம் கல்வாரி ஜெபவீடு பாஸ்டர் சகோ. ஐசக் அருமைநாயகம் அவர்களும் ஒரே காலத்திற்குரிய உடன்ஊழியக்காரர்கள். ஆனால் நானும் தீமோத்தேயுவும், பிலிப்பும் உடன் ஊழியக்காரராக முடியாது. ஏனென்றால் வித்தியாசமான காலக்கட்டங்களுக்குரியவர்களாயிருக்கிறோம். அதன்படி யோவானுடைய ஊழிய நாட்களில் சகோ. பிரன்காம் பிறக்கவில்லை, ஊழியம் செய்யவும் இல்லை. ஆதலால் சகோ. பிரன்காம் யோவானுக்கு உடன் ஊழியக்காரனாக முடியாது. மேலும் யோவானுடைய சகோதரர்களாகிய தீர்க்கத்தரிசிகளோடு உடன் தீர்க்கத்தரிசியும் ஆக முடியாது. இங்குப் பாருங்கள் யோவானும், திஸ்பியனாகிய எலியாவும் உடன் ஊழியக்காரர்கள். ஏனென்றால் எலியா யோவானின் ஊழியக்காலம் முதல் இதுவரை ஒரு தீர்க்கத்தரிசியாகவே இருக்கிறான். அவன் இதுவரை மரிக்கவில்லை.

126. அடுத்து சகோ. பிரன்காம், யோவானுக்கு உடன் சகோதரன் ஆக முடியாது. ஏனென்றால் சகோ. பிரன்காம் ஒரு புறஜாதி. யோவான் ஒரு யூதன். ஆதலால் இருவரும் உடன் சகோதரர்கள் இல்லை. இதுகுறித்து ரோ. 9:3 ஐ தியானியுங்கள். மாம்சத்தின்படி இனத்தானே சகோதரன் எனப்படுவான். மேலும் மோசே கூட, உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே, உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார் என்றான். உபா. 18:15. அதாவது மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசி, யூத ஜனங்கள் மத்தியிலிருந்து அவனுடைய சகோதரர்களில் இருந்து என பொருள்படும். யூதர்கள் ஒவ்வொருவரும் அவர்களுக்குள் சகோதரர்கள். எபிரேய புருஷர்களே அவர்களுக்குள் சகோதரர்கள். உபா. 15:12. புறஜாதிகள் ஒவ்வொருவரும் அவர்களுக்குள் சகோதரர்கள். சமாரியர் ஒவ்வொருவரும் அவர்களுக்குள் சகோதரர்கள். ஆக இந்த தீர்க்கதரிசனத்தின்படி இயேசு யூத குலத்தில் பிறந்து ஒரு யூதன் என்றும்,ரோ.9:5, யோ.4:9 கலிலேயாவில் உள்ள நாசரேத் ஊரில் இருந்து வந்த தீர்க்கதரிசி என்றும் (மத்.21:11) . மாம்சத்தின்படி இஸ்ரவேலர் (ரோ. 9:5) என்றும் அழைக்கப்பட்டார். இஸ்ரவேல் ஜனங்கள் யூதர் 2 இரா 16:6. இதன்படி சகோ. பிரன்காம் புறஜாதியாகிய நமக்கு ஒரு சகோதரன். யூதனாகிய யோவானுக்கு ஒரு சகோதரன் இல்லை. ஆனால் ஒரு புறஜாதியும் யூதனும் உடன் ஊழியக்காராக ஒருவருக்கொருவர் இருக்கலாம். மேலும் யோவான் 24 யூத மூப்பர்களில் ஒருவன். இஸ்ரவேலில் உள்ள 12 கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தை நியாயந்தீர்க்கப் போகும் ஒரு யூதன். அவனுடைய ஊழியமும், யூதர்கள் மத்தியில் தான். ஆதலால் அவன் எக்காரணத்தைக் கொண்டும் ஒரு புறஜாதிக்கு உடன் சகோதரனாக முடியாது. சபைக் காலங்களுக்கு முன்பு உடன் சகோதரன் என்றால் அது தனது மாம்ச இனத்தானாகிய சகோதரனையே குறிக்கும். நெகே. 1: 2. சபைக்காலங்களில் அது ஆவிக்குரிய சகோதரனைக் குறிக்கும்.

127. யோவான் நமக்கு ஒரு ஆவிக்குரிய சகோதரன் அல்ல. அவன் மணவாட்டியும் அல்ல. இது குறித்து நீங்கள் இயேசுக்கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல் பாகம் 2, பக்கம் 1070 & 1071, பத்திகள் 307 & 308 ஐ தியானியுங்கள். அவர்கள் வெண்ணங்கி அணிந்திருந்த 24 மூப்பர்கள். அவர்களில் 12 பேர்கள் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களுக்காகவும், 12 அப்போஸ்தலர்கள் சபைக்காகவும் உள்ளனர். அவர்கள் மகத்தான இராஜாவின் சமூகத்தில் வீற்றிருக்கிறார்கள். இங்கே மணவாட்டியும் கிறிஸ்துவும் அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்கள். அவரது மனைவியாகிய சபையானது அவர் அருகில் அமர்ந்திருக்கிறாள். 24 மூப்பர்களும் ... 1,44,000 பேர்களாகிய அண்ணகர்களும் தேவாலயத்தில் அவரைச் சேவித்துக் கொண்டிருக்கிறார்கள். பாருங்கள் 24 மூப்பர்களும், 1,44,000 அண்ணகர்களும் பணிவிடை செய்கிறார்கள். மணவாட்டி அவருடன் அமர்ந்திருக்கிறாள். இதனால் யோவான் புறஜாதி பிரன்காமுக்கு மாம்சத்தின்படி இனத்தான் அல்ல. மேலும் ஆவிக்குரிய உடன் சகோதரனாகிய மணவாட்டியும் அல்ல.

128. மேலும் இயேசுகிறிஸ்து 12 அப்போஸ்தலர்களைக் குறித்து கூறுவதைக் கவனியுங்கள். மறு ஜென்மக் காலத்திலே மனுஷக்குமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது என்னைப் பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாக 12 சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள். மத். 19: 27, வெளி. 4 :4 & ஏசா 1: 26 பிரியமானவர்களே அப்போஸ்தலர்கள் மணவாட்டி அல்ல. மேலும் இவர்களுக்கு இஸரவேலருக்குள் தனிப்பட்ட அந்தஸ்து / தொடர்பு உண்டு. வெளி. 21: 12 &14

129 .நீங்கள் மேலும் வெளி. 6:11ல் தங்கள் உடன் பணிவிடைக்காரரும், தங்கள் சகோதரரு மானவர்களின் தொகை எனக் காண்கிறோம். இது யாரைக் குறிக்கிறது? பலிபீடத்தின் கீழ் உள்ள ஆத்துமாக்களை. இவர்கள் ஒரு தேசமாக இரட்சிக்கப்பட இருக்கும் இஸ்ரவேல் ஜனங்கள். யூதர்கள். இவர்கள் முன் குறிக்கப்பட்டவர்கள். இவர்கள் இஸ்ரவேலர் (ஏழுமுத்திரை, பக்கம் 371) நாம் புறஜாதிகள் இரட்சிக்கப்படும்படிக்கு இஸ்ரவேலர் குருடாக்கப்பட்டனர். தேவன் தம்முடைய சொந்த பிள்ளைகளை குருடாக்கினார். குருடாக்கப்பட்டனர். இவர்களுக்கு தங்கள் உடன் சகோதரர்களான யூதர்கள் கொலை செய்யப்படும்வரை காத்திருக்க வேண்டும். நீங்கள் கொலை செய்யப்பட்டது போல அவர்களும் கொலை செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இங்கு உடன் பணிவிடைக்காரர் என்பது தேவனுடைய வசனத்தின் நிமித்தமும் தங்கள் கொடுத்த சாட்சியின் நிமித்தமும் கொல்லப்பட்ட பற்பல யூதர்கள் ஆவர். சிலர் தேவ வசனத்தின் நிமித்தமும் சிலர் தாங்கள் கொடுக்கும் சாட்சியின் நிமித்தமும் கொலை செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் யாவரும் உடன் பணிவிடைக்காரர்கள். அதோடு மட்டுமல்ல. அவர்கள் யாவரும் யூதர்களாக இருப்பதால் உடன் சகோதரர்கள் எனக் கூறப்பட்டுள்ளது. இங்கு புறஜாதிகளுக்கு இடமே இல்லை. இதுகுறித்து நீங்கள் ஐந்தாம் முத்திரையின் வெளிப்பாடு தியானிக்கலாம்.

130. ஆனால் இங்கு எலியா தீர்க்கதரிசியை யோவானோடு ஒப்பிட்டு பாருங்கள். யோவான் யூதன். எலியாவும் யூதன். இருவரும் மாம்சத்தில் உடன் சகோதரர்கள். யோவான் ஒரு அப்போஸ்தலன். எலியா ஒரு தீர்க்கதரிசி. யோவான் மற்றும் எலியா உடன் ஊழியக்காரர்கள். யோவான் காட்சியாகமத்தை எழுதும் போது எலியா மரிக்கவில்லை. அவனுடன் ஒரு தீர்க்கத்தரிசியாகவே இருக்கிறான். இன்று யோவான் மரித்துவிட்டான். ஆனால் எலியா இன்னும் மரிக்கவில்லை. யோவான், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசிங்கித்தான். இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருந்தான். ஆனால் எலியா இனி யூதர்கள் மத்தியில் மோசேயோடு ஊழியம் செய்யும்போது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தையே பிரசிங்கித்து சாட்சியாக மரிப்பான். வெளி. 11ல் கூறப்பட்டுள்ள சாட்சிகளில் இவன் ஒருவன். ஆக யோவான், எலியாவின் பாதத்தில் விழுந்து வணங்கினான் என்பதே மிக்க பொருத்தமாக இருக்கும்.

131. மேலும் அந்தத் தூதன், தான் இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சியிட்ட யோவானுடைய சகோதரனோடு கூட தானும் ஒரு தீர்க்கத்தரிசி என்றான். இங்கு நாம் 1 பேது. 1:10 & 11 வசனங்களை தியானிக்க மறந்துவிடக்கூடாது. ஏனென்றால் இந்தத் தூதன், தன்னிலுள்ள கிறிஸ்துவின் ஆவியினால் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும் அவைகளுக்குப் பின் வரும் மகிமையையும் முன்னறிவித்த தீர்க்கதரிசியாக யோவானின் உடன் சகோதரர்களில் ஒருவனாக இருக்கவேண்டும். கிருபையைக் குறித்து தீர்க்கதரிசனம் சொன்ன தீர்க்கதரிசிகளில் ஒருவனாக இருக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவை பற்றிய சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவி. சகோ. பிரன்காம், லவோதிக்கேயா சபைத் தூதன் ஒரு புறஜாதி தீர்க்கதரிசி. இவர் கிறிஸ்துவுக்கு உண்டான பாடுகளைப் பற்றியும், அதற்கு பின் வரும் மகிமையைப் பற்றியும், கிருபையைப் பற்றியும் தீர்க்கதரிசனம் உரைத்த ஒரு தீர்க்கதரிசி அல்ல. அதோடு மட்டுமல்ல வெளிப்படுத்தின விசேஷத்தைக் காட்சியாக யோவானுக்கு கொடுத்த காலத்தில் சகோ.பிரன்காம் ஒரு தீர்க்கதரிசியும் அல்ல.

132. எலியாவைப் பாருங்கள், தேவன் எலியாவின் மீது தமது ஆவியை ஊற்றி இருக்கிறார். ஏற்கனவே மூன்றுமுறை. இன்னுமாக இரண்டுமுறை என வாக்குரைத்திருக்கிறார். ஐந்து முறை கிருபைக்காக, எலியாவின் மேல் ஊற்றியிருந்தார். எலிசாவின் மேல் இருமடங்காக வந்தது எலியாவின் ஆவி. எலியாவின் ஆவி யோவான் ஸ்நானன் மீது இருந்தது. புறஜாதி மணவாட்டியின் முன்னோடியாக வர வேண்டியிருந்தது. (புறஜாதி மணவாட்டியை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்ததப்படுத்திய தீர்க்கதரிசியாகிய வில்லியம் மாரியன் பிரன்காம் மீது அமர்ந்தது) யூதர்களை வீட்டிற்கு கொண்டு செல்ல மோசேயுடன் வரவேண்டும். (ஏற்றக்காலத்தில் ஆவிக்குரிய ஆகாரம், பத்தி 15 )

133. எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் கிறிஸ்துவுக்கு முன் நடந்த யோவான் ஸ்நானனைப் பாருங்கள் (லூக். 1:17) உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்று அழைக்கப்பட்டான். கர்த்தருடைய முதலாம் வருகைக்கு முன்னோடியாக இருந்து பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தினான், உன்னதத்தில் இருந்து தோன்றிய அருனோதயம் நம்மை சந்திக்கிறது என இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுத்தான். லூக். 1:76-80. மேலும் இயேசுவைக் குறித்து அவர் எனக்குப்பின் வந்தும் என்னிலும் மேன்மை உள்ளவர். அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்பதற்கு நான் பாத்திரன் அல்ல எனக்கூறி, இதோ, உலகத்தின் பாவங்களை சுமக்கிற தேவ ஆட்டுக்குட்டி என சாட்சிக் கொடுத்தான். யோ. 1:27-34. இது யாருடைய ஆவி? எலியாவின் ஆவி. பாவமன்னிப்புக்கென்று மனந் திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் கொடுத்தான். அதிகமான பேர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தாலும் சொற்பமான நபரே 6 விசுவாசிகள் மட்டுமே நிலைத்திருந்தனர். இன்றைக்கும் நமது சபைகளில் 200 /300 பேர் கூடுகிறார்கள் என பெருமைப்படுகிறார்கள். ஆனால் உண்மையான விசுவாசி ஒருவரா, இருவரா, அதுவும் சந்தேகம்தான். ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவானிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனும் இல்லை. லூக். 7:28. ஆனால் இவனோடு நிலைத்துநின்ற விசுவாசிகள் 6 போர் மட்டுமே. அவர்கள் நாமங்களாவன யோசேப்பு, மரியாள்: சகரியா, எலிசபெத்: சிமியோன் மற்றும் அன்னாள். இவனுடைய ஆறுமாத ஊழியத்துக்காக தேவன் இவனை 30 வருடங்களாக வளர்த்தார். (தற்கால நிகழ்ச்சிகள் தீர்க்கதரிசனத்தின் மூலமாய் தெளிவாக்கப்படுகின்றன. பத்தி 225)

134. புறஜாதி மணவாட்டியை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்தும் தீர்க்கத்தரிசி தூதனுடைய பணி என்ன? மல்கியா 4ம் அதிகாரத்திலும், வெளி. 10 : 6 உரைக்கப்பட்ட இந்தத் தூதன் இரண்டு பெரிய காரியங்களைச் சாதிப்பார். முதலாவது மல்கியா உரைத்தப்படி, இவர் பிள்ளைகளின் இருதயத்தை பிதாக்களிடத்திற்குத் திருப்புவான். இரண்டாவதாக வெளி. 10 அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏழு இடி முழக்கங்களின் இரகசியத்தை (அதாவது ஏழு முத்திரைகளின் இரகசியத்தை) அவர் வெளிப்படுத்துவார். தேவனால் அருளப்பட்ட இந்தச் சத்தியம் பிள்ளைகளுடைய இருதயத்தைப் பெந்தெகொஸ்தே பிதாக்களிடத்திற்குத் திரும்பும் ( ஏழு முத்திரை 402வது பக்கம், கடைசி பத்தி ) ஒரு காரியம் எந்த ஆவியினால் பேசப்பட்டதோ, எழுதப்பட்டதோ அந்த ஆவி ஒருவனுக்குள் வாசம் செய்தால்தான் பேசப்பட்ட, எழுதப்பட்டவைகளைப் புரிந்துகொள்ள, அறிந்து கொள்ள முடியும். தேவ ஆவியினால் எழுதப்பட்ட வேத வாக்கியங்களை தேவ ஆவியினாலே புரிந்து, அறிந்துகொள்ள முடியும். பாருங்கள் எலியா பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களுடைய இருதயத்திற்குத் திருப்பவேண்டும். அப்படியானால் எலியாவினுடைய ஆவி யாருக்குள் இருக்கிறதோ அந்த நபருடைய இருதயம் மட்டுமே அப்போஸ்தல பிதாக்களுடைய இருதயத்திற்குத் திருப்பப்படும். ஆக எல்லாதவிதத்திலும் யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷக்காட்சியைக் காண்பித்தத் தூதன் திஸ்பினாகிய எலியா தீர்க்கதரிசி என்பதே சரியாக தேவனுடைய வார்த்தையோடும் (வெளி. 19:10, 22:8) இக் காலத்திற்குரிய செய்தியோடும் அது எலியாவாக இருக்ககூடும் (இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல் பக்கம் 29, பத்தி 112, 113) பொருந்தும் ஒன்றாக உள்ளது.

135. அடுத்து சகோ. ஆனந்தவேல் வெளி. 22:8 & 9 வசனங்களைக் குறிப்பிட்டு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதலில் உள்ள வசனங்களை கடைப்பிடிக்க பரலோகத்தில் உள்ள அந்தத் தூதன் மாம்சத்தில்

மனுஷனாக பிறக்கவேண்டும் என்று எழுதுகிறார். நீங்கள் எலியா தீர்க்கதரிசியை எடுத்துக்கொண்டால் அவன் சுழல் காற்றிலே பரலோகத்துக்கு ஏறிப்போனான். அவன் இன்னும் மரிக்கவில்லை. அவன் மணவாட்டி சபை எடுத்துக் கொள்ளப்பட்டவுடன், இஸ்ரவேலரின் மத்தியில் வந்து மூன்றரை ஆண்டுகள் ஊழியம் செய்யவேண்டும். அவன் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை இஸ்ரவேலருக்கு எடுத்துச் சொல்ல வேண்டியவனாயிருக்கிறான். வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள இஸ்ரவேலருக்கு அடுத்தக் காரியங்களை அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டியவனாயிருக்கிறான். ஆதலால் அவனும் தன்னை வெளிப்படுத்தின விசேஷம் தீர்க்கதரிசன புத்தகத்தில் கூறப்பட்டுள்ள வசனங்களுக்கு தன்னை ஒப்புக்கொடுத்தவனாக, ஒரு உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனாக இருப்பான்.

136. இதனால் தான் ஏழாம் சபைக்காலத் தூதனிடம் அந்த தூதன் யார் என்று கேட்டபோது அது எலியாவாக இருக்கலாம் என கூறினார். ஆனால் பிரன்காம் கிறிஸ்துவின் ஆவி பாஸ்டர் சாமியையும், பாஸ்டர் சாமுவேலையும் ஆட்கொண்டு அது எலியா அல்ல, அது பிரன்காம் என்று போதிக்கிறது. நீங்கள் எந்த ஆவிக்கு கீழ்ப்படிய விரும்புகிறீர்கள்? இயேசு கிறிஸ்துவின் ஆவிக்கா அல்லது பிரன்காம் கிறிஸ்துவின் ஆவிக்கா? அவர்கள் உலகத்துக்குரியவர்கள். உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள். உலகமும் அவர்களுக்கு செவிக் கொடுக்கிறது. தேவனை அறிந்தவன் தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்து அதற்கு செவி கொடுக்கிறான். ஆனாலும் இவர்களுடைய வாய் அடைக்கப்பட வேண்டும். ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாய் இருக்கிறார்கள். இந்த வேதவாக்கியம் நிறைவேற வேண்டுமே! சகோதரரே, நீங்கள் **சுயாதீனத்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆவிக்குரிய காரியங்களில் சுயாதீனமான முடிவு எடுங்கள். உங்கள் பாஸ்டர்களுக்கு அடிமைகளாகாதீர்கள்.**

137. சகோ. ஆனந்தவேல் அந்த தூதன் ஏழாம் சபைக்காலத் தூதனாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் என்று நிரூபிக்க தனது லௌகீக ஞானத்தை உபயோகித்து மக்களை குழப்பத்துக்குள்ளாக்குகிறார். அவருக்கு நேர்முக மற்றும் அந்தரங்க சீஷர்கள் காணப்படுகின்றனர். இயேசு கிறிஸ்து எக்காளம் ஊதினால் அவருடைய ஆடுகள் அவருக்குப் பின் செல்லும். சாத்தான் எக்காளம் ஊதினால் அவனுடைய ஆடுகளே அவனுக்குப் பின் செல்லும். அவ்வண்ணமாகவே சாத்தானின், ஆனந்தவேலின் ஆடுகள் அந்தத் தூதன் பிரன்காம் என்று கூறிக் கொண்டு அவன் பின் செல்கிறது. பிரன்காம் கிறிஸ்து உபதேசம் பிசாசின் உபதேசமாக இருப்பதால், அதனைச் சார்ந்த இந்த உபதேசமும், அதாவது வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய இயேசு கிறிஸ்துவின் தூதன் ஏழாம் சபைக்காலத் தூதனாகிய சகோ. பிரன்காம் என்பதும் ஒரு பிசாசின் உபதேசமே. ஆதலால் இந்த உபதேசத்தோடு எந்தவிதமான தொடர்பும் வைத்துக் கொள்ளாதீர்கள். சாத்தானுடைய வஞ்சம் நமக்குத் தெரியாதா, என்ன? சாத்தானுடைய வஞ்சக விளக்கத்தை அப்படியே உங்களுக்கு எழுதியுள்ளேன். நீங்கள் அதை வாசித்து சாத்தான் எவ்வளவு வஞ்சகமாக தேவனுடைய வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியைப் புரட்டி, அதற்குத் தன் சொந்த வித்தியாசமான வியாக்கியானம் கொடுத்து மக்களை ஏமாற்றி விசுவாசக் கப்பலைச் சேதப்படுத்துகிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

138. இங்கு மேலும் ஒரு முக்கியமான ஒரு காரியத்தைக் குறித்து எழுத வாஞ்சிக்கிறேன். வழிநடத்தப்படுகிறேன். இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை, தேவத்துவத்தைக் குறித்து இதர மூன்று சுவிசேஷகர்களும் எழுதாததை யோவான் எழுதி இயேசு கிறிஸ்துவை இருக்கிறவராக இருக்கிறேன் I am that I am என்று அழைத்தவன் யோவான் மாத்திரமே. பழைய ஏற்பாடு யேகோவா புதிய ஏற்பாடு இயேசு கிறிஸ்து என்ற வெளிப்பாட்டைப் பெற்றவனாகவே இருந்தான். யோ. 8:24. இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையைக் குறித்து ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவன் என்று எழுதியவன் இவனே. யோ. 1:1 அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவரால் உண்டாயிற்று. (He was in the world and the world was made by Him.) அவரே சிருஷ்டி கர்த்தர் என்று எழுதியவன் இவனே. இயேசுவே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் என்று சத்தியத்தை அறிந்து, புத்தி கூறியவன் இவனே. இயேசு கிறிஸ்துவின் மகிமையை மறுரூபமலையிலும், கர்த்தருடைய நாளையும் கண்டவன் இவனே. வெளி.1:10-18, மத்.17:1-9 அதாவது இயேசு கிறிஸ்துவை அவருடைய உயிர்தெழுதலுக்கு முன்பும். பின்பும் அவருடைய மறுரூபக் காட்சியையும், அவருடைய மகிமையையும் கண்டவன் இவனே. அதோடு மட்டுமல்ல அவன் ஆவிக்குள்ளாகி இருந்தான். வெளி. 1:10. ஆவிக்குள்ளான ஒருவன் தவறான பாதையில், வழியில் செல்ல முடியாது. ஏனென்றால் அது பரிசுத்த ஆவி.

139. சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு யோவான் ஆவிக்குள்ளானான். வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டான். அந்த சிங்காசனத்தைச் சுற்றிலும் 24 சிங்காசனங்கள் இருந்தன. அதில் உட்கார்ந்திருந்தவர்களில் இவனும் ஒருவன். சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவரை கர்த்தாவே, தேவரீர் மகிமையும் கனத்தையும், வல்லமையையும் பெற்றுக் கொள்கிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர். நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர் எனக் கூறி அவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து தொழுது கொண்டான். வெளி. 4 அதி மற்றும் 7 அதி. ஆக தேவத்துவத்தைக் குறித்து நன்கு அறிந்த இவன் ஒரு தூதனை ஆராதனைக்குரியவர் என்று அறிந்து, அவனை தேவன் என்று அறிந்து அவர் பாதத்தில் விழுந்து வணங்கியிருக்க முடியவே முடியாது.

140. மேலும் யோவான் தான் கண்டவைகளையும், கேட்டவைகளையும் குறித்து தன் மனதில் ஆழமாய் தைக்கப்பட்டு அந்தத் தூதனை தன்னைப்போல் ஒரு ஊழியக்காரன் என்பதை மறந்து, அவனை வழிபாட்டுக்குரியவர் என நினைத்து தொழுதுவிட்டான் எனவும் கூறமுடியாது. ஏனென்றால் அவன் ஆவிக்குள்ளாகியிருந்தான். வெளி. 1:10 (spirit dimension) அவன் மாம்சத்தில் இல்லை. (physical dimension)

141. அடுத்து முற்காலத்தில் தேவனுக்கும், மனுஷனுக்கும் இடையே ஒரு மத்தியஸ்த ஊழியத்தைத் தூதர்கள் உடையவர்களாயிருந்தார்கள் எனக் கருதி தூதர்களுக்கு ஆராதனை செய்தனர். ஆதலால் தூதர் வணக்கம்

ஏற்பட்டது. கொலோ. 2:19. இன்றைய பாஸ்டர் வணக்கம்போல் அன்று தூதர் வணக்கம். அவ்வண்ணமாகவே யோவான் தூதர் வணக்கம் செய்தான் எனக் கூற முடியாது. ஏனென்றால் அவன் ஒரு அப்போஸ்தலன், ஒரு தீர்க்கதரிசி. மேலும் அந்த வேளையில் ஆவிக்குள்ளாயிருந்தான்.

142. இப்பொழுது நன்கு கவனியுங்கள். அந்த வணக்கம் அன்று பேதுரு தன் வீட்டுக்குள் பிரவேசித்தபோது, கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய் மரியாதையின் நிமித்தமாக, அன்பின் நிமித்தமாக அவன் பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டதைப் போன்ற ஒரு சம்பவமாகும், செயலாகும். அப்.10:25 & 26. பாருங்கள். நாமும் சில வேளைகளில் ஒருவர் நமக்குச் செய்த மகாப் பெரிய உதவிகளின் நிமித்தமாக, ஒருவர் மேல் வைத்துள்ள அன்பின் நிமித்தமாக காலில் விழுந்து, அல்லது கால்களைத் தொட்டு வணங்குகிறோம். மரியாதை செலுத்துகிறோம். நாம் அந்த நபரை தெய்வமாக நினைத்து வணங்குவதில்லை. ஆராதனைக்குரியவராக நினைத்து வணங்குவதுமில்லை. ஆனால் அன்பின் நிமித்தமாக, மரியாதையின் நிமித்தமாக அவ்வாறு விழுந்து வணங்குகிறோம். இது அதுபோன்ற ஒரு சம்பவம் தான், யோவான் அந்த தூதன் பாதத்தில் விழுந்து வணங்கியது.

143. மேலும் தீர்க்கதரிசிகளின் புத்திரர் (Sons of the prophets) எலியாவின் ஆவி, எலிசாவின் மேல் இறங்கி இருக்கிறது என்று சொல்லி அன்பின் நிமித்தமாக, மரியாதை நிமித்தமாக அவனுக்கு எதிர் கொண்டுபோய் தரைமட்டும் குனிந்து எலிசாவை வணங்கியது போன்ற ஒரு சம்பவமாகும். 2 இரா. 2:15.

25

144. பாருங்கள், செல்வி ஜெயலலிதா தன்னை மந்திரி ஆக்கிவிட்டார் என்ற பரவசத்தில், அவர்களிடம் தன் பயபக்தியைக் காட்ட அந்த பெண்மணியின் காலில் விழுந்து எத்தனை மந்திரிகள் வணங்குகிறார்கள் என்பதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இங்கு பணம் சம்பாதிக்க கிடைத்த ஒரு வாய்ப்பிற்காக, சந்தர்ப்பத்துக்காக காலில் விழுகிறார்கள். ஆனால் அன்று யோவான் தனக்கு கிடைத்த பெரிய சிலாக்கியத்துக்காக அதாவது உலக தோற்றம் முதல் முடிவு வரை நடந்த, நடந்து கொண்டிருக்கிற, நடக்கப்போகிற அனைத்து சம்பவங்களையும், தேவ இரகசியங்களையும் தனக்கு வெளிப்படுத்திக் காட்டின அந்தத் தூதனை மரியாதையின் நிமித்தமாக, அன்பின் நிமித்தமாக, பரவசத்தில் காலில் விழுந்து வணங்கினான். ஆதலால் யோவான் யார் காலில் விழுகிறேன் என்பதை நன்கு அறிந்தவனாகவே இருந்தான்.

145. அடுத்துப் பாருங்கள், அன்று அவன் பாதத்தில் விழுந்த கொர்நேலியாவை பேதுரு தூக்கி எடுத்து, எழுந்திரும் நானும் ஒரு மனிதன் தான் என்று கூறினது போன்று.... அந்தத் தூதனும் யோவானை நோக்கி, நான் உன் சகோதரன், உடன் ஊழியக்காரன். இப்படியிருக்க என்னை ஏன் தொழுது கொள்கிறாய்? தேவனைத் தொழுது கொள் என்றான். பாருங்கள் கொர்நேலியு ஒரு தேவ பக்தியுள்ள மனுஷன், தேதவனுக்குப் பயந்தவன். எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகிறவன். அவன் பேதுருவை ஒரு மனுஷன் என்று அறிந்திருந்தும் அவன் காலில் விழுந்து வணங்கினான். அது அன்பின் நிமித்தமாக ஆகும். அதே நிலையில் தான் யோவானும் அந்தத் தூதன் (திஸ்பியனாகிய எலியா தீர்க்கத்தரிசி) காலில் விழுந்து வணங்கினான். ஆதலால் யோவான், அந்தத் தூதன் யாரென்று அறியாமல், அல்லது அந்தத் தூதனை தேவனாக நினைத்து பாதத்தில் விழுந்து வணங்கவில்லை.

### <u>வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய தூதன் பிரன்காம் என்கிற இரண்டாம் கள்ள உபதேசம் மற்றும் அதை எதிர்த்த தேவனுடைய வல்லமை.</u>

146. அடுத்து சென்னை, வளசரவாக்கம் சபையில் யோவான் சபைக்கு முன் அடையாளமாக இருப்பதினால், யோவானுக்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல் கொடுத்தது ஏழாம் சபைக்காலத் தூதனாகிய பிரன்காம் என்று போதிக்கப்படுகிறது. ஏனென்றால் சபைக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடுகளை விவரித்துக் காண்பித்தது பிரன்காம் தான். ஆதலால் அவரைத்தான் யோவான் வணங்கினான் என்கிறார்கள். இதுகுறித்து இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல் பாகம் 2, பக்கம் 957ல் பத்தி 125ம், பக்கம் 971ல் பத்தி 175, 176ம், பக்கம் 973ல் பத்தி 181 ஐயும் தியானிப்போம்.

அ) பத்தி 125 என்ன கூறுகிறது? சபைக்காலம் முடிந்த உடனே, யோவான் எடுத்துக் கொள்ளப்பட்டதானது, லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்த உடனேயே எடுத்துக் கொள்ளப்பட்ட சபைக்கு முன் அடையாளமாக இருக்கிறது. இந்த சபைக்காலத்துக்குப் பிறகு எடுத்துக் கொள்ளப்படுதல் வருகிறது. யோவான் மேலே போனதுபோல சபையும் தேவனுடைய சமூகத்துக்கு மேலே போகிறது.

ஆ) பத்தி 175 என்ன கூறுகிறது? பத்மு தீவில் இருந்த யோவான், சபைக்கு வெளிப்படுத்துதலைக் கொண்டுவந்தவன் ஆவான். இவன் இங்கே ஏறிவா என்று அழைக்கப்பட்டு, மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்பட்ட சபைக்கு முன் அடையாளமாக இருக்கிறான் .... இவன் சபைக்கு எடுத்துக் காட்டாக இருந்தான் என்று கூறினீர்கள்.

இ) பத்தி 176 என்ன கூறுகிறது? ..... அவன் சபை முழுவதற்கும் எடுத்துக்காட்டாக விளங்கினான்.

ஈ) பத்தி 181. மோசே மரித்து உயிர்தெழும் பரிசுத்தவான்களுக்கு முன் அடையாளமாகவும், எலியாவோ மறுரூபப்படுத்தப்படும் மக்களுக்கு அடையாளமாகவும் இருக்கிறான். மோசேதான் முந்தினவன். எலியா இரண்டாமானவன். கடைசி நாளுக்குரிய தூதனாயிருக்கும்படி எலியா வைக்கப்பட்டிருந்தான். அவனோடும். அவனுடைய குழுவினரோடும் சாகாமல் எடுத்துக் கொள்ளப்படும். மோசே உயிர்த்தெழுதலை பெறும் கூட்டத்தையும், எலியா மறுரூபப்படுத்தப்படும் குழுவினரையும் கொண்டு வருகிறார்கள்.

147. இங்கு யோவான் முழுசபைக்கும் எடுத்துக்காட்டு. இங்கே ஏறிவா என்று அழைக்கப்பட்டு, மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்பட்டு சபைக்கு முன் அடையாளமாக இருக்கிறான் என்று தீர்க்கதரிசி கூறியதைக் கொண்டு, தீர்க்கதரிசி பிரன்காம்தான் யோவானுக்கு வெளிப்படுத்தின தூதன் என்று இவர்கள் கூற துணிந்தது என்ன? இவர்கள் சபையைக் குழப்புகிறார்கள். சகோ. பிரன்காமை கிறிஸ்துவாக்கியதும், யோவானுக்கு

வெளிப்படுத்தின தூதனுமாக்கியதும் அதே சாத்தானுடைய போதனைதான். இஹ்ன் விசுவாசிகளுக்கு மத்தியில் உள்ள சகோதர சிநேகத்தை, ஐக்கியத்தை சீர்குழைக்க இப்படிப்பட்ட உபதேசங்களைக் கொண்டு வருகிறான்.

148. வெளி. 1-3 அதி. சபையைப்பற்றியது. 4 வது அதி. யில் சபை எடுத்துக்கொள்ளப்படுகிறது. சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின் யோவான் மேலே எடுத்துக் கொள்ளப்பட்டு சபைக்காலத்துக்குப்பின்பு சம்பவிக்க வேண்டியவைகளைக் காண்கிறான். இந்த சம்பவத்தைக் கொண்டு யோவான் எடுத்துக் கொள்ளப்பட்ட சபைக்கு முன் அடையாளமாக இருக்கிறான் என்று தீர்க்கதரிசி கூறுகிறார். சபைக்கு தேவ இரகசியங்களை வெளிப்படுத்தினது தீர்க்கதரிசியான பிரன்காம். ஆதலால் அவரே அந்த தரிசனங்களை யோவானுக்கு காட்சியளித்தார் எனக் கூறமுடியுமா? சாத்தியமில்லாத ஒன்று. தீர்க்கதரிசி இக்காலத்துக்குரிய செய்தியில் அந்த தூதன் எலியாவாக இருக்கலாம் என கூறிச்சென்றார். இந்த அதிகப்பிரசங்கிகலோ தங்களுக்குத்தான் அனைத்தும் வெளிப்படுத்தப்பட்டது போன்று நடித்துக்கொண்டு, அதில் ஒரு உபதேசத்தைக் கொண்டு வந்து விசுவாசிகளைக் குழப்புகிறார்கள். சபைகளில் பிரிவினைகள் உண்டு பண்ணுகிறார்கள். வெளி நாட்டு உபதேசங்கள் தான் இவர்களுக்கு ஆகாரம். இவர்கள் தங்கள் ஆகாரத்தை தங்கள் வீட்டில் சமைப்பதில்லை. வெளி ஆகாரத்தையே புசித்துப் பழகினவர்கள். ஆதலால்தான் வெளியே சமையல் செய்யப்பட்டு வரும் ஆகாரத்தையே நம்பியிருக்கிறார்கள்.

149. இவர்களுடைய உபதேசத்தின்படி கீழ்க்கண்ட முன் அடையாளங்களைக் கொண்டு, இவர்கள் அனைவருக்கும் சகோ. பிரன்காம் தான் தூதனாக இருந்தார் எனக் கூறமுடியுமா?

அ) ஆபிரகாம் விசுவாசியாக இருந்தான். அவனிடம்தான் உடன்படிக்கையை தேவன் செய்தார். மேலும் அவன் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட குமாரனுக்காகக் காத்திருந்தான். எதிர்பார்த்துக் கொண்டும் இருந்தான். ஆமென்! அது உண்மை. ஆபிரகாம் சோதோமில் காணப்படவில்லை. அவன் இன்றைக்குள்ள ஆவிக்குரிய சபைக்கு ஒரு அடையாளமாக இருக்கிறான். இன்றைக்குள்ள ஸ்தாபன சபைகளுக்கு லோத்து ஒரு அடையாளமாக காணப்படுகிறான். (தேவனே தமது வார்த்தையின் வியாக்கியானி, பக்கம் 18 மற்றும் 19, பத்தி 63 மற்றும் 64)

ஆ) எந்த மனிதனும் சாராளைத் தொடமுடியாது. தேவன் வாக்குத்தத்தம் ஒன்றைச் செய்திருந்தார். சாராள் சபைக்கு முன் அடையாளமாயிருக்கிறாள். உண்மையான சபை. சுயாதீனமுள்ள ஸ்திரீ. சுயாதீனமுள்ள பிள்ளை. வாக்குத்தத்தத்தைப் பெற்று மறுபடியும் பிறந்த சபைக்கு எடுத்துக்காட்டு. (மணவாட்டி மரம் திரும்ப அளிக்கப்படுதல், பக்கம் 40, பத்தி 129 & 130)

இ) அந்த அழகான பெண் ரெபெக்காள் ...... அவள் மணவாட்டிக்கு முன் அடையாளமாகத் திகழ்கின்றாள். அவள் சென்று இதற்கு முன்பு அவள் கண்டிராத ஒருவனை விவாகம் செய்துக் கொள்வாளா? அது ஒரு மகத்தான செயல். அவள் அவனைக் கண்டதே இல்லை. அவனைக் குறித்து அவனுடைய ஊழியக்காரனின் மூலமே அவள் கேள்விப்பட்டிருந்தாள். அவள் மணவாட்டிக்கு முன் அடையாளமாயிருக்கிறாள். நீங்கள் கிறிஸ்துவைப் பார்த்ததில்லை. அவரைக் குறித்து நீங்கள் அவருடைய ஊழியக்காரர்களின் மூலம் கேள்விப்படுகின்றீர்கள். நீங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உங்கள் வீடுகளை விட்டு, அவரைக் காணச் செல்கின்றீர்கள்..... அவள் தீர்மானம் செய்தாள் .... மணவாட்டிக்கு முன் அடையாளம். அவள் ஸ்தாபன வீட்டைவிட்டு புறப்பட்டுச் செல்கின்றாள். (பதறல் பக்கம் 33, பத்தி 95 மற்றும் 96)

ஈ) ஏனோக் மேலே எடுத்துக்கொள்ளப்பட்டான். அவன் மேலே எடுத்துக் கொள்ளப்பட்ட மணவாட்டிக்கு முன் அடையாளமாயிருக்கிறான். (COD 2:21, கே.ப.339, பத்தி 144)

உ) ஆதாமின் மணவாட்டி இரண்டாம் ஆதாமின் மணவாட்டிக்கு ஒப்பானவள். தேவன் ஆதாமையும் ஏவாளையும் பார்த்து பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று கூறினார். ஆதாமின் மணவாட்டியினால் அந்த மட்டும் காத்திருக்க முடியவில்லை. அது இனி சம்பவிக்கப் போகிற ஒரு காரியமாயிருந்தது - அது ஒரு வாக்குத்தத்தம். ஏவாள் இன்னுமாக ஆதாமின் மணவாட்டியாகவில்லை. ஏனெனில் ஆதாம் அவளோடு இன்னும் வாழ்க்கை நடத்தவில்லை. கிறிஸ்துவின் மணவாட்டியும் அவருக்கு மணவாட்டியாகவில்லை. ஏனெனில் கலியாணவிருந்து இனி சம்பவிக்கவேண்டியதாயிருக்கிறது. ஏவாள் அவசரப்பட்டு விட்டாள். தன்னுடைய வித்தை சர்ப்பத்தின் வித்தோடு கலந்துவிட்டாள். மரணம் என்ற ஒரு பிள்ளையை உலகத்துக்கு கொண்டு வந்தாள். அது ஒரு தவறான பிள்ளை. அதன் பின்பு ஏற்பட்ட எல்லா பிள்ளைகளும் தாறுமாறாக்கப்பட்டவர்களே. கன்னிகையாகப் பிறந்த இயேசுகிறிஸ்துவின் சபை பெந்தெகொஸ்தே நாளில் இயேசுகிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டபின்பு, ரோம சபையின் நாட்களில் தாறுமாறாக்கப்பட்டது. விவாக நிச்சம் செய்யப்பட்ட அவளுடைய சொந்த சரீரமும் வித்தும் வேறொரு மனிதனுடைய வித்தினால் நிறையப்பட்டிருந்ததை நிச்சயிக்கப்பட்ட அவள் கணவன் கண்டான். அந்தோ ஒரு அவமானம்! ஆதாம் சரியாக அதையே கண்டான். கிறிஸ்துவும் அதையே கண்டார். கிறிஸ்துவின் மணவாட்டி உலகத்துக்கேற்றபடி உடை உடுத்துதல், உலகவழக்கமாய் ஜீவித்தல், பெரிய அழகான ஆலயங்களைக் கட்டிக் கொள்ளுதல் போன்றவைகளினால் கர்ப்பவதியாகியிருக்கிறாள். இக்காரியங்கள் எல்லாம் அவள் யார் என்பதை தெரியப்படுத்துகிறது. அவள் பிசாசினால் உண்டாயிருக்கிறாள். (உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து, இரண்டாம் பாகம், பக்கம் 12 & 13)
ஊ) தாவீது தன் ஜனங்களால் தள்ளப்பட்டு தப்பியோடி,... தள்ளப்பட்ட தாவீது இன்றைய சபைக்கு முன் அடையாளமாயிருக்கிறான். கிறிஸ்து இன்றைக்கு தமது சபையில் தள்ளப்பட்டவராயிருக்கிறார். (விளக்கைப் போடக்கூடிய ஒரு மனிதன் இருக்கிறார். பக்கம் 13, பத்தி 36.)

150. யோவான் சபைக்கடுத்த காரியங்களை மட்டுமல்ல இஸ்ரவேலருக்கு அடுத்த காரியங்களையும் தரிசனத்தில் கண்டான். உலகத்தின் முடிவுபரியந்தம் நடக்கப்போகும் சம்பவங்கள் அனைத்தையும் காட்சியாகத் தரிசனத்தில் கண்டான். மேற்கூறிய செய்திகளில் இருந்து யோவான் மாத்திரம் சபைக்கு ஒரு முன் அடையாளமல்ல, ஆபிரகாம் இன்றைய ஆவிக்குரிய சபைக்கு ஒரு முன் அடையாளம் என்றும், சாராள் சுயாதீனமுள்ள சபைக்கு முன் அடையாளம், ரெபெக்காள் மணவாட்டிக்கு முன் அடையாளம், எலியா ஏனோக் எடுத்துக் கொள்ளப்பட்ட சபைக்கு முன் அடையாளம், மோசே உயிர்தெழும் பரிசுத்தவான்களுக்கு முன் அடையாளம், எலியா மறுரூபப்படுத்தப்படும் மணவாட்டிக்கு முன் அடையாளம் என்று காண்கிறோம்,

அப்படியானால் இவர்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர் காலத்தில் இடைபட்ட தீர்க்கதரிசி தூதன் பிரன்காம் தானா? ஏனென்றால் இவர்கள் யாவரும் சபைக்கடுத்த காரியங்களில் முன் அடையாளமாயிருக்கிறார்களே! யோவான் யார் பாதத்தில் விழுந்தானோ அந்த தூதன் சகோ. பிரன்காம் என தீவிரமாக உபதேசித்து வரும் சென்னை, வளசரவாக்கம் பாஸ்டர் சாமுவேலுக்கும், பாஸ்டர் பி.எம்.ஏ சாமிக்கும் இது விபரமாக கடிதம் எழுதி, அவர்களுடைய இந்த உபதேசத்துக்கு அவர்கள் எடுத்துக்கூறும் சான்றுகளை, ஆதாரங்களை எனக்கு எழுதி உதவும்படிக் கேட்டேன். ஆனால் பதில் எதுவும் இல்லை. ஏனென்றால் பதில் கொடுக்க அவர்களிடம் சரக்கு எதுவுமில்லை.

151. இப்படிப்பட்ட ஊழியர்கள் தேவனுடைய வார்த்தையில் இருந்து, இக்காலத்துக்குரிய செய்தியில் இருந்து அல்லது தேவனிடத்திலிருந்து நேரிடையாக எதுவும் பெற்றுக் கொள்ளாமல் பற்பலப் புத்தகங்களை வாசிப்பதில் இருந்து அல்லது இண்டர்நெட் மூலம் பலருடையச் செய்திகைளப் படிப்பதின் மூலம் சில காரியங்களை கிரகித்து அந்தச் செய்தியைச் சபைக்கு ஆகாரமாக கொடுத்து, அது தங்களுடைய வெளிப்பாடு எனப் பெருமை பாராட்டிக் கொள்கிறார்கள். இவர்களிடம் சுயசரக்கு எதுவும் இல்லை. மாறாக எல்லாம் இரண்டாம் தரச் சரக்குதான். ஆதலால் இவர்களது சபையில் முதல் தரமான சரக்குகளுக்கு இடமே இல்லை. இரண்டாம்தர சரக்குகளைக் கொண்டே அவர்கள் உங்களைப் போஷிக்கிறார்கள்.

152. ஆக சாமுவேல் பாஸ்டரது இந்த உபதேசம் எடுபடாது. இவருக்குப்பின்னால் ஒரு கூட்டம் ஜனங்கள் தங்கள் ஆத்துமாக்களை பாழாக்குவதில் மும்முரமாக இருக்கிறார்கள். ஆனால் இவரோ தனக்கு அசையா சொத்துக்களைச் சேர்ப்பதில் மும்முரமாக இருக்கிறார். இவர் ஒரு உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன் என்றால் விசுவாசிகளிடமிருந்து கட்டிடம் கட்ட பணம் வசூல்செய்து, நன்கொடை ரசீது அடித்து பணம் வசூல் செய்து கட்டிடம் கட்டி அதை தன் பெயரில் பதிவுசெய்து கொண்டதை சபை பெயரில் பொதுவுடமையாக்க வேண்டும். அப்பொழுதுதான் இவருக்கு இரட்சிப்பு. சகேயுவை மாதிரி இவரிடம் உள்ள விசுவாசிகளை தனது சாதுரியமான பேச்சினால் கவர்ந்து சம்பாதித்த பணத்தை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுக்காவிட்டாலும், மனம் திரும்பி தன் வீட்டையும் சபை கட்டிடத்தையும் சபைக்குரிய சொத்தாக மாற்றினால் போதும். இதை இந்த பாஸ்டர் செய்வாரா? நிச்சயமாக செய்யமாட்டார். அது யாராக இருந்தாலும் சரி. ஊழியத்தில் இருந்துகொண்டு சபையின் பெயரில் மக்களிடமிருந்து பணம் வசூல்செய்து, அல்லது வெளிநாட்டினரிடமிருந்து பணம் பெற்று, கட்டிடம் கட்டி அதை தன் பெயரில் தக்க வைத்துக் கொள்ளும் ஊழியக்காரர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சம் இல்லை. இவர்களைவிட ஸ்தாபன சபை பாஸ்டர்கள் எவ்வளவோ மேன்மையானவர்கள்.

153. பாருங்கள், கீழாம்பாக்கம் பாஸ்டர் ஏசுதாஸ் கணேஷன் இதே தில்லுமுல்லு பண்ணி, பாஸ்டர் பி.எம்.ஏ. சாமியை ஏமாற்றி, பாஸ்டர் ஜான் சாமுவேலை ஏமாற்றி லட்சக்கணக்கில் பணம் சேகரித்து தனக்கு வீடு கட்டி, சபைக்கட்டிடம் கட்டி அனைத்தையும் தன் பெயரில் தக்க வைத்து லட்சாதிபதியானார். அவர் முடிவு என்ன? சரித்திரமே சாட்சி கூறும். இன்று அவரது மனைவி அதை வைத்துக்கொண்டு உரிமை கொண்டாடி வருகிறாள். இவர்கள் இருவர் மட்டுமல்ல, இப்படிப்பட்ட ஊழியக்காரர்கள் நம் மத்தியில் பலர் உண்டு. இவர்களைக் குறித்து ஏற்கனவே செய்தி தொகுப்புகளில் எழுதி எச்சரித்து இருக்கிறேன். இவர்களைவிட ஸ்தாபன ஊழியக்காரர்கள் எவ்வளவோ மேல். அவர்கள் பாஸ்டருக்கு வீடு, சபைக் கட்டிடம் கட்டி அனைத்தையும் பொதுவுடமையாக்கிவிடுகிறார்கள். ஆனால் இவர்கள் தங்கள் பெயரில் தக்கவைத்துக் கொள்கிறார்கள். ஆனால் தங்களை மணவாட்டி என்று மார்பு தட்டிக் கொள்கிறார்கள். இந்த வெட்கக்கேட்டை வெளியே சொல்லவே வெட்கமாக இருக்கிறதே!

154. நான் ஆவியானவடேைய வழி நடத்துதலின்படி வளசரவாக்கம் பாஸ்டர் சாமுவேலுடைய ஊழியம், உபதேசம் குறித்து கடுமையாக விமர்சித்து, விசுவாசிகள் அவரைவிட்டு விலகவேண்டும் என ஒரு விழிப்புணர்ச்சியைக் கொண்டு வருவதால் என் மீது தவறான குற்றச்சாட்டைக் கூறி என் ஊழியத்தைக் கறைப்படுத்தி வருகிறார்கள். அதாவது நான் பஸ்ஸில் டிக்கட் எடுக்காமல் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைக்கப்பட்டேன் என்று. பாஸ்டர் சாமுவேல் என்மீது இந்த குற்றச்சாட்டைக் கூற, இந்தப் பொழிச்சலூர் பாஸ்டர் மோசஸ் பாபு மெகா போன் வைத்து சபை எங்கும் பிரச்சாரம் செய்து வருகிறார்.

155. ஆதலால் இதற்கும் நான் பதில் எழுதவேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறேன். 2002ஆம் ஆண்டு கடைசி மாதம் நான் என் மகன்கள் இருவரையும் வேலையில் அமர்த்த திருவைகுண்டத்திலிருந்து சென்னை வந்த நாட்கள் அது. எங்களுக்கு கோடம்பாக்கத்திலிருந்து பூவிருந்தவல்லி வந்து, பின் அங்கிருந்து பழஞ்சூர் கிராமம் செல்ல வேண்டும். நான் இதற்கு முன் இந்தப்பகுதிக்கு வந்ததே கிடையாது. கோடம்பாக்கத்திலிருந்து பூவிருந்தவல்லிக்கு பஸ் எண்.25 ஜி வருகிறது. ஆனால் நாங்கள் கோடம்பாக்கத்தில் விசாரித்ததற்கு எங்களை போரூர் சென்று, பின் அங்கிருந்து பூவை செல்லுங்கள் என்று ஒருவர் ஆலோசனைக் கூற, நாங்கள் 37ஜி என்ற பஸ்ஸில் போரூர் வந்து சேர்ந்தோம். இது மாலை 5 மணிக்குமேல் பஸ்ஸில் ஏகப்பட்ட கூட்டம் . போரூரில் இறங்கி பின் பூவைக்கு அடுத்த பஸ் பிடித்தோம். நாங்கள் பஸ் முன்பக்கம் ஏறிவிட்டோம். கண்டக்டர் பஸ்ஸின் பின்பக்கம் இருந்தார். நான் முன்பக்கத்தில் பையன்கள் இருவரையும் நிறுத்திவிட்டு, டிக்கட் எடுக்க கூட்டத்தின் மத்தியில் கஷ்டப்பட்டு பின்புறம் வந்தேன். அந்த வேளையில் பஸ் இரண்டாவது ஸ்டாப் வந்துவிட்டது. நான் பஸ் பின்பக்கம் கண்டக்டரிடம் வந்து சேரவும், பஸ் இரண்டாவது ஸ்டாப் வரவும், அங்கு டிக்கட் பரிசோதகர் பஸ் வாசலண்டை வந்து நிற்கவும் நேரம் சரியாக இருந்தது. டிக்கட் பரிசோதகர் கீழே நின்றுகொண்டு, பஸ் மேலே கையில் காசுடன் நின்ற என்னை டிக்கட் கொடுங்கள் என்று கேட்க, டிக்கட் எடுக்கவே முன்புறமிருந்து பின்புறம் வந்துள்ளேன். இப்பொழுதுதான் டிக்கட் எடுக்கப்போகிறேன் எனக் கூற, அவர் நீ எங்கு ஏறினாய் என்று கேட்க, நான் போரூர் என்று கூற, பஸ் இரண்டு ஸ்டாப் வந்துவிட்டது, நீ ஏன் டிக்கட் எடுக்கவில்லை எனக் கூறி என்னை கீழே இறங்குங்கள் என்று கூறினார். நானும் இறங்கி, என் பையன்கள் இருவர் பஸ் உள்ளே உள்ளனர் என்று கூற, அப்படியானால் அவர்களையும் கீழே இறக்கு என்று கூற, ஆக மூவரும் கீழே இறங்கவும் பஸ் சென்று விட்டது.

156. டிக்கெட் பரிசோதகர் நீங்கள் மூவரும் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்கிறீர்கள், என்னைக் கண்டவுடன் டிக்கெட் எடுக்க முயற்சித்தீர்கள் என்று கூறி ரூ.500/-வீதம் மூவருக்கும் ரூ.1.500/- அபராதம் கட்ட வேண்டும் எனக் கூற, நான் மறுக்க, பின் ரூ.900/- கேட்க, அழ்ற்கும் நான் மறுக்க, பின் ரூ.300/- கேட்க நான் அழ்ற்கும் மறுக்க, அப்படியானால் காவல்நிலையத்திற்கு வாருங்கள் எனக்கூற, நான் அதை ஏற்றுக் கொள்ள, எங்கள் மூவரையும் அடுத்த பஸ்ஸில் ஏற்றி அய்யப்பன்தாங்கல் காவல்நிலையம் கூட்டிக் கொண்டு வந்தார்.

157. அங்கு நான் காவல்துறை ஆய்வாளரிடம் நடந்த விவஜ்த்தைக் கூற, அவர் முடிவாக ரூ.100/- கொடுத்து முடித்துவிடுங்கள் எனக் கூற, நான் பணம் என்னிடம் இல்லை எனக்கூற, இந்தப் பகுதியில் யாராவது தெரியுமா என்றுக் கேட்க, நான் வளசரவாக்கம் பகுதியில் எங்கள் பாஸ்டர் ஒருவர் இருக்கிறார் எனக்கூற, அவருக்கு காவல்துறை நிலையத்திலிருந்து போன் செய்து கூப்பிடச் சொன்னார்கள். நான் பாஸ்டர் சாமுவேலுக்கு போன் பண்ணி விவரம் கூற, உடனே அவரும் ரூ.100/- உடன் வர, அதை டிக்கெட் பரிசோதகரிடம் கொடுக்க, அவர் அதை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டார். ஆனால் அவர் பணத்தைப் பெற்றுக் கொண்டவுடன் அதற்கு ரசீது கொடுங்கள் என நான் கேட்க, அவர் அதற்கு முழிக்க, முடிவாக அடுத்து வந்த பஸ்ஸில் ரூ.5/- க்குரிய டிக்கெட் இருபது வாங்கி அதை அவர் கிழித்துப் போட வைத்தேன்.

158. பின் எனது இரண்டு பையன்களையும் காவல்நிலையத்தில் உட்கார வைத்துவிட்டு, நானும் பாஸ்டர் சாமுவேலும் அவரது வாகனத்தில் பழஞ்சூர் கிராமம் சென்று, பையன்கள் வேலை ஆர்டரை அங்கு குயின்ஸ் லேண்டு பார்க்கில் கொடுத்துவிட்டு, திரும்பி வந்து பையன்கள் இருவரையும் கூட்டிக்கொண்டு நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தோம்.

159. இதில் உண்மையாகவே பாஸ்டர் சாமுவேல் எனக்கு அந்த வேளையில் மிக்க உதவி செய்தார். அதற்கு நான் எப்பொழுதுமே நன்றி உள்ளவனாகவே இருப்பேன். நான் இன்றுகூட அவரை மிகவும் நேசிக்கிறேன். ஆனால் அந்த உதவிக்காக ஆவிக்குரிய காரியங்களில் நான் அவருடன் இசைந்துப் போகமுடியாது. ஏனென்றால் அவருடைய காரியங்கள் தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் மாறுபாடாக இருக்கிறது. ஆனாலும் அவர் எனக்குச் செய்த உதவிகளுக்குரிய பலனை கர்த்தர் ஏற்ற வேளையில் அவருக்கு கொடுத்திருப்பார் என நம்புகிறேன். என் ஊழியத்தின் பாதையில் அவரது ஊழியத்தை நான் கடிந்துகொள்வதால் ஒன்றரை ஆண்டுகள் கழித்து இப்பொழுது என் மீது சகோ. காலேப் யோசுவா தன் இரு பையன்களுடன் பஸ்ஸில் டிக்கெட் எடுக்காமல் பிரயாணம் செய்தார், நான் பணம் கொடுத்து அவரை காவல்நிலையத்திலிருந்து மீட்டு வந்தேன் என்று குற்றம் சாட்டுகிறார்.

160. நீங்கள் இவரது குற்றச்சாட்டும் , சகோ. மோசஸ் பாபு தாரை ஊதி தப்பட்டம் அடிப்பதும் பிசாசினுடைய சூழ்ச்சி என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இதை இங்கு எழுதுகிறேன்.

<u>வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய தூதன். பிரன்காம் என்கிற மூன்றாம் கள்ள உபதேசம் மற்றும் அதை எதிர்த்த தேவனுடைய வல்லமை.</u>

161. இந்த உபதேசத்தைக் கொண்டு பாஸ்டர் பி.எம்.ஏ. சாமி என்னோட வாதாடினார். இதுகுறித்து தீர்க்கதரிசி ஐந்தாம் முத்திரையில் பத்தி 203 முதல் 214 வரை கூறியுள்ளதாக கூறுகிறார். இந்த பத்தியில் அந்த தூதன் யார் என்று மறைமுகமாக அவர் தன்னைத்தான் கூறுகிறார் என வாதாடுகிறார். தீர்க்கதரிசி சத்தியத்தை வெளிப்படுத்த வந்திருக்கிறாரேயன்றி எதையும் மறைமுகமாகக் கூறிச் சபையைக் குழப்பத்துக்குள்ளாக்க அல்ல என்பது என்னுடைய வாதம். அப்படியானால் இரகசியம் வெளிப்படவில்லை என்பதே அர்த்தமாகும். மேற்கண்ட பகுதியை நான் உங்களுக்கு தருகிறேன். ஏனென்றால் தூதனும் கடைசி, செய்தியும் கடைசி. இந்தத் தூதனுக்குப் பிறகு வேறொரு தூதனும் இல்லை, செய்தியும் இல்லை.

அ) பத்தி 203. யோவான் பத்மு தீவிலிருந்த போதும், இந்தச் செய்தி அவ்வளவு பரிபூரணாய் இருந்ததால் அவர் அதை ஒரு தூதனிடத்தில் ஒப்படைக்க முடியாதவராய் இருந்தார். ஒரு தூதன் என்பவன் ஒரு செய்தியாளன் என்று நீங்கள் அறிவீர்கள். ஆனால் அந்த செய்தியாளன் ஒரு தீர்க்கதரிசியும் கூட என்பது உங்களுக்கு தெரியுமா? நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? (சபைார் "ஆமென்" என்கின்றனர் - ஆசி) அதை நாம் நிருபிப்போம். வெளிப்படுத்தல் 22 - ம் அதிகாரம் - அவன் ஒரு கழுகா என்பதை நாம் பார்ப்போம். ஆம், பாருங்கள். அவன் ஒரு.... நிச்சயமாக அவன் ஒரு தூதன், அவன் அந்தச் செய்தியாளன். ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் முழுவதையும் அவனுக்கு (யோவான் - தமிழாக்கியோன்) வெளிப்படுத்தியது ஒரு தீர்க்கதரிசியாவான்.

ஆ) பத்தி 204. வெளிப்படுத்தின விசேஷம் 22ம் அதிகாரம் 19வது வசனம் - நான் இங்கு எழுதி வைத்துள்ளது. அதுவே என்று நம்புகிறேன்.... 22:19, ஒருவேளை நான் தவறாக இருக்கக் கூடும். இல்லை, (யாரோ ஒருவர் ஒருவேளை அது 22:9 ஆக இருக்கலாம் என்கிறார் - ஆசி) 22:9 ம் அதுதான். நான் 22:9 வது வசனத்தைதான் பார்த்துக் கொண்டிருந்தேன். அது சரி. ஓ, ஆம். இங்கே உள்ளது. அதற்கு அவன், நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார், உன்னோடும் உன் சதோதரரோடும், தீர்க்கதரிசிகளோடும்..... நானும் ஒரு ஊழியக்காரன்.

இ) பத்தி 205 யோவான் எதைக் காண்கிறான் என்று பாருங்கள். யோவானாகிய நானே இவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தேன்.

ஈ) பத்தி 206. இப்பொழுது யோவான் இப்புத்தகத்தை முடிக்கும் தருணம் இது. இதுதான் அப்புத்தகத்தின் கடைசி அதிகாரம். நான் கேட்டுக் கண்டபோது, இவைகளை எனக்குக் காண்பித்தத் தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன்.

உ) பத்தி 207. ஆகவே அவன் அதன் பின், அந்த தூதன் பாருங்கள் அதற்கு அவன். (என்னிடம்) நீ இப்படிச் செய்யாதபடிக்குப்பார்.

ஊ) பத்தி 208 எந்த ஒரு உண்மையான தீர்க்கதரிசியையும், எந்த ஒரு செய்தியாளனையும் யாரும் வணங்கக் கூடாது. பாருங்கள், தொழுகை என்பது தேவன் ஒருவருக்கு மட்டுமே. நீ இப்படிச் செய்யாதபடிக்குப்

பார். உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்த புத்தகத்தின் வசனங்களை கைக்கொள்கிறவர்களோடும் கூட நானும் ஒரு ஊழியக்காரன், தேவனைத் தொழுது கொள் என்றான்.

எ) பத்தி 209 பாருங்கள்? இப்பொழுது, இந்த புத்தகம் மிகவும் முக்கியமானது. இது தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது. இப்பொழுது கவனியுங்கள். தேவனுடைய வார்த்தையைக் கொண்டு வரப்படவேண்டுமெனில், அது ஒரு தீர்க்கதரிசியால் கொண்டுவரப்பட வேண்டும். ஏனெனில் அவனிடத்தில் தான் தேவனுடைய வார்த்தை வரும்.

ஏ) பத்தி 210 அதைக் குறித்த ஒரு கேள்வியை நீங்கள் இந்த பெட்டியில் போடுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அவ்விதம் கேள்வி கேட்க இருப்பவர்களை நான் சிறிது முந்திக்கொள்ளலாம் என்று நினைத்தேன் என்று நீங்கள் அறிவீர்கள். அதைப்போன்ற ஒன்று அங்கே உள்ளே இருக்கிறது என்று நான் உணருகிறேன். இவ்விதமாக நான் அவைகளை (கேள்விகளை) பெற்றுக்கொள்வேன் என்று நினைத்தேன். நீங்கள் பாருங்கள், பாருங்கள்?

ஐ) பத்தி 211. தேவனுடைய வார்த்தை ஒவ்வொரு வார்த்தையும் கொண்டுவரப்படுகின்றது. பாருங்கள்? வேதம் ஒருபோதும் அதன் முறைகளை மாற்றுவது கிடையாது. அது அவ்விதமே உள்ளது. ஆகவே நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அந்த தீர்க்கதரிசியிடமே தேவனுடைய வார்த்தை உண்டாகும். இப்பொழுது வெளி. 10:1-7 கவனியுங்கள்.

ஒ) பத்தி 212. இப்பொழுது மறுபடியுமாக 9ம் வசனம் படிப்போம். இங்கு நாம் பெறுவது.... நாம்.... அதைப்படிப்பதற்கு முன்பாக உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன்.

ஓ) பத்தி 213. இந்த முத்திரைகளை நாம் கடந்து செல்வதற்கு முன்பாக (நான்கு முத்திரைகள் - தமிழாக்கியோன்) இதை நீங்கள் நன்றாக புரிந்து கொண்டீர்களா? கழுகுக்குப்பின்பு வேறொரு வல்லமை புறப்பட்டுச் செல்வது கிடையாது. பாருங்கள், அந்திக்கிறிஸ்து ஒவ்வொரு முறையும் ஒரு வல்லமையை அனுப்பினான். அந்திக் கிறிஸ்து வேறொரு வல்லமையை அனுப்பும் போது அதை எதிர்க்க தேவன் வேறொன்றை அனுப்பினார். அதன் பின் அவன் மற்றொன்றை அனுப்பினான். அதை எதிர்க்க தேவன் வேறொன்றை அனுப்பினார். பாருங்கள்? கடைசியாக கழுகு தோன்றும்போது ஆரம்பத்தில் இருந்தவாறே அது அவருடைய வார்த்தையாக அமைந்திருக்கும்.

ஔ) பத்தி 214. இப்பொழுது, கவனியுங்கள் நாம் எதிர்பார்க்கும் அந்த மனிதன் எலியாவின் ஆவியைப்பெற்றிருப்பான். அவன் எலியாவல்ல. ஆனால் அவனைப் போன்ற ஒருவனாக இருப்பான். ஸ்தாபனங்களின் தவறான போதகங்களில் விழுந்து கிடக்கும் மக்களை பிதாக்களின் மூல விசுவாசத்திற்கு கொண்டு செல்வதே அவன் ஊழியமாயிருக்கும். இது வேதத்துடன் ஒத்ததாயிருக்கிறது. அதைக்குறித்து நான் வேறொன்றையும் கூற விரும்பவில்லை. ஏனெனில்.... அது அவ்விதமாகவே இருக்கிறது. நீங்கள் அங்கேதான் வரவேண்டும். நான் கூறினது உண்மையாகும். நீங்கள் அதை எவ்விதம் புரட்டி வித்தியாசமான வியாக்கியானங்கள் கொடுத்தாலும் எனக்கு கவலை இல்லை. நான் கூறினவிதமாகவே அது அமைந்திருக்கும்.

162. அ. இங்கு பத்தி.203ல் நாம் என்ன காண்கிறோம்? இந்தச் செய்தி அவ்வளவு பரிபூரணமாய் இருந்ததால் அவர், (இயேசு) இதை ஒரு தேவதூதனிடத்தில் (Angel) ஒப்புக் கொடுக்கவில்லை. வெளிப்படுத்தின விசேஷம் முழுவதையும் யோவானுக்கு வெளிப்படுத்த இயேசு ஒரு தீர்க்கதரிசியையே உபயோகித்தார்.

ஆ. பத்தி.204ல் வெளி. 22:9 யை வாசிக்கலாம். அதற்கு அவர், நீ இப்படிக்கு செய்யாதபடிக்குப் பார். உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசியோடும் நான் ஒரு ஊழியக்காரன் எனக் காண்கிறோம்.

இ. பத்தி 205, ஈ. பத்தி 206, உ. பத்தி 207ல் முக்கியத்துவம் எதுவும் இல்லை.

ஊ.பத்தி 208 எந்த ஒரு தீர்க்கதரிசியையும் செய்தியாளனையும் யாரும் வணங்கக்கூடாது. தொழுகை தேவனுக்கு மட்டும் உரியது என்கிறார்.

எ. பத்தி 209 வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் மிகவும் முக்கியமானது. இது தேவனுடைய வார்த்தை. தேவனுடைய வார்த்தை ஒரு தீர்க்கத்தரிசிக்கே வரும் என்று கூறி ஆதலால்தான் யோவானுக்கு வெளிப்படுத்த ஒரு தீர்க்கத்தரிசியே அனுப்பப்பட்டான் என்ற முக்கியத்துவத்தைக் கூறுகிறார்.

ஏ. பத்தி 210. இங்கு முக்கியத்துவம் ஏதுமில்லை.

ஐ. பத்தி 211. இங்கு தேவனுடைய வார்த்தை ஒரு தீர்க்கத்தரிசிக்கு உண்டாகும் என்று கூறிவிட்டு, இப்பொழுது தனது ஊழியம் குறித்ததான பகுதி வெளி. 10: 1-7க்கு திரும்புகிறார். நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அந்தத் தீர்க்கத்தரிசியிடமே தேவனுடைய வார்த்தை உண்டாகும் என்கிறார். இவர் இங்கு தம்முடைய ஊழியத்தைப்பற்றித் தான் கூறுகிறார். பாருங்கள் நாம் யோவானுக்கு வெளிப்படுத்தின தீர்க்கத்தரிசியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கவில்லை. நாம் ஏழாம் சபைக்காலத் தூதனுக்குத்தான் எதிர்நோக்கிக் கொண்டிருந்தோம். அவர் வந்து தன் எக்காளத்தை ஊதப்போகிறபோது தேவனுடைய இரகசியம் நிறைவேறும் என்ற வாக்குப்படி இந்தச் சபைக்காலத்தில் தேவ இரகசியம் நிறைவேறியது.

ஒ. பத்தி 212. வெளி. 22: 9 ஐ படிக்கலாம் என்றுக் கூறி அதைப் படிக்கும் முன்பு வேறொரு காரியத்தைக் குறித்து பேச ஆரம்பிக்கிறார்.

ஓ. பத்தி 213 கழுகுக்குப் பிறகு வேறொரு வல்லமை புறப்பட்டுச் சென்றது கிடையாது என்று கூறுகிறார். அதற்கு காரணத்தையும் கூறுகிறார். அதாவது அந்திக்கிறிஸ்து ஒவ்வொரு முறையும் ஒரு வல்லமையை அனுப்ப அதை எதிர்க்கத் தேவனும் ஒரு வல்லமையை அனுப்புகிறார். கடைசியாக அனுப்புவது கழுகு என்று தன் ஊழியத்தைப் பற்றி கூறி தனது ஊழியத்துக் பின்பு வேறொரு ஊழியம் கிடையாது என்று சபைக்கு கூறுகிறார். ஏனென்றால் அதன் பிறகு அந்திக்கிறிஸ்து வேறொரு வல்லமையை அனுப்பவில்லை. ஆதலால் அதை எதிர்க்க தேவனும் மற்றொரு வல்லமையை அனுப்பவேண்டிய தேவை இருந்ததில்லை என்று கூறுகிறார்.

ஔ. பத்தி 214 இங்கு தனது ஊழியத்தைப் பற்றி கூறுகிறார். தான் எலியாவின் ஆவியைப் பெற்றவன் என்றும், ஆனால் தான் சரீரப்பிரகாரமாக எலியா அல்ல என்று கூறுகிறார். மேலும் தனது ஊழியம் ஸ்தாபனங்களில் தவறானப் போதனைகளில் விழுந்துக் கிடக்கும் மக்களைப் பிதாக்களின் மூல விசுவாசத்திற்குக் கொண்டுச் செல்வதாகும் என்கிறார்.

ஃ. பத்தி 215ல் வெளி. 6:9க்கு சென்றுவிடுகிறார். இங்கு பலிபீடத்தின் கீழ் உள்ள ஆத்துமாக்களைக் குறித்துப் பேசுகிறார்.

163. பாருங்கள், நாம் தியானித்த இந்தப் பகுதிகளில் ஏழாம் சபைக்காலத் தூதன் வெளி. 22:9ல் கூறப்பட்டுள்ள தூதன் தான் என்று எங்கும் கூறவில்லை. பத்தி 211ல் யோவான் வணங்கிய தூதனை வெளி. 10:1-7 தூதனோடு ஒப்பிடுகிறார் என்பது ஒரு மாயையான யூகம். மக்களைத் திசைதிருப்பும் தந்திரமான போதனையாகும். வெளி. 10.1-7 வசனங்கள் பலமுள்ள தூதன் உண்டு. அது கிறிஸ்து. அடுத்து ஏழாம் தூதன். அது ஏழாம் சபை தூதன் வில்லியம் மாரியன் பிரன்காம் என்று நாம் அறிவோம். இங்கு யோவான் வணங்கிய தூதனுக்கு இடமில்லை.

164. ஆதலால் இந்தப் பகுதிகளைக் கொண்டு யோவான் வணங்கிய தூதன் ஏழாம் சபைக்காலத் தூதன் என்பது பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும் பேய்தனத்துக்கடுத்ததுமாய் இருக்கிறது. சகோ. பிரன்காம் எல்லாவற்றிலும் எல்லாவுமாயிருக்கிறார் எனக்கூறி அவரை பிரன்காம் கிறிஸ்து என்று அழைக்கும் கூட்டத்தினரை இவர்கள் மறைமுகமாகச் சார்ந்தவர்கள். இவர்களது மாம்சமும் இரத்தமும் இந்த வெளிப்பாட்டை இவர்களுக்குக் கொடுத்தது. இவர்கள் ஆவிக்குரியவர்கள் அல்ல.

165. கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாகத் திகழ்ந்த அந்த மகத்தான தீர்க்கதரிசியாகிய எலியாவைப் பாருங்கள். இரட்டிப்பான ஆவியைப்பெற்ற எலிசா தீர்க்கதரிசி சபைக்கு முன் அடையாளமாயிருக்கிறான். (அழுத்தத்தை வெளியேற்றுதல், பத்தி 124) எலியாவின்ஆவி குறித்து. நான் உங்களிடத்துக்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். அவன் பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களிடத்துக்கும் திருப்புவான் என்று மல். 4 அதி கடைசி வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

166. எலியா தன் நாட்களில் தலைமயிர் வெட்டியிருந்த பெண்களைக்கண்டு கூச்சலிட்டான். முகத்தில் வர்ணம் தீட்டியிருந்த யெசபேல்களைக் கண்டித்தான்.... அவன் காலத்து ஆசாரியர்கள் அவனைப் பரிகாசம் செய்தனர். ஒருநாள் அவன் நடந்து நதியை அடைந்தான். அந்த நதிக்கு அக்கரையில் குதிரைகள் ஒரு புதரில் கட்டப்பட்டிருந்தன.... அக்கினி ரதமும் அக்கினிமயமான குதிரைகளும், அவன் அதிலேறி, அவனுக்கு அடுத்ததாக வரவேண்டிய தீர்க்கதரிசியிடம் தன் அங்கியை எரிந்து விட்டு மேலே பரலோகம் சென்றான். அவன் நித்தியஜீவனின் வழிநடத்துதலைப் பெற்றுக் கொண்டான். ஏனெனில் எலியாவுக்குள் இருந்தது கிறிஸ்துவே!

167. இது என்ன? என்னைப்பின்பற்றி வா உங்கள் தலைவனை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.... இயேசு என்னைப்பின்பற்றி வா என்று கூறினதை நினைவில் கொள்ளுங்கள்..... அவரை நித்தியஜீவனுக்கு நீங்கள் பின்பற்ற விரும்பினால், நீங்கள் அவருடைய நிபந்தனைக்கு வரவேண்டும். அது உண்மை. அதாவது வார்த்தைக்கு. ஒரு கோட்பாடின் மேல் அல்ல. பொது ஜனங்களின் அபிப்பிராயத்தின் மேல் அல்ல. ஆனால் தேவன் அதைக்குறித்து என்ன கூறியுள்ளார் என்பதின் மேல் நீங்கள் சார்ந்திருக்கவேண்டும்..... அவரை நாம் பின்பற்றவேண்டும். நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ள இது ஒன்றுதான் வழி. எனவே தேவனுடைய வழிநடத்தல் என்பது பரிசுத்த ஆவியினால் உறுதிப்படுத்தப்பட்ட இந்த மணி நேரத்திற்கான வார்த்தையை பின்பற்றுவதாகும். ஆதலால் நீ உன்னுடைய சபை செல்லும் வழியைப் பின்பற்றாமல் கிறிஸ்துவின் வழிநடத்துதல் ஏற்றுக்கொள். (தியானியுங்கள். வழிநடத்தும் தன்மை. பக்கம் 63-65).

168. பிரியமானவர்களே, வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய தூதன் ஏழாம் சபைக்காலத் தூதன் அதாவது வில்லியம் மாரியன் பிரன்காம் என்ற உங்கள் சபைகள் வழிநடத்தும் தன்மையை விட்டு விலகி, உங்கள் பாஸ்டர்கள் கோட்பாடுகளில் இருந்து விலகி, பொதுவான விசுவாசிகளின் அபிப்பிராயத்திலிருந்து விலகி, தேவன் அதைக்குறித்து என்ன கூறுகிறார், இக்காலத்துக்குரிய செய்தி அந்தத் தூதனைக் குறித்து என்னக் கூறுகிறது என்பதை சார்ந்துக் கொள்வீர்களானால் நீங்கள் தேவனுடைய வழிநடத்துதலுக்கு உட்பட்டவர்கள். மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்கும். ஆதலால் பிரன்காம் கிறிஸ்து ஆவி தொடர்ந்து வந்து உங்கள் பாஸ்டர் பி.எம்.ஏ சாமி மற்றும் பாஸ்டர் சாமுவேல் மூலம் கிரியை செய்துகொண்டு வருகிறதை அறிந்து, உணர்ந்து அவர்கள் உபதேசங்களை விட்டு விலகுங்கள். அவர்களிடமிருந்து உங்களை வேறு பிரித்துக் கொள்ளுங்கள்.

<u>வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய தூதன் பிரன்காம் என்கிற நான்காம் கள்ள உபதேசம் மற்றும் அதை எதிர்த்த தேவனுடைய வல்லமை.</u>

169. இந்த நான்காம் கள்ள உபதேசத்தைக் கொண்டு வந்தவர் சகோ. சி.டபுள்யூ. வூட் (C.W. Wood) என்பவராகும். இவர் 1967ல் செய்திக்குள் வந்தாகக் கூறுகிறார். [redacted]. இவரது கள்ள உபதேசத்ததை ஆங்கிலத்தில் கீழே தந்து அதன் விளக்கத்தை தமிழில் நான் சுருக்கமாக தருகிறேன். Dewitt Tabernacle Teaching Series Vol. No.1,Chapter 2 "Identification Who are we" என்ற தலைப்பில் இருந்து நான் எடுத்துள்ள பகுதிகள் இவரது புத்தகத்தில் 24 வது பக்கம் 2 ம் பத்தி முதல் 26 ம் பக்கம் 2 ம் பத்தி வரை (14 பத்திகள்) மேலும் 18 ம் பக்கம் 2 பத்தி முதல் 19 வது பக்கம் முதல் பத்தி வரை (5 பத்திகள்) ஆக மொத்தம் 19 பத்திகளில் அடங்கியிருக்கிறது. இதை நமது சௌகரியத்துக்காக பத்தி 1-19 வரை எண்கள் கொடுத்துள்ளேன். இவர் தனது செய்திகளை இரண்டு பாகங்களாக வெளியிட்டுள்ளார். இதைக்குறித்து ஒரு முறை சகோ. யோவேல் மூடி பரமானந்தம் (Voice of God Recordings) அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அவர் என்னிடம் கூறியதாவது : அவர் ஒருமுறை ரோம் நகருக்கு பிரயாணப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் ஒரு சகோதரர் இந்தப் புத்தகங்களை அவரிடம் கொடுத்ததாகவும், அவர் விமானத்தில் பிரயாணம் செய்த நேரத்தில் சில பகுதிகளை வாசிக்கும் பொழுது அதில் ஆவியின் வழிநடத்துதல் இல்லாததால் அந்தப் புத்தகங்களை விமானத்திலேயே விட்டு விட்டு இறங்கியதாகக் கூறினார். ஆனாலும் யோவான் வணங்கிய அந்தத் தூதன் சகோ. பிரன்காமாகவும் இருக்கலாம் என தன் அபிப்பிரயாத்தைத் தெரிவித்தார்.

170. 1. Rev. 1:1 tells us that an angel gave the revelations to John. In years past we have supposed that this was heavenly angel. This supposing was because we did not have full revelation on other scripture pertaining to this mysterious subject.
2. When we read Rev. 19:9-10 we see that John tried to worship the angel that was showing him all the revelations, but he was corrected by the angel who said "**I am thy fellow servant and of thy brethren, worship God."**
3. But John was so overcome by the presence of this supernatural being that he tried the second time to worship him, and was told in Rev.22:9 **"See thou do it not.... for I am of thy brethren the prophets."**
4. There it is, the angel who gave John the Book of Revelations was a prophet. In teaching on this Brother Branham said in "Rev. of Jesus Christ" Pg..25. QUOTE: " And it was sent and signified this by His angel unto John. We do not know who the angel was. The Bible doesn't say who the angel was, but we know it was a prophet, then we find out later that when John started to worship the angel, the angel said, "**See thou do it not,"Rev. 22:9, and he said "for I am of thy fellow servants the prophets"**

5. CONT. QUOTE: ...... "It might have been Elijah, it might have been one of the prophets. John was an Apostle, but this prophet was sent. Look at the nature of all the rest of the epistles. That proves it wasn't John. (who wrote Revs.) because it has no nature like John. John was a writer, but this is the spirit of a prophet." (End quote)
6. The Bible says that the word of the Lord must come thru a prophet. (Amos 3:9) Even John on Patmos had to receive the revealed word from a God sent prophet. When we consider who the end time prophet was, who was to tie all the loose ends together, and reveal all the mysteries, we can know that it was to happen when the angel of Rev. 10:7 began to sound (preach).
7. Can we believe that this prophet that came to John on patmos was William Branham, in his theophany body, 2000 years before he ever appeared on earth in flesh?
8. Brother Branham saw his own theophany on Sunset Mountain when the seven angels came down. We know from his teaching that these angels were the seven church age messengers, come down in their theophany bodies to reveal the seven thounders.
9. We also know that Brother Branham was one of these seven. It seems very clear to this writer that Brother Branham was telling us, in some statements he made, who this seventh angel was.
10. QUOTE : SEVENTH SEAL BK., PG.560 "And did you notice that one angel? I said in there he was a strange angel. He looked more to me than any of the rest of them. He was brighter, he looked more to me than any of the rest of them. It picked me up, lifted me up. Do you remember that?
11. QUOTE : SEVENTH SEAL BK., PG. 565 "Remember, the seventh messenger was the noted one to me. The seventh angel, it seemed more to me than any."
12. QUOTE: SEVENTH SEAL BK., PG. 578: Another thing I want you to notice, what took place. And if you are listening to the tape "**What time is it sirs?**"You will notice that one angel was very notable to me. The rest of them just seemed ordinarly, but this angel was a noted angel." (End quote)
13. And so the seventh angel that came down on sunset Mountain was actually the theophany body of William Branham, who was also standing there in his flesh body. We are saying that William Branham, standing in his flesh body, saw William Branham in his theophany body. If this is true then it would have to fit the scriptures. In Rev. 4:4. we read. **"And round about the throne were four and twenty seats, and upon the seats I saw four and twenty Elders sitting, clothed in white raiment, and they had on their heads crowns of gold."**
14. We know that twelve of these Elders were the twelve Old Testament Patriarchs, and twelve were the New Testament Apostles. Therefore, when John the revelator looked and saw twenty-four Elders, he was looking at his own theophany body, as one of the twenty-four. And so we conclude that it was not at all unscriptural for Brother William Branham to see himself in his theophany. Mysterious? Yes indeed! But God promised to send us a prophet to reveal these mysteries. Rev. 10:7 "**But in the days of the voice of the seventh angel, when he shall begin to sound (preach) the mystery of God should be finished, as He hath declared to His servants the prophets."**
15. Let's let the prophet confirm this, QUOTE: GOD'S ONLY PROVIDED WAY OF WORSHIP. PG. 14 And we've got to have everything in three's to make perfection. And there is one body here, then that body there, which is the Celestrial (heavenly) then the glorified body in the resurrection. That makes it complete. It's not a myth, it's not just an idea, it's not just a spirit, it is a man or woman like you are, just exactly,: (End Quote)
16. He said that there is a part of us in heaven now, in that other dimension, in a theophany body. Brother Branham indicated that our body is actually our Guardian Angel. We will quote Matt. 18:10 then give Brother Branham's statement concerning this scripture. Jesus said,**"Take heed that you despise not one of these little ones, for I say unto you that in heaven their angels do always behold the face of my Father which is in heaven."**
17. QUOTE: C.O.D. BOOK, PG.560 " If you will notice in Matt. 18:10 He said their angels do always behold My Father's face, in other words, their angelic bodies that they will go to if they die" (end Quote) We read this in 2nd Corinth. 5:1.**"If our earthly house be dissolved we have one waiting......"**
18. The prophet taught that a part of our supernatural being (theophany) was placed in flesh, but that we are not just altogether here in flesh, a part of us remained in the thophany.
19. QUOTE: C.O.D. BOOK, PG. 340 "Notice now, when man was separated from the theophany and put in flesh, he wasn't just altogether there (in flesh). part of his being was still a theophany....(End Quote)
QUOTE: C.O.D. BOOK, PG. 341 "We are both natural and supernatural". (End Quote)

171. இவரது உபதேசத்தில் ஏழாவது பத்தியில் இருந்துதான் குழப்பமே ஆரம்பமாகிறது. இது முன்பு கூறிய மூன்று தவறான உபதேசங்களை போன்றது அல்ல. இது வித்தியாசமானது. இங்கு இவர் சகோ. பிரன்காம் தனது மாம்ச சரீரத்தில் வெளிப்படுவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தனது தியாபனி சரீரத்தில் தோன்றி

யோவானுக்கு பத்மு தீவில் வெளிப்படுத்தின விசேஷத்தைக் கொடுத்தார் என்கிறார். அடுத்து தனது 8 மற்றும் 9 பத்திகளில் சூரிய அஸ்தமன மலையில் ஏழு தூதர்கள் தோன்றினார்கள். அந்த ஏழு தூதர்களும் ஏழு சபைக்காலத் தூதர்கள். இவர்கள் இடிமுழக்க ரகசியங்களை ஏழாம் சபைக் காலத் தூதனுக்கு அதாவது சகோ. பிரன்காமுக்கு வெளிப்படுத்தத் தங்கள் தியாபனி சரீரத்தில் வந்தார்கள் என்கிறார். ஏழாவது தூதன் சகோ. பிரன்காம் தன் தியாபனி சரீரத்தில் இருந்தார் என்கிறார்.

172. தனது 10,11,12 பத்திகளில் தியாபனி சரீரத்தில் இருப்பதாகக் கூறும் அந்த ஏழாவது தூதனைக் குறித்து சகோ. பிரன்காம் குறிப்பிடுவதைக் கூறுகிறார். இதர தூதர்களைவிட அந்த ஏழாவது தூதன் தனக்கு முக்கியத்துவமானவனாக காணப்பட்டான். இதர தூதர்கள் சாதாரணமாக காணப்பட்டனர். ஆனால் இந்த ஏழாவது தூதன் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தூதனாக இருந்தான் என்கிறார். ஆனால் இங்கு சகோ. பிரன்காம் அந்த ஏழாவது தூதன் தானே என்று எங்கும் கூறவில்லை. ஆனால் சகோ.பிரன்காம் அவ்வாறு கூறுவதாக இவர் கற்பனை செய்து கொள்கிறார். இந்தக் கற்பனையைக் கொடுத்தது பிசாசு.

173. தனது 13 வது பத்தியில் அந்த ஏழாம் தூதன் சகோ. பிரன்காம் எனவும் அவர் தனது மாம்ச சரீரத்தில் இருந்து தனது தியாபனி சரீரத்தை பார்த்தார் என்கிறார். ஆனால் இந்த ஏழு தூதர்களும் ஏழு சபைக்காலத் தூதர்கள்தான் என்பதற்கு இவர் வேதத்தில் இருந்து அல்லது இக்காலத்துக்குரிய செய்தியில் இருந்து எந்தவிதமான ஆதாரங்களும் கொடுக்கவில்லை. அதாவது ஒரே நேரத்தில் சகோ. பிரன்காம். தன் மாம்ச சரீரத்தில் இருந்து தனது தியாபனி சரீரத்தைப் பார்த்தார் என்பதற்கு.

174. இவர் அந்த ஏழு தூதர்களும் ஏழு சபைக்காலத் தூதர்கள், தங்கள் தியாபனி சரீரங்களில் இருந்தார்கள் என்று கூறுகிறார். ஆனால் இது குறித்து ஏழாம் சபைத் தூதன் சகோ. பிரன்காம் என்ன கூறுகிறார்? இடைவெளியில் நிற்றல் என்ற செய்தியில் 82 வது பத்தியில் 5 வது வரியில் அத்தூதர் கூட்டத்தில் வலது பக்கத்தில் இருந்த தூதன் தனது மார்பை பின் தள்ளிக்கொண்டு, அவருடைய சிறகுகள்? மற்றவர்களில் நின்றும் அவர் சற்று விசேஷமானவராக இருந்தார் எனவும் கூறுகிறார். மேலும் அதே பத்தி தொடர் 34வது பக்கத்தில் 12வது வரியில் அங்கே மற்றவர்களில் இருந்ததும் சற்று விசேஷமாக காணப்பட்ட வலது பக்கத்தில் உள்ள தூதனை பாருங்கள். அத்தூதனுடைய முனைப்பான செட்டைகளை (pointed wings) பாருங்கள் என்றும் கூறுகிறார்.

175. இதிலிருந்து அந்த தூதர்கள் தேவ தூதர்களேயன்றி (heavenly Angels with wings) இப்பூமிக்குரிய தூதர்கள் அல்ல என தெரிகிறது. அது ஏழு சபைக்காலத் தூதர்கள் என்றால் பவுல் முதல் சகோ. பிரன்காம் வரை நமது ஏழு காலச் சபைத் தூதர்கள் சிறகுகள் உடைய ஒரு தனி பிறவிகளாக நம் மத்தியில் வாழ்ந்திருக்கவேண்டும். நமது அதிக பிரசங்கிகள் தங்கள் மனம் போன போக்கில் இக்காலத்துக்குரிய செய்திக்கு வியாக்கியானம் கொடுக்கிறார்கள். இது சத்தியத்தை திசை திருப்பும் பிசாசின் கற்பனை. கோவை சகோதரர்களே பிசாசின் கற்பனையில் தான் நீங்களும் மூழ்கி இருக்கிறீர்கள்.

176. அடுத்து இவர் தனது 14வது பத்தியில் இதற்கு ஆதாரமாக யோவான் 24 மூப்பர்களில் ஒருவன். அவன் தனது தியாபனி சரீரத்ததை தன் மாம்ச சரீரத்தில் இருந்து பார்த்தான் என்கிறார். அதாவது வெளி. 4:4 காட்சியை இங்கு குறிப்பிடுகிறார். பின் தனது 15-19 பத்திகளில் நாம் ஒரே நேரத்தில் இரு சரீரங்களில் இருக்கமுடியும் என்ற போதனையில் மக்களைத் திசைத் திருப்பிக் கொண்டுச் செல்கிறார். இப்பொழுது இவர் உபதேசத்தை ஆராய்ந்து பார்ப்போம். நாம் எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். அதாவது காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று வேதவாக்கியங்களையும், இக்காலத்துக்குரிய செய்தியையும் கொண்டு இதர காரியங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். அவ்வாறு ஆராய்ந்து பார்த்ததினால் தான் எபேசு சபையினர் அப்போஸ்தலரல்லாதவர் தங்களை அப்போஸ்தலர் என்று சொல்கிறதைச் சோதித்து அவர்கள் பொய்யர்கள் என்று கண்டறிந்தார்கள். அப்.17:11. வெளி. 2:2 ஆனால் நீங்களோ உங்கள் பாஸ்டர்களையும், வெளிநாட்டினரையும் தலையில் தூக்கிவைத்து ஆடும் கரகாட்டக்காரர்களாக இருக்கிறீர்கள். இது உங்களது ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சியின்மையை, பெலவீனத்தைக் காட்டுகிறது.

177. ஏழாம் சபை தூதனுடைய ஊழியம் என்ன? மல்கி, 4ம் அதி, வெளி 10:6 ல் கூறப்பட்ட இந்தத் தூதன் இரண்டு பெரிய காரியங்களைச் சாதிப்பார். முதலாவது மல்கியா உரைத்தபடி, இவர் பிள்ளைகளின் இருதயத்தைப் பிதாக்களிடத்துக்குத் திருப்புவார். இரண்டாவதாக, வெளி 10 அதி கூறப்பட்டிருக்கும் ஏழு இடி முழக்கங்களின் இரகசியத்தை (அதாவது ஏழு முத்திரைகளின் இரகசியத்தை) அவர் வெளிப்படுத்துவார். தேவனால் அருளப்பட்ட இந்த சத்தியம் பிள்ளைகளுடைய இருதயத்தைப் பெந்தெகொஸ்தே பிதாக்களிடத்துக்குத் திருப்பும் (ஏழு சபைகால வியாக்கியானம். பக்கம் 402, கடைசி பத்தி) அதாவது திறக்கப்பட்ட முத்திரைகளின் இரகசியங்கள் வெளிப்பட்டதின் மூலம் ஏழாம் தூதன் எபேசு சபை காலம் முதல் இந்த லவோதிகேயா சபை காலம் வரை வெளிப்படாத தேவ இரகசியங்கள் அனைத்தையும், தளர்ந்த முனைகளையும் ஒருங்கிணைத்து சபைக்கு வெளிப்படுத்துகிறார்.

178. யோவானுக்கு வெளி. 19:8 & 22:9ல் கூறப்பட்ட தூதன் வெளி. 1 அதி முதல் வெளி. 22 அதிகாரங்கள் வரை உள்ள அனைத்துச் சம்பவங்களையும் காட்சியாகத் தரிசனத்தில் வெளிப்படுத்திக் காட்டினார். ஆனால் அவைகளின் அர்த்தத்தை அவன் முற்றிலுமாக புரிந்துகொள்ளவில்லை. ஏழாம் சபைத் தூதனுக்கு வெளி.1 அதி முதல் வெளி 22 அதி வரை கூறப்பட்டுள்ள அனைத்து சம்பவங்களின் பொருள் என்ன என்பது வெளிப்படுத்தப்படவில்லை. அவர் அறியாத சம்பவங்கள் அதிகம் உண்டு. அவர் சபை பூரணப்பட தேவையான காரியங்களின் வெளிப்பாட்டைப் பெற்று அதை சபைக்கு வெளிப்படுத்தினார். அவ்வளவுதான். இன்னும் இதை விளக்கமாக கூறப்போனால் ஏழாம் சபைத் தூதன் சகோ. பிரன்காம், லவோதிக்கேயா சபையிலுள்ள மணவாட்டியை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்த ஒரு செய்தியோடு வந்தத் தூதன். இந்தச்

செய்தி ஏழு முத்திரைகளிலிருந்து வந்தது. இந்தச் சபையில் கிறிஸ்துவின் சரீரம் பூரணப்படுகிறது. ஆதலால் கிறிஸ்துவைப் பற்றின வெளிப்பாடும் பூரணப்படுகிறது. இந்தப் பணியைத்தான் சகோ. பிரன்காம் செய்தார். ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் சபைக்கும், இஸ்ரவேலருக்கும் மற்றும் பொதுவான சம்பவங்களையும் கொண்டதாக உள்ளது. சபை பூரணப்படுவதற்கான காரியங்களை மட்டுமே தேவன் சபைக்கு வெளிப்படுத்தினார். அதாவது சபை பூரணப்படுவதற்கான சம்பவங்களை அந்த சபைத் தூதனுக்கு, சகோ. பிரன்காமுக்கு வெளிப்படுத்தி, சபையை பூரணப்படுத்துகிறார். இஸ்ரவேலருக்கடுத்த சம்பவங்கள் சகோ. பிரன்காமுக்கு முற்றிலுமாக வெளிப்படுத்தப்படவில்லை. ஏனென்றால் அதற்கு மோசேயும் எலியாவும் வருகிறார்கள்.

179. யோவான் கடந்த, நிகழ், இனி சம்பவிக்கவேண்டிய அனைத்து காரியங்களயையும் தரிசனத்தில் கண்டான். ஆனால் அதன் பொருளை அறிந்துகொள்ளவில்லை. அவன் கண்ட அனைத்து காரியங்களின் பொருள் ஏழாம் சபைத் தூதனுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. ஏனென்றால் அவைகள் அனைத்தும் அவனுடைய ஊழியத்துக்கு தேவைப்படவில்லை.

180. இந்த ஏழு தூதர்கள் யார்? சகோ. வூட் இந்த ஏழு தூதர்களும் ஏழுசபைகாலத் தூதர்கள் என்கிறார். அதாவது முதலாம் தூதன் பவுல், இரண்டாம் தூதன் இரினேயஸ், மூன்றாம் தூதன் மார்ட்டின், நான்காம் தூதன் கொலம்பா, ஐந்தாம் தூதன் லூதர், ஆறாம் தூதன் வெஸ்லி, ஏழாம் தூதன் பிரன்காம் என்றும் இவர்கள் தங்கள் தங்கள் தியாபனி சரீரத்தில் சகோ. பிரன்காமுக்கு பிரத்தியட்சமானார்கள் என்று கூறுகிறார். இங்கு சகோ. பிரன்காம் மாம்ச சரீரத்தில் இருந்து தன் தியாபனி சரீரத்தைக் கண்டார் என்கிறார். ஆனால் நம்முடைய பிரன்காம் கிறிஸ்து ஊழியக்காரர்கள் ஒருவருக்கொருவர் அந்தத் தூதர்களில் முதலானவன் நான்தான், நீதான் இஜ்ண்டாவது; அது அப்படியல்ல நான் முதல் நீ கடைசி என ஒருவருக்கொருவர் முட்டி மோதினார்கள், கடைசியில் அனைவரும் அவமாய்போனார்கள்.

181. பாருங்கள், சபைக்காலத் தூதர்கள் யாவரும் இப்பூமிக்குரிய தூதர்கள், செய்தியாளர்கள். இந்த ஏழு தூதர்களும் ஏழு தேவதூதர்கள் என ஏழாம் சபைத்தூதன் கூறுகிறார். செய்தி. ஷாலோம், பக்கம் 46 பத்தி 158 அவர் ஏழு சபைக்காலங்களை நமக்கு காண்பித்த விதமாகவே-என்ன வரப்போகிறது என்று, அவர் நமக்கு காண்பித்தவிதமாகவே, அவர் வெளிச்சத்தை மேலே நிறுத்தி உலகிற்கு அதை வெளிப்படுத்தினார். ஏழு சபைக்காலங்களில் இருந்த ஏழு தூதர்கள் யார் என்றே வெளிப்படுத்த அவர் அப்பொழுது ஏழு தூதர்களை அனுப்பினார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தேவ தூதன் தோன்றி லூதர், வெஸ்லி, பெந்தெகொஸ்தேயினர் விட்டுச் சென்ற தளர்ந்த முனைகளை வெளிப்படுத்திக் கொடுத்தனர். அது மகத்தான ஷாலோம் யேகோவா, யாபே (Jvhu) ன் முன் அடையாளமாகவும் நிழலாகவும் அமைந்தது. When He sent the seven Angels to reveal the seven messengers that had been down through there, and show the loose ends, each Angel comming each day and revealing the loose end that Luther left, and wesley left, and pentecost left, is all represented in there. மேலும் இவர் யார் என்று சொல்லுகிறீர்கள் என்ற செய்தியில் பத்தி 156ல் (27.12.1964) ஒரு கூட்டம் தேவத் தூதர்கள் வானத்திலிருந்து இறங்கி வந்து, பூமி முழுவதையும் குலுக்கி அங்கு நிற்பதைக் கண்டேன். செய்தித்தாள்கள் அதைக் குறித்து எழுதின. இது நடப்பதற்கு அநேக மாதங்களுக்கு முன்பே அது முன்னுரைக்கப்பட்டது என்கிறார். அந்தத் தூதர்களின் இறக்கைகளையும் அவை எப்படி மூடப்பட்டிருக்கின்றன என்பதையும் பாருங்கள் ( ஏற்ற காலத்தில் ஆவிக்குரிய ஆகாரம், பத்தி 84 நாள் 18.7.1965)

182. இங்கு சகோ. பிரன்காம் அந்தத் தூதர்கள் ஏழு தேவதூதர்கள் என்று கூறுகிறார். ஒரு காலத்தில் மாம்ச சரீரத்தில் இருந்த இப்பூமிக்குரிய தூதர்கள் நித்திரையடைந்த பின், தங்கள் தியாபனி சரீரத்தில் தேவதூதர்கள் ஆகிவிட முடியாது. அவர்களுக்கு செட்டைகள் முளைத்திட முடியாது. மாம்ச சரீரத்தில் இருந்த தூதர்கள் தங்களுக்கு தங்கள் ஊழியகாலத்தில் வெளிப்படுத்தப்படாத காரியங்களை, தங்கள் நித்திரைக்குப்பின் மீண்டும் தியாபனி சரீரத்தில் வந்து தாங்கள் வெளிப்படுத்தாத காரியங்களை மீண்டும் மற்றொரு தூதனுக்கு வந்து வெளிப்படுத்துவது சாத்தியமல்ல. ஏனென்றால் இன்னும் உயிர்தெழுதல் நடைபெறவில்லை. மேலும் சகோ.பிரன்காம் மாம்ச சரீரத்தில் இருந்து கொண்டு தனது தியாபனி சரீரத்தை பார்த்தார் என்பது சரியல்ல. ஏனென்றால் ஒருவர் ஒரே நேரத்தில் இரு சரீரத்தில் இருக்க முடியாது. கே.ப. 381ல் பத்தி 58 ஐ தியானியுங்கள். ஒரே நேரத்தில் ஒருவர் இரு சரீரத்தில் இருக்க முடியாது. ஆனால் ஒரே சமயத்தில் இரு சுபாவங்களில் இருக்கமுடியும்.

183. தேவன் ஒரு ஆவி. யோ. 4:24. (God is a Spirit) இது நித்திய ஆவி. எபி. 9:14. நித்தியத்திற்கு தொடக்கமும் முடிவும் கிடையாது. எதுவும் சிருஷ்டிக்கப்படுமுன், எதுவும் உருவாக்கப்படுமுன், எதுவும் தோன்றுமுன் இந்த நித்தியஆவி, தேவன் என்று அறியப்படவில்லை. தேவன் என்பதற்கு ஆராதனைக்குரியவர் என்று பொருள். இந்த நித்தியஆவியை தேவனாக தொழுதுகொள்ள, அவரை ஆராதிக்க எந்த விதமான சிருஷ்டியும் இல்லை. அவருக்கென்று எந்தவிதமான சாயலும் ரூபமும் கிடையாது. ஆதலால் இந்த நித்தியஆவி, தான் தேவன் என்று அறியப்படும் பொருட்டு எதுவும் சிருஷ்டிக்கப்படும் முன்பு, தான் சிருஷ்டிக்கப் போகும் தனது சிருஷ்டிகள் தன்னை தேவனாக தொழுதுகொள்ள, ஆராதிக்க தனக்கென்று ஒரு ஆவிக்குரிய சரீரத்தை உடையவரானார். அதாவது நித்தியஆவி தன்னைத்தானே ஒரு ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டித்து தன்னில்தானே ஜீவன் உள்ளவரானார். இந்த ஆவிக்குரிய சரீரம் வார்த்தை ஆகும். அந்த வேளை ஆதி என்று அழைக்கப்பட்டது. ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. யோ.1:1. வார்த்தை ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. யோ. 6:63.

184. நித்தியத்தில் தேவன் மாத்திரமே இருந்தார். இவர் நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதி. 1 தீமோ. 6:15. இவரைத் தவிர வேறொருவரும் இல்லை. ஏசா.43:10, 45:18, 46:9. இவர் ஆதி முதல் அந்தம் வரை தான் நடப்பிக்கப் போகிற தம்முடைய செய்கைகள் அனைத்தையும் தம்முடைய சிந்தையில் எண்ணங்களாகக்

கொண்டிருந்தார்.அவர் தம்முடைய சிந்தையில் இருந்த எண்ணங்கள் அனைத்தையும் வெளிப்படுத்திப் பேசினபோது அந்த எண்ணங்கள் வார்த்தை ஆனது.

185. நித்தியஆவி தனக்கென்று ஒரு ஆவிக்குரிய சரீரத்ததை உடையவராகி தன்னில்தானே ஜீவன் உள்ளவரானதால் யேகோவா என்று அழைக்கப்பட்டார். யேகோவா என்பதற்கு தன்னில்தானே ஜீவனுள்ளவர் என்று பொருள். யோகோவா என்ற வார்த்தை தமிழில் கர்த்தர் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

186. மேலும் இந்த ஆவிக்குரிய சரீரத்தில் தேவன் சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமாகி தேவகுமாரன் என்று அழைக்கப்பட்டார். நித்தியஆவி, தேவகுமாரனில் தொழுகைக்குரியவரானார், ஆராதனைக்குரியவரானார். எபி.1:6. தேவத்துவத்தில் பிதா (நித்தியஆவி) குமாரன் (வார்த்தை) தன்மைகள் வெளிப்பட்டது. இயேசு: நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறி போகிறேன் என்றார். யோ. 20:17. அதாவது அவர் தம்முடைய மாம்ச சரீரத்தில் இருந்து தன் ஆவிக்குரிய சரீரத்துக்கு செல்வதை இவ்வாறாக கூறிப்பிடுகிறார். ஆதலால் தான் குமாரனைக் குறித்து யோவான் இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் என்று அறிக்கையிட்டான். 1. யோ. 5:20.

187. வார்த்தை நம்மைப்போன்ற மானிட சாயலையும், ரூபத்தையும் உடைய ஆவிக்குரிய சரீரம் யாத். 33:23. இந்தச் சரீரத்துக்கு மாம்சமும், இரத்தமும் கிடையாது. ஏனென்றால் மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை 1 கொரி. 15:50. இந்த ஆவிக்குரிய சரீரத்தைத் தான் தியாபனி சரீரம் **(Theophany body)** என்று அழைக்கிறோம். காலம் நிறைவேறினபோது (கலா. 4:5) வார்த்தை தன் ஆவிக்குரிய, தியாபனி சரீரத்தில் இருந்து மாம்ச சரீரத்தில் (யோ.1:16). ஸ்திரீயினிடத்தில் பிறந்து (கலா. 4:5) நம் மத்தியில் வாசம் செய்தார் (யோ.1:10, 1தீமோ. 3:16) தேவன் தன் ஆவிக்குரிய சரீரத்தில் இருந்து மாம்ச சரீரத்துக்கு வந்து நம்முடைய மீறுதல்களுக்காகவும், அக்கிரமங்களுக்காகவும் பாடுபட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்தெழுந்தார். 1 கொரி. 15:3 & 4 மறுபடியும் தன் ஆவிக்குரிய சரீரத்துக்குச் சென்றார். லூக். 24:51.

188. இவருடைய மணவாட்டி யாதொன்றும் சிருஷ்டிக்கப்படுமுன்பே, உருவாக்கப்பட்டு படைக்கப்பட்டு முன்பே அவருக்குள், அவரோடு, அவருடைய சிந்தையில் இருந்தாள். பின் அவருடன் வார்த்தையானாள். காலம் நிறைவேறினபோது ஒரு ஸ்திரீயின் வயிற்றில் உருவாகிப் பிறந்தாள். ஒரு நபர் தேவனுடைய சிந்தையில் எண்ணமாக இருந்தாதொளிய வார்த்தை ஆக முடியாது. மணவாட்டி உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொள்ளப்பட்டவள் எபே. 1:4. இவள் தேவனால் முன்னறிந்து முன்குறிக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்டவள். ரோ. 8:29 & 30.

189. தேவன் தம்முடைய சாயலாகவும். ரூபத்தின் படியும் மனுஷனைச் சிருஷ்டித்தார். ஆதி. 1:27. அதாவது வார்த்தையின், தியாபனி சரீரத்தின், ஆவிக்குரிய சரீரத்தின் சாயலாகவும், ரூபத்தின்படியேயும் மனுஷனைச் சிருஷ்டித்தார். இந்த தேவனுடைய சரீரம் நமது ஜென்மசரீரத்துக்கு ஒப்பாகவே இருந்தது. ஏனென்றால் மோசே, நமது சாயலுக்கு ஒத்த அவரது பின் பாகத்தைக் கண்டான். யாத்.33:1-28. ஆக தேவனுடைய ஆவிக்குரிய சரீரம் நமது சரீர அமைப்புக்கு ஒத்ததாகவே இருந்தது. ஏனென்றால் அவரது சாயலின் படியேயும் ரூபத்தின் படியேயும் நாம் சிருஷ்டிக்கப்பட்டோம். பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். எபி.2: 14.

190. தேவன் மனுஷனை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். ஆதி. 1:27. எவ்வாறு தேவனுடைய ஆவிக்குரிய சரீரத்துக்குள் அவருடைய மணவாட்டி அவருடன் இருந்தாளோ, அதே போன்று மனுஷனுடைய ஆவிக்குரிய சரீரத்துக்குள் அவனுடன் அவனுக்குள்ளே அவனுடைய மணவாட்டி இருந்தாள். ஆதாமுடன் அவனுடைய மணவாட்டி அவனுக்குள் ஒரே ஆவிக்குரிய சரீரத்தில் இருந்தாள். ஆணும் பெண்ணுமாக சேர்ந்தது தான் மனுஷன். இதிலிருந்து மனுஷன் தன்னில்தானே நிறைவு பெற்றவன் அல்ல. அவன் நிறைவு பெற ஒரு பெண் தேவை என நாம் காண்கிறோம். ஆதி. 2:18 இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும், தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் ஆதி. 2:24.

191. இதன் பின், தேவன் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊத அவன் ஜீவாத்துமாவானான். ஆதி.2:7. ஆவிக்குரிய சரீரத்தில் அதாவது தியாபனி சரீரத்தில் இருந்த மனுஷன் மாம்ச சரீரத்தில் உருவாக்கப்பட்டான். அதாவது மனுஷன் தேவ சாயலாக, ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டிக்கப்பட்டு, பின் மிருகசாயலாக மாம்ச சரீரத்தில் உருவாக்கப்பட்டான். இப்பொழுது மனுஷனுடைய ஆவிக்குரிய சரீரத்தில் இருந்த ஆண் பெண் பாகங்களில் பெண்பாகம் இன்னும் ஆவிக்குரிய சரீரத்திலே அவனுக்குள் இருந்தது.

192. சிலர் தீர்க்கதரிசியின் இந்த போதனையை தவறாக புரிந்து கொண்டு, நம்மில் ஒரு பகுதி ஆவிக்குரிய சரீரத்திலும், மற்றொரு பகுதி மாம்ச சரீரத்திலும் ஒரே நேரத்தில் இருக்கிறது என ஒரு தவறான போதனைக் கொண்டு வந்து, இக்காலத்துக்குரியச் செய்தியை தாறுமாறாக்குகிறார்கள். (கே.ப.74, பத்திகள் 827-830).

193. தற்போது நாம் மாமிச சரீரத்தில் தான் இருக்கிறோம். ஆனால் இன்னொரு சரீரம் நமக்காக காத்துக் கொண்டிருக்கிறது. இது தான் உண்மை. 2கொரி.5:1. ஆவிக்குரிய சரீரம் நமக்காக காத்துக் கொண்டிருக்கிறது. நாம் இந்த சரீரத்தை விட்டு பிரியும்போதுதான் அந்த சரீரத்தை பெற்றுக் கொள்ளமுடியும். இந்த சரீரத்தில் இருந்து கொண்டே அந்த சரீரத்திலும் இருக்க முடியாது. அதாவது மாம்ச சரீரத்திலும் ஆவிக்குரிய சரீரத்திலும்

நாம் ஒரே நேரத்தில் இருக்க முடியாது. ஒரே சமயத்தில் நாம் இரு வித்தியாசமான சரீரத்தில் இருக்க முடியாது. இது தான் சத்தியம்.

194. ஆதலால் பிரியமானவர்களே, இக்காலத்திற்குரிய தீர்க்கதரிசி தன் மாம்ச சரீரத்தில் இருந்து கொண்டு சூரிய அஸ்தமனம் மலை சிகரத்தில் தன் ஆவிக்குரிய சரீரத்தைத் (தியாபினி சரீரம்) கண்டார் என்ற உபதேசம் தவறானது. இது குறித்து நீங்கள் தெளிவுபெற கே.ப.381 ல் பத்தி 58யை தியானியுங்கள். இங்கு ஆங்கிலத்தில் இவ்வாறாக உள்ளது. You can't be in two bodies at one time, but there can be two natures in you at one time. இதைத் தமிழில் மொழி பெயர்த்த WBGNS இவ்வாறாக மொழி பெயர்த்துள்ளார்கள். ஆனால் நீங்கள் ஒரே சமயத்தில் இரண்டு சரீரங்களில் இருக்க முடியாது என முடித்து விட்டார்கள். அதாவது இது ஒரு அரை குறை மொழி பெயர்ப்பு. But there can be two natures in you at one time என்பது மொழி பெயர்த்து எழுதப்படவில்லை. அதாவது நீங்கள் ஒரே சமயத்தில் இரண்டு சுபாவத்ததைக் கொண்டவர்களாக இருக்க முடியும் என்பதை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்க மறந்து விட்டார்கள். ஏனென்றால் செய்தியை கூட்டுவதும். குறைப்பதும், தவறாக மொழி பெயர்ப்பதும் தானே இவர்களது பிரதானப் பணி. இதற்காகத்தானே WBGNS செயல்படுகிறது. சாத்தான் தன்னுடைய பணிகளைத் திறம்பட இவர்களைக் கொண்டு செய்து வருகிறான்.

195. இப்பொழுது பாருங்கள், ஆதாம் ஆணும் பெண்ணுமாக ஆவிக்குரிய சரீரத்தில் அதாவது தியாபனி சரீரத்தில் இருந்தான். ஆவிக்குரிய சரீரத்தில் இருந்த ஆண்பாகத்தை தேவன் மாம்ச சரீரத்தில் உருவாக்கினார். அதே வேளையில் அவனுக்குள் இருந்த பெண் பாகம் இன்னும் மாம்ச சரீரத்தில் வெளிப்படாமல் தியாபனி சரீரத்திலே இருந்தது. இதை தான் தீர்க்கதரிசி ஆதாமின் ஒரு பாகம் ஆவிக்குரிய சரீரத்திலும் மற்றொரு பாகம் மாம்ச சரீரத்திலும் இருந்ததாகக் கூறுகிறார். ஆனால் இதைத் தவறாகப்புரிந்து, நம்மில் ஒரு பாகம் ஆவிக்குரிய சரீரத்திலும் மற்றொரு பாகம் மாம்ச சரீரத்திலும் இருக்கிறது என்பது ஒரு தவறான உபதேசம். இது சத்தியத்தைத் தாறுமாறாக்குவதாகும். ஒருவேளை இந்த உபதேசத்தைத் தீர்க்கதரிசியின் ஊழியத்தை தங்கள் கண்களால் கண்டவர்கள் கொண்டு வந்தால் கூட நாம் அதை நம்பி மோசம் போகக்கூடாது. நாம் எல்லாவற்றையும் ஆராய்ந்து அறிய வேண்டியவர்களாயிருக்கிறோம். தேவன் நாம் வஞ்சிக்கப்படக் கூடாதபடி தெளிந்த புத்தியையும், ஞானத்தையும், பகுத்தறியும் தன்மையும் கொடுத்திருக்கிறார். அல்லேலூயா! ஏழுசபைக் காலங்களிலும் மிக்க கொடிதான வஞ்சிப்பின் காலம் லவோதிக்கேயா.

196. இங்கு இவரது தவறான உபதேசங்களை உங்கள் பார்வைக்குத் தருகிறேன். இதிலிருந்து இவரது ஊழியத்தை நீங்கள் அறிந்து கொள்ளலாம். சி.டபுள்யூ. வுட் என்பவர் பிப்ரவரி மாதம் 28ம் தேதி, 1963வது ஆண்டு அமெரிக்காவில் அரிசோணா மாநிலத்தில் டக்சன் என்ற இடத்திலிருந்து வடக்கு நாற்பது மைல் தூரத்தில் உள்ள கொரோனடோ காட்டில் சூரிய அஸ்தமனம் மலையின் சிகரத்தில் கிறிஸ்து பூமிக்கு வந்து (வெளி.10:1) சகோ.பிரன்காம் சரீரத்தில் இறங்கினார் என்று போதிக்கிறார். இந்த சம்பவம் குறித்து நாம் செய்தியில் காண்பது என்ன? 1962ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் தேதி காலை 10 மணியளவில் இந்தியானாவில் உள்ள தனது அறையில் சகோ. பிரன்காம் கண்ட தரிசனத்தின்படி 1963ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி சூரிய அஸ்தமனம் மலை மீது ஏழு தேவ தூதர்கள் சகோ. பிரன்காம் முன் தோன்றி, பின் ஒரு வினோதமான மேகம் 30 மைல் உயரம் 25/27 மைல் விட்டத்தில் கூர்நுனிக்கோபுரம் வடிவில் உண்டாகக் காரணமாயிருந்தனர். இந்த தூதர்கள் ஏழு முத்திரைகளின் இரகசியத்தை சகோ. பிரன்காமுக்கு வெளிப்படுத்திக்காட்ட, அவர் அதை பிரசங்கித்தார். இந்த ஏழு தூதர்களின் தோற்றத்தை விஞ்ஞானம் என்ற பத்திரிக்கை தன் மேல் அட்டையில் 1963ம் ஆண்டு ஏப்ரல் மாதம்19ம் தேதியும், லைப் என்ற பத்திரிக்கை 1963ம் ஆண்டு மே மாதம் 17ம் தேதியும் வெளியிட்டன.

197. 1963ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி "ஏழு தூதர்கள் கூட்டம்" ஏழாம் சபைத் தூதனைச் சந்தித்த நாளில் கர்த்தர் பூமிக்கு வந்துவிட்டார். அதுதான் ஏழாம் முத்திரையின் அரை மணி நேர இரகசியம். ஆக ஏழாம் முத்திரையின் இரகசியம் நிறைவேறிவிட்டது. அந்த தூதர்களின் கூட்டம் ஏறக்குறைய அரைமணி நேரம் காணப்பட்டது. அதுவே அரைமணி நேரம் அமைதல் என்று உபதேசிக்கிற கூட்டம் (கோவை ராஜா) நம் மத்தியில் உண்டு. ஆதலால் இங்கு இதுகுறித்து தியானிக்கவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

198. ஏழாம் சபைத் தூதன் 30.12.1962ல் ஐயன்மீர், இதுவா சமயம் என்ற செய்தியைப் பிரசங்கிக்கும் போது, எட்டு நாட்களுக்கு முன் ஏழு தூதர்கள் கூட்டம் குறித்து ஒரு தரிசனம் கண்டதாகவும் (இதை அந்த செய்தியில் 39-43 பக்கங்கள் வரை வாசிக்கலாம்) . பின் இந்த தரிசனம் 28.2.1963ல் சூரிய அஸ்தமனம் சிகரத்தில் நிறைவேறியதாகவும் கூறுகிறார். (மலையின் மேல் உள்ள கவர்ச்சி என்ன? பத்தி 135-152 நாள் 25.7.1965).

199. இந்த ஏழு தூதர்களின் கூட்டத்தின் நோக்கம் என்ன என்பதை வெளி.10:3 & 4 வசனங்களில் காணலாம்.
அ. பலமுள்ள வேறொரு தூதன் சிங்கம் கெர்சிக்கிறது போல மகா சத்தமாய் ஆர்ப்பரித்தான்.
ஆ. அவன் ஆர்ப்பரித்தபோது ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின.
இ. இந்த ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின போது யோவான் எழுதவேண்டும் என்று இருந்தான்.
ஈ. அப்பொழுது ஏழு இடி முழக்கங்கள் சொன்னவைகளை எழுதாமல் முத்திரை போடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.
அந்த ஏழு இடிகளும் தங்கள் சத்தத்தை முழங்கின. அந்த சத்தத்தின் முழக்கம் யாருடையது? மகிமையுள்ள தேவன் முழங்குகிறார். சங். 29:3. பலத்த இடி முழக்கங்கள் தேவனுடைய சத்தம். (ஏழு முத்திரை, பழைய பதிப்பு பக்கம் 142). தேவனுடைய சத்தம் இடி முழக்கம் போன்றதாகும். (ஏ.மு. பக்கம் 143)

200. இப்பொழுது இந்த ஏழு இடி முழக்கங்களுக்கும் அந்த ஏழு தூதர்களுக்கும் என்ன சம்பந்தம்? ஏழு இடி முழக்கங்களை அந்த ஏழு தூதர்களும் தங்கள் கைகளில் பிடித்திருந்தார்கள். இவர்கள் அந்த ஏழு இடி

முழக்கங்கள் சொன்னதை வெளிப்படுத்தி தருவார்கள். ( எ.மு. பக்கம் 19) பாருங்கள், 28.2.1963 அன்று சூரிய அஸ்தமனம் சிகரத்தில் தீர்க்கதரிசி கண்ட ஏழு தூதர்கள், அந்த ஏழு இடி முழக்கங்கள் முழங்கின இரகசியத்தை உடையவர்களாய் இருந்து அதை தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்திக் கொடுத்தார்கள்.அது கர்த்தருடைய இரகசிய வருகை அல்ல. மேலும் பாருங்கள், ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட புத்தகம் வெளி. 10ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள ஏழு இடிமுழக்கங்கள் முழங்கும் சமயத்தில் வெளிப்படும். (எ.மு. பக்கம் 75) கூர் நுனி கோபுர அமைப்பில் வந்த தூதர்கள் அந்த கூர் நுனி கோபுரத்திற்குள் என்னை ஏற்றுக் கொண்டனர். தேவ இரகசியங்களை அவர்கள் மாத்திரமே அறிந்திருந்தனர். அந்த கூர் நுனி கோபுரத்திற்குள் அடங்கியிருந்து ஏழு முத்திரைகளின் இரகசியங்களை வெளிப்படுத்த வந்த தூதர்கள் தாம் அவர்கள். (எ.மு.பக்கம் 518)

201. எனக்குப் பிரியமான சகோதரர்களே நீங்கள் இதைக் காண கர்த்தர் உங்கள் கண்களுக்கு கலிங்கம் போடுவாராக. ஆக உங்கள் ஊழியன் கோவை சகோ. கே.ராஜாவும் இந்த ஏழு தூதர்களின் கூட்டம், ஏழாவது முத்திரையின் அரைமணி நேர இரகசியம், அது கர்த்தருடைய வருகை என்று உபதேசித்து உங்களை குழப்பத்திற்குள்ளாக்கிய ஒரு மனிதனே. இவனுடைய ஊழிய நாட்களும் முடிந்து விட்டது.

202. இதோடு மட்டுமல்ல, சகோ. வூட் ஏழாம் தூதனை வார்த்தையைப் பரிபூரணமாக் கொண்ட தீர்க்கதரிசி என்கிறார். இவரது போதனைகள் சாத்தானுடைய கொடிதான வஞ்சகமாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து ஒருவரே வார்த்தையைப் பரிபூரணமாகக் கொண்ட தீர்க்கதரிசி. இவர் சகோ. பிரன்காம், இயேசு கிறிஸ்து என்ற உபதேசத்தை இவர் மறைமுகமாக பறைசாற்றுகிறார். இன்று அநேக கள்ள, கடமுள்ள வேலையாட்கள் இதைத்தானே செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

203. இவரது உபதேசம் மனிதன் சந்திரனில் காலடி வைத்த 20.07.1969 அன்று சர்வ வல்லமையுள்ள தேவன் பூமிக்கு வந்து ஆர்.பி. லாரியின் சரீரத்தில் இறங்கினர் என்ற உபதேசத்துக்கு இணையான ஒரு மாறுபாடான உபதேசம். இவர் தன்னை 1967ல் இருந்து செய்தியில் இருப்பதாகக் கூறினாலும், இவர் சகோ. பிரன்காமுக்கு மிக்க நெருக்கமானவராக இருந்தாலும் ஒரு கள்ளப்போதகரே.

204. பாருங்கள், சகோ. பிரன்காம் தன்னுடைய தியாபனி சரீரத்திலிருந்து, கிறிஸ்துவின் தூதனாக இருந்து யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷ சம்பவங்களை காட்டி இருக்க முடியாது. ஏனெனில் நாம் தியாபனி சரீரத்திற்குள் செல்லாமல், நேராக மாம்ச சரீரத்திற்கு வந்து விட்டோம். நாம் மாம்ச சரீரத்திலிருந்துதான் தியாபனி சரீரத்திற்குள் செல்ல இருக்கிறோம். ஆதலால் சகோ. பிரன்காம் மாம்ச சரீரத்திற்கு வருமுன் தியாபனி சரீரத்தில் இருந்திருக்க முடியாது. அவர் மட்டும் தேதவனுடைய பிரமாணத்திற்கு விதிவிலக்குக்குரியவர் அல்ல. பாருங்கள் ஜென்ம சரீரம் முந்தினது. ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. ஜென்ம சரீரம் விதைக்கப்பட்டு ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். 1கொரி 15:44&46. சகோ. பிரன்காம் பாகத்தில் திஸ்பியனாகிய எலியாவை வைத்துப் பாருங்கள். அது முற்றிலும் பொருந்தும். ஏனென்றால் அவன் தியாபினி சரீரத்தில்தான் யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் கொடுக்கப்படும் போது இருந்தான். எலியா தியாபினி சரீரத்திலிருந்து யோவானுக்கு வெளிப்படுத்தினான் எனக் கூறலாம். ஆனால் அந்நாட்களில் பிரன்காம் மாம்ச சரீரத்திற்குள் இல்லை. அவர் தேவனுடைய சிந்தனையில் இருந்தார். அவ்வளவுதான்.அந்நாட்களில் சகோ. பிரன்காம் மாம்ச சரீரத்திலும் இல்லை. தியாபனி சரீரத்திலும் இல்லை. மாறாக தேவனுடைய சிந்தையில் இருந்தார். அதுவே உண்மை.

205. இதுகுறித்து நீங்கள் யார் இந்த மெல்கிசேதேக் செய்தியில் பத்தி 68 முதல் 71 வரை தியானியுங்கள். இதை உங்கள் சௌகரியத்திற்காக ஆங்கிலத்திலும், தமிழிலும் தருகிறேன்.

a. Now, the different between Him and you as a son... See, He was at the beginning the Word, an En morphe body. He came in and lived in that in the Person of Melchisedec. Then later ... We never heard no more of Melchisedec, because He became Jesus Christ. Melchisedec was the Priest, but He became Jesus Christ. Now, you by passed that, because in that form He knowed all things. And you have never been able to know that yet. **You come like Adam, like me**. You became from the attribute to the flesh to be tempted. But when this life is finished here . . . "**If this earthly tabernacle be dissolved, we have one already waiting. "That's where we go; that is the Word. Then we can look back and see what we done. Now we don't understand it. We have never become the Word; we've just become the flesh-man, not the Word. But . .**

.b. And look clearly, makes it clear you will never be the Word unless you was a thought at the beginning. That proves who is THIS MELCHISEDEC the predestination of God, See? You can't be the Word 'less you're a thought. You had to be in the thinking first. But you see, in order to stand temptation you had to bypass the theophany; you had to come down here in flesh to be tempted by sin. And then if you sin . . . "All the Father hath given Me will come to Me, and I'll raise him up at the last day." See, you had to the first. And then you see, He come right down the regular line, from attribute to ...

c. Before the foundation fo the world his Name's put on the Lamb's Book of Life. Then from that He become the Word, the theophany, that could appear, disappear; and then He become flesh and returned back again, resurrected that same body in a glorified condition. But you bypassed the theophany and become flesh-man to be tempted by sin. And then "If this earthly tabernacle is dissolved, we have one already waiting." We have not yet the bodies. But look, when this body receives the Spirit of God, the Immortal Life inside of you, it throws this body in subjection to God. Hallelujah!

அ. இப்பொழுது, அவருக்கும் ஒரு குமாரனாக இருக்கும் உனக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனி. அவர் ஆதியிலே ஆவிக்குரிய சரீரமாகிய வார்த்தையாக இருந்தார். அவர் மெல்கிசேதேக்கு என்னும் சரீரத்திற்குள் வந்து வாசம் செய்தார். அதற்குப் பிறகு மெல்கிசேதேக் குறித்து நாம் ஒன்றும் கேள்விப்படவில்லை. ஏனென்றால் அவர் இயேசு கிறிஸ்துவானார். மெல்கிசேதேக் ஆசாரியனாக இருந்தார். ஆனால் அவர் இயேசு கிறிஸ்துவாக வந்தார். நீ அந்தச் சரீர வழியாக வராமல் வேறு வழியாக வந்திருக்கிறாய். ஏனென்றால் அந்தச்

சரீரத்தில் அவர் எல்லாவற்றையும் அறிந்திருந்தார். அவைகளை நீ இன்னும் அறிந்துக் கொள்ள முடியாமல் இருக்கிறாய். நீ ஆதாமைப் போலவும், என்னைப் போலவும் வந்திருக்கிறாய். நீ சோதிக்கப்படுவதற்காக அவருடைய சிந்தையிலிருந்து நேரடியாக மாம்சமாக வந்திருக்கிறாய். இங்கே இந்த வாழ்க்கை முடிந்தவுடன்... இந்தப் பூமிக்குரிய கூடாரம் அழிந்துப் போனாலும் நமக்கு ஒரு கூடாரம் காத்துக் கொண்டிருக்கிறது. அங்கே தான் நாம் போகிறோம். அது தான் வார்த்தை, அப்பொழுது நாம் திரும்பிப் பார்த்து நாம் செய்ததைப் புரிந்துக் கொள்ளுவோம். நாம் இப்பொழுது அவைகளை புரிந்துக்கொள்வதில்லை. நாம் இன்னும் வார்த்தையாக மாறவில்லை. மாம்ச மனிதனாக இருக்கிறோம். வார்த்தையாக அல்ல.

ஆ. ஆதியிலே நீ தேவனுடைய சிந்தையில் எண்ணமாக இருந்திருந்தாலொழிய வார்த்தையாக முடியாது என்பதை தெளிவாக அறிந்துக் கொள். இதுதான் தேவனுடைய முன்குறித்தலை நிரூபிக்கிறது. நீ தேவனுடைய சிந்தையில் இல்லாதிருந்தால் வார்த்தையாக இருக்க முடியாது. முதலிலே நீ சிந்தையில் இருந்திருக்க வேண்டும். நீ சோதனையை எதிர்த்து நிற்க ஆவிக்குரிய சரீரத்தின் வழியாக வராமல் வேறு வழியாக மாம்சத்தில் வரவேண்டியதாய் இருந்தது.... பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும், நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன். ஆதியிலே நீ அவருக்குள் இருந்திருக்க வேண்டும்.

இ. உலகம் அஸ்திபாரம் போடப்படுவதற்கு முன்பே அவருடைய பெயர் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் இருந்தது. பிறகு அதிலிருந்து அவர் வார்த்தையானார்.இந்த ஆவிக்குரிய சரீரத்தில் அவர் தோன்றவும், மறையவும் முடிந்தது. அதன் பிறகு அவர் மாம்சத்தில் வந்து, உயிர்த்தெழுந்து மகிமையின் சரீரத்தில் திரும்ப சென்றுவிட்டார். ஆனால் நீயோ, பாவத்தினால் சோதிக்கப் படுவதற்காக (ஆவிக்குரிய) சரீரத்தில் பிரவேசிக்காமல் வேறு வழியாக மாம்சத்தில் வந்திருக்கிறாய். அதற்குப் பிறகு இப்பூமிக்குரிய கூடாரம் அழிந்து போனாலும் நமக்கு வேறொரு கூடாரம் காத்துக் கொண்டிருக்கிறது. அந்த சரீரத்தை நாம் இன்னும் பெறவில்லை. அழியாத ஜீவனாகிய தேவனுடைய ஆவியை இந்த சரீரம் பெற்றுக்கொள்ளும் போது அது இந்தச் சரீரத்ததை தேவனுக்கு கீழ்படியப் பண்ணகிறது. அல்லேலூயா !

206. யார் இந்த மெல்கிசேதேக் என்ற செய்தியில் 69 மற்றும் 70வது பத்தியில் ஆவிக்குரிய சரீரத்தின் வழியாக, ஆவிக்குரிய சரீரத்தில், ஆவிக்குரிய சரீரம் என்று காணப்படும் இடங்களில் தியாபினி சரீரத்தில் என பொருள் கொள்ளவும். ஏனென்றால் அது ஆங்கிலத்தில் அவ்வண்ணமாகவே உள்ளது. பாருங்கள், நாம் பாவத்தினால் சோதிக்கப்படுவதற்காக தியாபனி சரீரத்தில் பிரவேசிக்காமல் வேறு வழியாக மாம்ச சரீரத்தில் வந்திருக்கிறோம். அவ்வாறாகவே சகோ. பிரன்காமும். ஆதலால் அவர் மாம்ச சரீரத்தின் வழியாக பிரவேசியாமல் முதலில் தியாபனி சரீரத்தில் பிரவேசித்து, பின் மாம்ச சரீரத்தில் வந்தார் என்பது தவறு. ஆனால் எலியாவோ மாம்ச சரீரத்தில் வந்து, யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் கொடுக்கப்படும் காலத்தில் தியாபனி சரீரத்தில் இருந்தான். ஆனால் சகோ. பிரன்காம் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்த பின் (24.12.1965) தன் மாம்ச சரீரத்தை கடந்து தியாபனி சரீரத்திற்கு சென்றார் என்பதே சரி. ஆதலால் யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தைக் கொடுக்க கி.பி. முதல் நூற்றாண்டில் சகோ. பிரன்காம் தியாபினி சரீரத்தில் இருந்திருக்க முடியவே முடியாது. அது சாத்தியமில்லாத ஒன்று.

207. தியாபினி சரீரம் குறித்து ஏழாம் சபைக்காலத் தூதனின் ஒரு சிறு விளக்கத்தையும் இங்கு உங்களுக்குத் தர விரும்புகிறேன். இதை நீங்கள் கே.ப. 117, 329-332 வரை தியானிக்கலாம்.

அ. ஒரு குழந்தை அதன் தாயின் கர்ப்பத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் போது அது அங்கு வைக்கப்பட்டவுடன்... பாருங்கள்? பாருங்கள், ஆனால் அது முதலில் ஆவியாயுள்ளது. அந்த ஆவி மாம்சத்தை தரித்துக் கொள்ளும் போது ஒரு சிறு ஜீவகிருமி மாம்சத்தைத் தரித்துக் கொள்ளும் போது தாயின் கர்ப்பத்திலிருந்து வெளியே வரும்போது... கர்ப்பத்தில் அது உதறுகின்ற, குலுக்குகின்ற சிறு தசைகளைக் கொண்டதாயுள்ளது. அது நமக்குத் தெரியும். அவை ஜீவ அணுக்கள், ஒரு குதிரை மயிரை நீங்கள் தண்ணீரில் போட்டால், அது மிதக்கி அசைந்து கொண்டிருக்கும். அதை நீங்கள் தொடும் போது அது குதிக்கும் அப்படித் தான் தாயின் வயிற்றிலுள்ள ஒரு குழந்தையும் உள்ளது.

ஆ. ஆனால் அது இந்த உலகத்தில் பிறந்து அதன் முதல் சுவாசத்தை சுவாசிக்கும் போது, அது ஜீவாத்துமாவாகிறது. பாருங்கள்? ஏனெனில் பூமிக்குரிய சரீரம் இவ்வுலகில் பிறந்தவுடனேயே, அதை ஏற்றுக் கொள்ள வானத்துக்குரிய ஒரு சரீரம், ஆவிக்குரிய சரீரம் ஒன்றுள்ளது. மாம்சத்துக்குரிய சரீரம் விழுந்தவுடனே, அதற்கு பரலோக கூடாரம் ஒன்று காத்திருக்கிறது. பூமிக்குரிய இந்த கூடாரம் அழிந்து போனால் அதற்காக பரலோக கூடாரம் ஒன்று காத்திருக்கிறது. ஒரு குழந்தை பூமிக்கு மாம்சத்தில் வந்தவுடனே, அதை ஏற்றுக் கொள்ள ஆவிக்குரிய சரீரம் ஒன்று காத்திருக்கிறது. இந்த ஆவிக்குரிய சரீரம்.... மாம்சத்துக்குரிய சரீரம் அழிந்து போனவுடனே, ஆவிக்குரிய சரீரம் ஒன்று மறுபுறத்தில் காத்திருக்கிறது. பாருங்கள்? அதை நாம் தியாபனி என்று அழைக்கிறோம். பாருங்கள் தியாபனி?

(ஒரு சகோதரன், நல்லது, அப்படியானால் இந்த சரீரம் உயிர்தெழும் வரைக்கும் அது ஒரு தற்காலிகமான சரீரமா? என்று கேட்கிறார் - ஆசி) ஆம் பாருங்கள்? ஆம். ஓ. ஆமாம் (உயிர்த்தெழுதல் வரைக்கும் அந்த நிலையில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருப்போமா? அது சரி. பாருங்கள்? பாருங்கள்?

இ. அது இன்னும் மனுபுத்திரருக்கு வெளிப்படவில்லை. நான் நினைக்கிறேன். அதை நான் கண்டேன் என்று எனக்குத் தெரியும். பாருங்கள்? ஆனால் அது என்னவிதமான சரீரம் என்று உணர முடிவதைப் போல அவர்களையும் என்னால் தொட்டு உணர முடிந்தது. இது ஒலி நாடாவில் பதிவு செய்யப்படுகிறது. நான் உலகத்தை விட்டுச் சென்று அநேக ஆண்டுகள் கழித்தும் இதை நீங்கள் போட்டுக் கேட்க வகையுண்டு. பாருங்கள்? ஆனால் அது என்னவாயிருப்பினும், அந்த ஜனங்களை நான் தழுவினேன். அவர்கள் கைகளைப் பிடித்தேன். நீங்கள் தத்ரூபமாயிருப்பது போல் அவர்களும் தத்ரூபமாயிருந்தனர். இருப்பினும் அது.... அவர்கள் புசிக்கவில்லை. குடிக்கவில்லை. அங்கு நேற்று என்றோ நாளை என்றோ இருக்கவில்லை. பாருங்கள். அது நித்தியம்.

ஈ. இப்பொழுது, அந்தக் கூடாரம்... அவர்கள் அந்த சரீரத்தில் புறப்பட்டு, பூமிக்குத் திரும்ப வருகின்றனர். அந்த விதமான சரீரத்தில் அவர்கள் அழியாமையைப் பெற்றிருந்தனர். பூமியின் மண்ணானது எப்படியோ அந்தத்

தியா்பனியாக ஒன்று கூடி, அவர்கள் மீண்டும் மானிடராக, ஏதேன் தோட்டத்தில் அவர்கள் புசித்ததைப் போல் புசிக்கின்றனர். பாருங்கள்? பூமிக்குரிய இந்த கூடாரம் அழிந்து போனாலும், நமக்காக ஒன்று ஏற்கனவே காத்திருக்கிறது.

208. அடுத்து யோவான் 24 மூப்பர்களில் ஒருவனாக தன் தியாபனி சரீரத்தைக் கண்டான் என்று கூற முடியாது. இங்கு இயேசு கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்படுத்துதல், பாகம் 2, பக்கம் 963 மற்றும் 964, பத்திகள் 141 முதல் 147 வரை தியானிக்க விரும்புகிறேன்.
அ. இன்னொரு காரியத்தையும் நான் உங்களுக்கு முன்பாக கொண்டு வர விரும்புகிறேன். இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்ட பிறகு யோ. 21:20. தவறாக அர்த்தம் கொண்டோர், இவ்வுபதேசத்தை அந்நாட்களில் ஆரம்பித்தார்கள். நாம் மற்ற விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில், இதைக் குறித்த விஷயத்தையும் நாம் தெளிவுபடுத்தி விடுவோம். யோ. 20:21ல் இயேசு தன் சீஷர்களை சந்தித்தார். அவர்களுக்கு நெருப்புத்தழலில் சுடப்பட்ட மீனையும், அப்பத்தையும் கொண்டு உணவளிக்கிறார். அவர்கள் கரைக்குச் செல்லுகையில், யோவான் அவரது மார்பில் சாய்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது இவனுக்கு என்ன சம்பவிக்கும் என்று பேதுரு கேட்கிறான். இயேசு யோவானை நேசித்தார். யோவான் மிகவும் அன்புள்ள ஒரு மனிதன். இவனைப் பற்றி என்ன? அவனுடைய நிலைமை என்னவாகும்? அவனது எதிர்காலம் என்ன? என்று கேட்டான்.
ஆ. இயேசு அவர்களிடம், நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன? என்று கேட்டார். (யோ. 21:20).
இ. சீஷர்கள் ஒரு தவறைச் செய்தார்கள். அவர் வருமளவும் அவன் உயிரோடு வாழப்போகிறான் என்று இயேசு கூறினதாக அவர்கள் கூறினார்கள்.
ஈ. ஆனால் இயேசு எந்தத் தவறையும் செய்யவில்லை. வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரத்தில் கிறிஸ்து தமது வார்த்தையைக் காத்துக் கொண்டார். அவர் யோவானை பரலோகத்திற்குக் கொண்டு வந்து, அவனுக்கு அனைத்தையும் முன் காணலாக காண்பித்தார். மகிமை? அவன் தானே வரப்போகிற காட்சிகளின் முன் காட்சியைக் கண்டான். அவன் தானே முழு சபைக்காலங்கள் நெடுகிலும் பூமியில் ஜீவிக்கிறவன் போல் இருந்து, அவை சம்பவிக்கிறதையெல்லாம், கர்த்தருடைய வகையையும், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதின் சம்பவங்களையும் முன் கூட்டியே பார்த்தான்.
உ. அவருடைய வாக்குத்தத்தம் எவ்வளவு பிழையற்றதாய் இருக்கிறது என்பதைப் பாருங்கள். யோவானைத் தவிர, யாக்கோபோ, ஏன் பவுலுங்கூட, இன்னும் மீதியுள்ளவர்கள் எவரும் அவைகளைக் காணவும், கூறவும் அனுமதிக்கப்படவில்லை. நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன? என்று அவர் கேட்டார்.
ஊ. அவர்கள் அதைச் சொன்னபடியினால், அவர் யோவானைத் தெரிந்து கொண்டு, அவனை உயரே எடுத்து, அவன் மரிப்பதற்கு முன்னதாக, எதிர்காலத்தில் சம்பவிக்கப் போகிறவைகளை அவனுக்குக் காண்பித்தார். ஏதோ அக்காலங்களில் அவன் வாழ்ந்ததுபோல் அவைகளைக் கண்டான். அது என்னவாயிருக்கும் என்பதை அவனுக்குக் காண்பித்தார். சகோதரன் பேட் அவர்களே, அது அற்புதமானதாக இல்லையா? ஓ. பாருங்கள். அவனை உயரே தூக்கியெடுத்தார். வெளி.4:2 அதை நிரூபிக்கிறது. அவனுக்கு நடந்தவைகளையும், நடப்பவைகளையும், நடக்கவிருப்பவைகளையும் காண்பித்தார். அவர் அவனுக்கு சபைக்காலங்களையும், யூதர்களுடைய வருகையையும், வாதைகள் ஊற்றுதலையும் எடுத்துக் கொள்ளப்படுதலையும், மீண்டும் உள்ள வருகையையும், ஆயிர வருட அரசாட்சியையும், அவரது இரட்சிக்கப்பட்டவர்களின் நித்திய வீட்டையும் காண்பித்தார். அவைகள் சம்பவிக்கிற காலத்தில் அவன் வாழந்தது போல இருந்தது. அவைகள் சம்பவிக்கக் கண்டான். அவனை உயரத் தூக்கியெடுத்து, அவர் எடுத்திருக்கிற படக்காட்சியை அவனுக்கு முன் கூட்டியே முன்காணலாக, ஒத்திகையாகக் காண்பித்தார். ஓ. என்னே!

209. வெளிப்படுத்தின விசேஷம் 4:2ல் அவன் எடுத்துக் கொள்ளப்பட்டான். அதில் அவரது வாக்குத்தத்தம் நிறைவேறியது. யோவான் தனது மரணத்திற்கு முன்பாகவே, மேலே எடுத்துக் கொள்ளப்பட்டு, இனி சம்பவிக்கப் போகிறவைகளை, அவைகள் நிகழப்போகும் காலத்தில் அவனும் உயிரோடிருந்து ஜீவித்துக் கண்டது போல் அவைகள் நிகழக் கண்டான். (முன் காணலாக என்றால் சகோ. பிரன்காம் அவர்கள் Rehearsal or Preview என்று உபயோகித்துள்ள ஆங்கில வார்த்தைக்கு இதுவே சரியான தமிழ்ப்பதமாக உள்ளது. அதாவது ஒரு திரைப்படத்தையோ, அல்லது ஒரு நாடகத்தையோ, யாவரும் காணும்படியாக காண்பிப்பதற்கு முன்பாக, அது முன்கூட்டியே ஒரு சிலர் மட்டும் பார்த்துக் கொள்வதற்காக முன் காணலாகக் காட்டப்படும். அல்லது ஒத்திகையாக நடத்திக் காண்பிக்கப்படும்-மொழி பெயர்ப்பாளர்). இவ்விதமாக யோவான் என்ன நடக்கவிருக்குமோ, பூமியில் அக்கால முதல் கர்த்தராகிய இயேசுவின் வருகை பரியந்தம் அப்படியே என்ன நடந்ததோ, நடக்கவிருக்குமோ அவைகளை ஒரு தரிசனத்தில் கண்டான். ஒரு தரிசனத்தில் அதை அவனுக்குக் காண்பித்தார்.

210. பாருங்கள், அன்று யோவான் ஆவிக்குள்ளானான், எடுத்துக்கொள்ளப்பட்டான். பூமியில் ஆதிகாலம் முதல் கர்த்தராகிய இயேசுவின் வருகைப் பரியந்தம் அப்படியே என்ன நடந்ததோ, நடக்கவிருக்குமோ அவைகளை ஒரு தரிசனத்தில் கண்டான். ஒரு தரிசனத்தில் அதை அவனுக்கு காண்பித்தார். அவனை உயரத் தூக்கி எடுத்து, அவர் எடுத்திருந்த படக்காட்சியை அவனுக்கு முன் கூட்டியே முன் காணலாக - ஒத்திகையாக காண்பித்தார். யோவான் இன்று பிரதியட்சமாக எதையும் காணவில்லை, அனைத்தையும் தரிசனத்திலே கண்டான். ஆதலால் யோவான் பிரதிச்சமாக தன் மாம்ச சரீரத்திலிருந்து 24 மூப்பர்களில் ஒருவனாகிய தன்னை தியாபினி சரீரத்தில் கண்டான் எனக் கூற முடியாது.

211. எனது கோவை சகோதர்கள் என் ஊழியத்தின் தற்போதைய கட்டம் என்ற செய்தியில் பத்தி 19 முதல் 26 வரை சகோ. பிரன்காம் தான் கண்ட ஒரு தரிசனத்தைக் கூறி, அவர் ஆறாம் பரிமாணத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாக கூறுகிறார். மேலும் அவர் மேலே எடுக்கப்பட்டு, திரும்பி கீழே பார்த்தபோது தன் உடலைக்

கீழே கண்டதாகக் கூறுகிறார். இதைக் கொண்டு தீர்க்கதரிசி இரு சரீரத்தில் ஒரே நேரத்தில் இருந்தார், அவர் ஆவிக்குரிய சரீரத்தில் இருந்துகொண்டு தன் மாம்ச சரீரத்ததைப் பார்த்தார் என்று கூறுகிறார்கள். இது எவ்வளவு முட்டாள்தனம் என்று பாருங்கள். இங்கோ சகோ. பிரன்காம் கண்டது ஒரு தரிசனம். (Vision) என்பதை இவர்கள் மறந்துவிட்டார்கள். தரிசனம் என்றால் என்ன என்று இவர்களால் கிரகிக்கமுடியில்லை. அதுதான் குழப்பம்.

212. தரிசனம் (Vision) என்றால் என்ன? ஒருவனுடைய ஐம்புலன்களும் தங்கள் தங்கள் பணியை செய்து கொண்டு இருக்கும் சமயம், ஒருவன் ஆவிக்குள்ளாகி, தன் கண்கள் முன் காணும் ஒரு படக்காட்சியே தரிசனம் ஆகும். பூமியில் ஒரு பகுதியில் நடந்ததை, நடப்பதை, நடக்க இருப்பதை ஒரு படக்காட்சியாக தேவன் தரிசனத்தில் ஒருவனுக்கு காண்பிக்கிறார். தேவனுடைய வார்த்தை தீர்க்கதரிசிகளுக்கு தரிசனத்தின் வாயிலாக உண்டாகிறது.

213. இங்கு சகோ. பிரன்காம் ஆவிக்குள்ளானர். ஒருவன் தரிசனம் காண ஆவிக்குள்ளாக வேண்டும். மாம்ச சிந்தை, உலகப் பிரகாரமான கல்வி அறிவு. தரிசனங்களை கிரகித்துக் கொள்ள முடியாது. இதுகுறித்து தீர்க்கதரிசி எடுத்துக் கொள்ளப்படுதல் என்ற செய்தியில் ஆங்கிலத்தில் இவ்வாறாக கூறுகிறார். You see where the carnal mind, where education and things can't catch the vision ? இதன் தமிழில் இவ்வாறாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உலகப்பிரகாரமான கல்வி அறிவு பெற்றவர்கள் இதன் நோக்கத்தை விளங்கிக் கொள்ள முடியாது. இதை ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல் செய்தியில் 42 வது பத்தியில் காணலாம். வில்லியம் பிரன்காம் குட் நியூஸ் சொஸைட்டி என்னதை புதியதாக மொழி பெயர்ப்பு செய்கிறார்கள். திருச்சி சகோ. ஜீ.எஸ். டேவிட் அடிக்கடி கூறுகிறபடி எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். புதிய மொழிபெயர்ப்பு என்று கூறி, பழைய மொழி பெயர்ப்பில் உள்ளதை அப்படியே எடுத்துக் போட்டுள்ளார்கள். புதிய மொழிபெயர்ப்பு என்று கூறி கர்த்தருடைய பணத்தை பாழாக்குகிறார்கள். பாஸ்டர் பி.எம்.ஏ. சாமியைப் போன்று தானே அவரது சகாக்களும் இருப்பார்கள். டபுள்யூ.பி.ஜி.என்.எஸ்-ல் ஏல் பெத்தேல் சபை ஆதிக்கம் தானே!

214. இங்கு சகோ. பிரன்காம் ஆவிக்குள்ளாகி மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார். கீழே தன் சரீரத்தைப் பார்க்கிறார். இது கீழே அவர் மாம்ச சரீரத்தில், மேலே தியாபனி சரீரத்தில் என கூற முடியாது. சகோ. பிரன்காம் கண்டது ஒரு தரிசனம். நேருக்கு நேர் தத்ருபமாக, பிரத்தியட்சமாக நடந்த ஒரு சம்பவம் அல்ல. மாறாக அது ஒரு காட்சி. அதை எனது கோவை சகோதரர்கள் என்று புரிந்து கொள்வார்களா? அவர்கள் ஆவிக்குரியவர்களாய் இருப்பார்களாயின் புரிந்துகொள்வார்கள். மற்றபடி புரிந்துக்கொள்ளமுடியாது.

215. இந்தத் தரிசனம் குறித்து நீங்கள் செய்தி புறக்கணிக்கப்பட்ட ராஜா, பக்கம் 30-38 வரை நாள் 15.5.1960 மற்றும் என் ஊழியத்தின் தற்போதைய கட்டம் பத்தி 19-26 வரை நாள் 8.9.1962. தியானியுங்கள். இங்கு சகோ. பிரன்காம் தான் இந்த தரிசனத்தில் ஆறாவது பரிமாணத்திற்கு அதாவது பதினாயிரம் கோடி மைல்கள் உயரத்திலுள்ள ஒரு சதுர இடத்திற்குச் சென்றதாகவும், தான் மாம்ச சரீரத்தில் இருந்தேனோ அல்லது சரீரத்திற்குப் புறம்பாக இருந்தேனோ அல்லது மறுரூபமான நிலையிலிருந்தேனோ அது தெரியாது என்கிறார். ஆனால் அது தான் வழக்கமாகக் காணும் தரிசனம்போல் இல்லை எனவும் கூறுகிறார். ஏனென்றால் அங்கும் பார்க்க முடிந்தது, இங்கும் பார்க்க முடிந்தது. திரும்பிப் பார்த்தபோது அங்கு கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தேன். அங்கு வாலிபப் பெண்கள் 18-20 வயது, அவர் மீது தங்கள் கரங்களைப் போட்டு, எங்கள் விலையேறப் பெற்ற சகோதரனே என்றார்கள். அங்கு பாலுணர்ச்சிக்கு இடமில்லை. இதுதான் பரிபூரண அன்பு. அது இல்லாமல் எதுவும் இங்கு வரமுடியாது என்கிறார். மேலும் இது பூமிக்குரிய ஐம்புலன்களையும் இழந்த நிலை, அந்தப் பார்வை பூமிக்குரிய கண்களால் காணும் பார்வையல்ல. அந்தப் பார்வை மேலானது. அது நமது மாம்ச புலன்கள் தொடர்பு கொள்வதைக் காட்டிலும் மிக அதிக தூரம் தொடர்பு கொள்ள வல்லது என்கிறார்.

216. இந்தக் காட்சிகள் அவர் ஆவிக்குரிய தரிசனத்தில் கண்டது. தரிசனத்தை விட்டு வெளியேறி, சுய நினைவிற்கு வந்தவுடன் தன் மனைவியைப் பார்த்து தேனே, உறக்கத்தினின்று எழுந்துவிட்டாயா என்று கேட்கிறார். ஆனால் அவரது மனைவி உறங்கிக் கொண்டிருந்தாள். பாருங்கள் அவர் பிரத்தியட்சமாக இந்தக் காட்சியைக் காணவில்லை. ஆதலால் அவர் இரு சரீரங்களில் ஒரே நேரத்தில் இருந்தார் எனக் கூறமுடியாது.

217. மேலும் இதுகுறித்து நீங்கள் ஐந்தாம் முத்திரை (புதிய பதிப்பு) 637 வது பக்கத்தில் பத்தி 346ல் இருந்து வாசிக்கலாம். இங்கு சகோ. பிரன்காம் தன்னுடைய தரிசனத்தில் அவருடைய ஆவி அவருடைய சரீரத்தைவிட்டுப் பிரிந்த நிலையில், சரீரமானது படுக்கையில் மரித்த நிலையில் கிடக்க, ஆவியில் அவர் ஒரு ஸ்தலத்திற்கு வந்ததாகக் கூறுகிறார். அது ஆறாவது பரிமாணம். அதாவது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், மறுபிறப்பு அடைந்து மரித்தவர்கள் வந்து சேரும் ஸ்தலம் என்பதை நாம் அறிவோம். இதைக் கொண்டு அவர் இரு சரீரத்தில் ஒரே வேளையில் இருந்தார் என கூறமுடியாது. பாருங்கள் சரீரம் மரித்த நிலையில், அவர் ஆவிக்குரிய சரீரத்தில் காணப்பட்டார். பாருங்கள் மாம்சசரீரம் மரித்த நிலையில் காணப்பட்டது என்று கூறுகிறார். இதிலிருந்து அவர் ஒரே நேரத்தில் இரு சரீரங்களில் இல்லை என்பதை நாம் உறுதி செய்துக் கொள்ளலாம்.

218. யோசேப்பு இனி நடக்கப்போவதைக் குறித்து சொப்பனம் கண்டான். அது பிற்காலத்தில் எகிப்து தேசத்தில் நடந்தது. அவனுடைய சகோதரர்களும், பெற்றோர்களும் அவனை வணங்கினார்கள். அதேபோன்று யோவான் நடந்த சம்பவங்களை, நடந்து கொண்டிருக்கிற சம்பவங்களை, நடக்கப் போகிற சம்பவங்களை தரிசனமாக, காட்சியாக கண்டான். அவன் தன்னை 24 மூப்பர்களில் ஒருவனாக தியாபனி சரீரத்தில் காணவில்லை.

219. பாருங்கள், யோவான் மணவாட்டி அல்ல. மறு ஜென்ம காலத்திலே மனுஷ குமாரன் தன்னுடைய மகிமையுள்ள சிங்காசனத்தில் தம்முடைய மணவாட்டியுடன் வீற்றிருக்கும் போது, அவரைப் பின்பற்றின

உங்களுக்கு என்னுடன் முரண்பாடு உண்டானால், அதைப்பற்றி நான் அக்கரைப்படவில்லை.அது எந்தவித ஒரு சிறு துளி வேறுபாட்டையும் உண்டாக்கி விடாது. ஆனால் பாருங்கள் நாம் [illegible]

ஜனங்களை நிர்வாணமாக்கினான். இக்காலத்திற்குரிய செய்தியில் வளர்ந்துவரும் உங்களை அன்று ஆனந்தவேல் நிர்வாணமாக்கினான். இன்று அவனுடைய கூட்டாளிகளாகிய பாஸ்டர் சாமியும், பாஸ்டர் சாமுவேலும் உங்களை நிர்வாணமாக்கியுள்ளார்கள். உங்களை வெட்கப்படும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை. கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே. மேய்ப்பர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கை மீதுதானே கண்ணோட்டமாய் இருக்கிறார்கள். வாருங்கள். உங்கள் நிர்வாணம் காணதபடிக்கு நீங்கள் உடுத்திக் கொள்வதற்கு வெண் வஸ்திரங்களை வாங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் பார்வையடையும்படிக்கு உங்கள் கண்களுக்கு கலிங்கம் போட்டுக் கொள்ளுங்கள்.

229. உலகில் இரண்டு வல்லமைகள் உண்டு. ஒன்று ஆவிக்குரிய வல்லமை. அது பரிசுத்த ஆவி. அது அந்த தூதன் திஸ்பியனாகிய எலியா என்கிறது. அடுத்தது உலகப் பிரகாரமான ஞானம். அது பிசாசு. அது அந்த தூதன் ஏழாம் சபைக்காலத் தூதனாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் என்கிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய தூதன் ஏழாம் சபைக்காலத் தூதன் சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் என்பது தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்திற்குரிய செய்திக்கு முற்றிலும் முரண்பாடானதாகியதால் அது வெளிப்பாடே அல்ல. சில காரியங்கள் சத்தியமாகத் தென்படும். ஆனால் அவைகள் சத்தியமாக இல்லாமல் இருக்கக் கூடும். அது உண்மையைப்போலத் தோன்றும். ஆனால் அது உண்மையல்ல.

230. உலகத் தோற்றத்திற்கு முன்பே மறைக்கப்பட்டிருந்த எல்லா இரகசியங்களுக்கும் ஒரு உண்மையான பதில் இருக்க வேண்டும் என்று விசுவாசிக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய தூதன் திஸ்பியனாகிய எலியா என்பது மறைவான மன்னா ( Hidden Manna )ஆகும். இது சபையின் தூதனுக்கு கொடுக்கப்படுகிறது. உங்கள் மேய்ப்பன் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட மேய்ப்பராயிருப்பாராகில், ஆடுகளைப் போஷிப்பதற்காக உள்ள மறைவான மன்னா எங்கிருக்கிறது என்பதை அவர் அறிந்திருப்பார். மற்றபடி அறிந்திருக்க முடியாது. உங்கள் மத்தியில் உள்ள உங்கள் மேய்ப்பர்கள் அதை அறிந்திருக்கவில்லை. ஆதலால்தான் அந்தத் தூதன் ஏழாம் சபைக் காலத் தூதன் என்று போதித்து வருகிறார்கள். மறைவான மன்னா குறித்த விளக்கம் நீங்கள் இயேசு கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்படுத்துதல், பக்கம் 464, பத்தி 312ஐ தியானிக்கலாம்.

231. இந்தச் செய்தித் தொகுப்பின் கணிணிப்பொறி தட்டச்சுப் பணி 2003ஆம் ஆண்டு, நவம்பர் மாதக் கடைசியில் திருவைகுண்டத்தில் ஆரம்பமானது. அன்று முதல் இன்று வரை இதில் பல தடைகள், இடையூறுகள், பிரச்சனைகள், போராட்டங்கள், செலவுகள் மற்றும் மனப்பாரங்கள் யாவற்றையும் பொறுமையுடன் மேற்கொண்டு 2004ல் ஏப்ரல் மூன்றாவது வாரத்தில், பூந்தமல்லி மலர் ஜெராக்ஸில் முடிவுபெற்று வெளிவர கர்த்தர் கிருபைச் செய்தார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. ஆமென். இது வெளிவர முழு ஒத்துழைப்புக் கொடுத்த மலர் ஜெராக்ஸ் உரிமையாளர் திரு எபிநேசர் அவர்களுக்கும், கணிணி தட்டச்சுப் பணியை முடித்துக் கொடுத்த திருமதி தனலட்சுமி அவர்களுக்கும், தட்டச்சுப் பணி நேரங்களில் அவ்வப்போது டீ, கூல்டிரிங்ஸ் வாங்கிக் கொடுத்து எங்களை உற்சாகப்படுத்திய நண்பர் திரு. இம்மானுவேல் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் அவர்களை உங்கள் ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுங்கள்.

232. நான் திருவசனத்தை, இக்காலத்திற்குரிய செய்தியைத் தவிர வேறெதையும் பிரசங்கிப்பதில்லை, செய்தித் தொகுப்பாக எழுதுவதுமில்லை. நான் முற்றிலுமாக அதில் நிலைத்திருக்கிறேன், நிலைத்திருப்பேன் என உறுதியும் கூறுகிறேன். அது எனக்கு அதிகத் தொல்லை விளைவித்து வருகிறது. இதினிமித்தமாக நான் அதிகத் துன்பங்களையும், போராட்டங்களையும் அனுபவித்து வருகிறேன். உங்கள் பாஸ்டர்கள் என்னை தங்கள் சபைகளில் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களுக்கு தசமபாகம் மற்றும் காணிக்கை வரவுகளுக்காக கொஞ்சம் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டியதிருக்கிறது. பாருங்கள், அது என்னால் முடியாது. ஆவிக்குரிய காரியங்களில் முற்றிலுமாக உங்கள் பாஸ்டர்களைச் சார்ந்து மோசம் போகாதீர்கள். இது கொடிதான வஞ்சிப்பின் காலம் என்பதை மறந்து விடாதீர்கள். எனது கடினமான இந்த நிலையினால் அநேக அருமையான நண்பர்கள் என்னை விட்டுப் பிரிந்து போனார்கள். ஆனாலும் என்னிடம் ஒவ்வொரு சபையிலும் உள்ள புத்தியுள்ள, கற்புள்ள கன்னிகைகள் என்னிடம் ஐக்கியம் வைத்துள்ளார்கள். அவர்களுக்காக நான் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

233. இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர் மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

ஜனவரி/ ஏப்ரல் 2004

கிறிஸ்துவின் அன்பில்
சகோ.காலேப் யோசுவா.

## அன்பின் விருந்து

நான் 2004 ஏப்ரல், மூன்று மற்றும் நான்காவது ஞாயிறை வாரமாகக் கொண்ட நாட்களில் சென்னையில் இல்லை. ஆதலால் ஏப்ரல் மாதம் அன்பின் விருந்து கிடையாது. கர்த்தருக்குச் சித்தமானால் மே மாதம் 16ம் தேதி மாலை நடைபெறும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, ஆவியில் ஏவப்பட்டவர்கள் எங்களோடு வந்து கலந்துக் கொள்ளும்படி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அழைக்கிறேன்.